ஜெர்மனியிலும் வன்னியன்
தொலைபேசி அட்டைகள்


'சொல்லும் மிநிடங்களை
சொன்னபடியே தருவது'
தொடர்புகட்டு: ரவி
01726312893 / 0622642067 Pub.

1.50 Euro ஜேர்மனி

# ஈழமுரசு

ஐரோப்பா


POOBALAM WEEKLY

2004 30 Juin - 06 Juillet 2004 20

சம்யுக்தா
Credics Immobiliers
வீடு வாங்க கடன் உதவி
அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
SAM-YUKTHA
Credits-Finances-Investssements
6, Rue Cail -75010 Paris
Tél/Fax: 01 40 34 03 24
(M°: La Chapelle/Gare du Nord)

# அமைதி முயற்சி தொடருமா ?

## அரசாங்கமே தீர்மானிக்க வேண்டும்: சு.ப.தமிழ்ச்செல்வன்



(28.06.2004)

சமாதான முயற்சிகளை தொடர்வது அரசாங்கத்தினதும், படைத்தரப்பினதும் கைகளிலேயே தங்கியிருப்பதாக தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தெரிவித்திருக்கின்றார். இலங்கை யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் துறுண்ட் பியுறா ஹொவ்டவுடனான இன்றைய சந்திப்பின்போதே தமிழ்ச்செல்வன் இதனை வலியுறுத்தியிருக்கின்றார்.

யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர் துறுண்ட் பியுறா ஹொவ்டவுக்கும் தழிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப .தமிழ்ச்செல்வனுக்கும் இடையிலான சந்திப்பு இன்று கிளிநொச்சியில் நடைபெற்றது. ►19

# பிரான்ஸ் – தமிழர் விளையாட்டு விழா முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் கலந்து கொண்டார்




## வன்முறையில் ஈடுபடும் தமிழ் குழுக்களை கட்டப்படுத்த ஐரோப்பிய நாடுகள் தீர்மானம்

(28.06.04)

அண்மைக்காலமாக இலண்டன், பிரான்ஸ் போன்ற நாடுகளில் 25 வயதிற்கு உட்பட்ட தமிழ் இளைஞர் குழுக்களின் வன்முறைச் செயல்கள் அதிகரித்துள்ளதாகவும் ஐரோப்பாவிலுள்ள ஏனைய சமூகத்தினருடன் ஒப்பிடும்போது இந்த வன்முறையின் வீதம் தமிழ் இளைஞர்களிடம் அதிகரித்து காணப்படுவதாகவும் ஐரோப்பிய நாடுகளின் காவற்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

►19

## ஐக்கிய தேசியக் கட்சி ஆடும் நாடகம் !



கருணா விவகாரத்தை அடுத்து ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பலத்த முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. அதேவேளை கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கா கருணா விவகாரத்திற்கு தமது கட்சியே காரணம் என்பதற்கான பெருமைகளையும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றியும் பிரதானமாக அரசாங்கத்தை மீண்டும் அமைப்பதற்கான ஏற்பாடுகள் குறித்தும் பௌத்த பீடாதிபதிகளுக்கு விளக்கி வருகின்றார். ►5

Orient Textilien & Schmuck

Koenigswall 16 (AM hbf),
44137 Dortmund-
Tel: 0231-162377
Fax:49-231-147836

தரம் உத்தரவாதம் அதிகதேர்வு மலிவோ மலிவு!!

* அனைத்து ஜவுளி வகைகள்
* கனம், தரம் மிக்க எவர்சில்வர் பாத்திரங்கள்
* அழகிய அன்பளிப்புப் பொருட்கள், அலங்கார ஆபரணங்கள், பரதநாட்டிய உடைகள்
* வாத்தியக் கருவிகள், கைக்கடிகாரங்கள்
* நவீன வண்ணங்களில் தரமான தங்காபரணங்கள், தாராள தேர்வில் 916/22K உத்தரவாதத்துடன் சிங்கப்பூர் விலையில் விற்பனையாகிறது.

உரிமையாளர்: ச.ஜெகதீஸ்




உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை - கப்டன் கஜன்

## Thushy Ballon GmbH

மணவறை விடியோ போட்டோ கேக் நிச்சேக் உணவு

முதன் முதலில் சுவிஸ் நாட்டில் பலூன் அலங்காரங்களை மேற்கொண்டு நன்மதிப்பை பெற்றவர்கள் 2004ம் ஆண்டில் பல புதிய வடிவங்களில் பலூன் அலங்காரங்களை செய்துதரக்காத்திருக்கின்றார்கள்





ஐரோப்பா முழுவதும் பலூன்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

S.Sutheskumar, Tel: 01 860 03 60 Natel: 079 705 08 00, J.Jeyakumar - 079 671 87 54



## LOTUS PHONE CARD



இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் நேரடி இணைப்பு

நம்பிக்கை உத்தரவாதம்

துல்லியமான ஒலிநயம்

சுவிஸில் 6 வருடங்களாக தொடர்ச்சியாக பாவனையிலுள்ள ஒரேயொரு தொலைபேசி அட்டை

லோட்டஸ் தொலைபேசி அட்டை

Telefon 079 664 00 14



## Solo movies GmbH

Video.Audio.Kommunikationstechnik

பிறந்தநாள் பூப்புனிதநீராட்டு திருமணம் அரங்கேற்றம் போன்ற மங்கள நிகழ்வுகளை எம்மிடம் நினைவாக்கிடவும்

Photo-Video-Decaration

Electronic உபகரணங்கள் Computer போன்றவற்றை மலிவாகப் பெற்றுக்கொள்ளவும்

Solomovies GmbH
Haupt str 18
4563 Gerlafingen(SO)
Switzerland
Tel.032/652 52 45 Fax.032/652 52 45
Handy.078/733 30 76
EMail.vasi solomovies.ch
www.solomovies.com



## Auto Theorie Kurs

## Car Driving Licence



கார் தியோறி படிக்க வேண்டுமா?
(ஓரளவு டொச்மொழி போதும்)

கார் ஓட லைசென்ஸ் வேண்டுமா?
(குறைந்த செலவுடன்)

BERN SWISS



2004 ம் ஆண்டுக்கான புதிய புத்தகம், புதிய வினாக்களுடன் புதிய வகுப்புக்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன

தொடர்புகளுக்கு:

றூபா சிவரூபன் 079 314 16 43



## விதுஜா ஏசியன் சொப்

## மாபெரும் மலிவு விற்பனை

**காலம்: 19.06.04 - 30.06.04**
**நேரம்: 10.00 - 18.30**
**இடம்: Waaghaus Passge -8**
**3011 Bern (1 Stock), 3008 Bern.**

- சிறுவர் சிறுமியர்களுக்கான இந்திய, இந்தோனேசிய நாட்டு உடுப்புக்கள்
- சோலி, சுரிதார், பஞ்சாபி
- பனாரஸ், கோலம், மைசூர் சில்க், சில்க் சாறிகள்

**அனைத்தும் 50 வீதக் கழிவில் கிடைக்கும்!**

- தொலைபேசி அட்டைகள் 23SFR
- பழைய புதிய வீடியோ CDகள் விற்பனைக்குண்டு.
- முதல் தர மிக்ஸி Preethi விலை – 99SFR மட்டுமே
- அழகு சாதனப்பொருட்களும் மற்றும் வீட்டு உபகரணப் பொருட்களும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: **VIDUJA ASIAN SHOP**
**JEWELLERY -TEXTILES**
**Waaghaus Passge -8, 3011 Bern (1 Stock), switzerland**

**Shop: 031 3113510** **Fax: 031 3113510**
**Res: 031 9928267** **Cell:079 2417163**

1 பவுண் நகையின் விலை – **145 SFR**

கூலி இல்லை – கல்லுக்கு, முத்துக்கு காசு இல்லை

sw-33



## சத்தி நகை மாடம் Sathy Jewellery

* மாற்றுக் குறையாத தங்க நகைகளுக்கு உத்தரவாதம்
* கல்லுக்கு விலையில்லை அத்துடன் கூலியோ சேதாரமோ அறவிடப்படமாட்டாது.
* வழமையான எமது உண்டியல் சேவை புதிய வடிவில் உங்கள் வீட்டிலிருந்தவாறே பணம் அனுப்பலாம்.
*சகல நாடுகளுக்குமான மலிவு விமானச் சீட்டுக்களை உங்கள் ஊரிலேயே பெற்றுக்கொள்ள வழிசெய்வோம்.



புதிய நகைச்சீட்டு
சுவிசில் முதல்முதலாக அறிமுகப்படுத்துகின்றோம்.

SW-70

SATHY JEWELLERY
**Elisabethenanlage 11, 4051 Basel BS**
**Tel: 061 383 86 86 / 079 669 42 07**



மாவீரர் வெற்றிக் கிண்ணத்துக்கான


## விளையாட்டுப் போட்டிகள்

**03.07.2004 சனி. 04.07.2004 ஞாயிறு இரு நாட்கள்**

Wankdorf மைதானம் 3014 Bern, காலை 08.00 மணி

வளர்ந்தோர் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி 03.07.2004

மென்பந்தாட்டம் 04.07.2004
இளம் தமிழர் உதைபந்தாட்டம்
கரப்பந்தாட்டம்





# JASIJANANTH TRAVELS AND TOURS GMBH

*A great way to fly world wide*

விமான பிரயாணச்சேவையின் விருட்சம் அதுவே உங்கள் தேடல் தெரிவின் முதல் மைல்கல். உறுதியான உங்கள் பயணத்திற்கு உறுதுணையாக இருப்பவர்கள்.

*Jasijananth Travels, The smart travellers choice*

எம்மிடம் விமான சீட்டுக்களை பதிவு செய்து கொள்பவர்களுக்கு விமான நிலையம் செல்வதற்கு வாகன வசதிகளுடன், சகலவிதமான வாகனங்களும் எம்மிடம் வாடகைக்குக் கிடைக்கும்

JASIJANANTH TRAVELS
FREILBURG STR -111 B
3008 BERN -CH

Fax: 031 381 0421
Nat: 079 600 8966
K.Kulenthy

www.Jasijananth Travels.com

உங்கள் பயணத்தை இலகுவாக்க, பணத்தை மீதப்படுத்த, பயணத்தை பாதுகாப்பானதாக்க, உத்தரவாதத்துடன் உங்கள் தேடலின் தெரிவு: **Jasijananth Travels**

உங்களின் ஆக்கபூர்வமான ஆதரவிற்கு எங்களின் இதயபூர்வமான நன்றிகள்.

# கொழும்பில் கருணா: சிறீலங்கா அரசியலில் பெரும் சிக்கல்



விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணா என்ற முரளீதரன் விவகாரம் சிறீலங்கா அரசியலில் பெரும் சிக்கலைத் தோற்றுவித்திருக்கிறது. கருணாவும் அவரது குழுவினரும் மட்டக்களப்பிலிருந்து தப்பிச் செல்வதற்கும் கொழும்பில் பாதுகாப்பாக தங்கியிருப்பதற்கும் சிறீலங்காவின் இரண்டு பிரதான கட்சிகளும் உதவியிருக்கின்றன என்ற தகவல்கள் வெளிவந்ததை அடுத்து, இரண்டு கட்சிகளுமே நெருக்கடிக்குள் சிக்கியுள்ளன.

கருணாவையும் அவரது குழுவினரையும் கொழும்புக்கு அழைத்துவந்த ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாகீர் மௌலாவை பதவி விலக செய்வித்ததன் மூலம் தமது கட்சிக்குத் தெரியாமல் நடந்த சம்பவம் இது என்று காட்டுவதற்கு ஐக்கிய தேசியக்கட்சி முனைந்துள்ளது. கருணாவும் அவரது சகாக்களும் கொழும்புக் கோட்டையில் அதி உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் உள்ள ஹில்ட்டன் தங்கும் விடுதியில் தங்கவைக்கப்பட்டதும், இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் படைதுறை உயர் அதிகாரிகளும் பின்னர் அவரை அழைத்துச் சென்று நுகெகொடைப் பகுதியில் தங்கவைத்ததும் அரசாங்கத்துக்குத் தெரியாமல் நடந்த சம்பவங்கள் என்று சிறீலங்காவின் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரா கூறியிருக்கிறார்.


கருணா விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிந்து சென்றதும், இராணுவத்திலுள்ள சில பிரிவினர் தங்கள் எண்ணத்தில் அவருக்கு உதவியாகச் செயற்பட்டிருக்கின்றார்கள். இராணுவ அதிகாரிகள் இதில் சம்பந்தப்பட்டிருக்கின்றார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், அரசாங்கம் இதில் அறவே சம்பந்தப்படவில்லை. கருணா விவகாரத்தில் அரசாங்கத்துக்கு மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ எந்தத் தொடர்பும் இல்லை என்று மங்கள சமரவீர தெரிவித்திருக்கிறார். அரசாங்கம் முன்னெடுக்கும் சமாதான முயற்சிகளைக் குழப்புவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொள்ளும் ஒரு சதி முயற்சியே இது என்றும் அவர் குற்றம் சாட்டியிருக்கிறார்.

முன்னாள் அமைச்சரான மிலிந்த மொரகொட கருணாவுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் வெளிநாடொன்றுக்குச் செல்வதற்கான விசாவை பெற்றுக் கொடுத்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை சிறீலங்காவின் பிரதி பாதுகாப்பு அமைச்சர் ரட்டணசிறீ விக்கிமநாயக்கா கருணாவுக்கு படையினர் பாதுகாப்பளிக்கின்றார்கள் என்று கூறப்படும் குற்றச்சாட்டு அபாண்டமானது என்ற கூறியிருக்கிறார். நாட்டைக் கூறுபோட நினைக்கும் வெளிநாட்டு சக்திகளின் வேலையே இது என்றும் அவர் கூறியுள்ளார்.

கருணாவுக்கு சிறீலங்கா படையினர் காட்டும் ஆதரவென்பது சமாதான முயற்சிகளை மேசமாகப் பாதித்துவிடும் என்றும் இதன் காரணமாக நாடு மீண்டும் யுத்தத்துக்கு செல்லக் கூடிய ஆபத்து எற்பட்டிருப்பதாகவும் கொழும்பிலுள்ள இராஜதந்திர வட்டாரங்கள் அரசாங்கத்தை எச்சரித்துள்ளன. கிழக்கு மாகாணத்தின் நிலைமைகள் அமைதிப் பேச்சுக்கள் தடைப்படுவதற்கு காரணியாக அமைய விடவேண்டாம் என சிறீலங்காவிற்கான அமெரிக்கத் தூதுவர் கோரியுள்ளார். நேரடிப் பேச்சுக்கள் முலமே சமாதானத்தை அடையமுடியும் என்ற உண்மையை அமெரிக்கா சிறீலங்காவின் ஆளும் அரசுக்கும், எதிர்க்கட்சிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தெளிவுபடுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கருணாவை கைது செய்து தம்மிடம் ஒப்படைக்கும்படி விடுதலைப் புலிகள் கோரும் பட்சத்தில் அரசாங்கம் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கும் என்றும் கருணாவை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்காது விட்டால் அமைதிப் பேச்சுவார்த்தைகான சாத்தியக் கூறுகள் அற்றுப்போய் விடும் என்றும் அரசதரப்பிலுள்ள ஒருசாரார் அஞ்சுவதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்துள்ளன.

## கருணாவின் விவகாரம்: ஐ.தே கவுக்கு நெருக்கடி அலிசாஹிர் மௌலானா பதவி விலகல்



விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட கருணா கொழும்புக்குச் செல்வதற்கு மட்டக்களப்பு மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர் மௌலானா உதவியதாக அவரே ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து எழுந்துள்ள சர்ச்சையையால் அவர் பதவிவிலகியுள்ளார். அதேசமயம், இந்த விடயம் குறித்து விசாரணையை ஆரம்பித்திருப்பதாக ஐ.தே.க. அறிவித்துள்ளது.

கருணா தனது பாடசாலைக் காலம் தொடக்கம் நண்பராக இருந்து வருபவரெனவும் அவரை மட்டக்களப்பிலிருந்து வெளியேறுவதற்கு தான் உதவியதாகவும் கடந்த 21ம் திகதி திங்கட்கிழமை ஊடகங்களுக்கு அலிசாஹிர் மௌலானா தெரிவித்திருந்தார். இது தொடர்பாக ஐ.தே.க.வின் தலைமைப்பீடம் அறிந்திருக்கவில்லையென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் அலுவலகம் கடந்த 23ம் திகதி புதன்கிழமை அறிவித்தது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் உட்பிரச்சினைகளை அவர்களே தீர்த்துக் கொள்ள வேண்டுமென்பதே ஐ.தே.க.வின் கொள்கையெனவும், வெளித்தலையீடு தேவையற்றதெனவும் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதேவேளை, கருணா விவகாரத்துடன் தாம் தொடர்புபட்டதன் காரணமாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியான நிலை குறித்து மன்னிப்புக் கோரியிருக்கிறார்.

கருணா விவகாரத்துடன் அலிசாஹிர் மௌலானா சம்பந்தப்பட்டிருப்பதாக ஏற்கனவே நோர்வே தரப்பிடமிருந்து ஐ.தே.க.விடம் சந்தேகம் கிளப்பப்பட்டபோது கட்சித் தலைமைப்பீடம் அவரை அழைத்து விசாரித்ததாகவும் அப்போது அப்படியெதுவும் கிடையாது என்று ஐ.தே.க. நோர்வேத் தரப்பின் சந்தேகத்தை மறுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

### அலிசாஹிர் மௌலானா சவுதி அரேபியாவுக்கு பயணம்

கருணாவை கொழும்புக்கு அழைத்து வந்தார் என்ற சர்ச்சையினையடுத்து தனது தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியினை இராஜினாமா செய்த அலிசாஹிர் மௌலானா சவுதி அரேபியாவுக்கு பயணமாகியுள்ளார். கடந்த 23ம் திகதி புதன்கிழமை இரவு இவர் சவுதி அரேபியாவுக்கு பயணமானதாக தெரிவிக்கப்படுகின்றது. மக்காவுக்கு செல்லும் அலிசாஹிர் மௌலானா அங்கிருந்து இலண்டன் வரவுள்ளதாகவும் தெரியவருகின்றது.


## டக்ளசின் அமைச்சர் பதவி பறிக்கப்படலாம்?

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட கருணாவுடன் தொடர்பு வைத்திருந்தார் என்ற காரணத்தால் டக்ளஸ் தேவானந்தா அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்படுவாரா என்ற கேள்வி தற்போது கொழும்பு அரசியல் வட்டாரங்களில் எழுந்துள்ளது. கருணாவிற்கு ஆதரவளித்தார் என்பதற்காக ஐ.தே.கட்சி அலிசாஹிர் மௌலானாவின் பதவியைப் பறித்தது. இதேவேளை, கருணாவுடன் தொடர்புகொண்டதை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒப்புக்கொண்டுள்ளார்.

அண்மைக் காலமாக கிழக்கில் இடம்பெற்று வந்த படுகொலைகள் கருணாவின் பேரிலேயே நடைபெற்றதால் அவற்றை கிழக்கில் படையினருடன் சேர்ந்து இயங்கும் ஈபிடிபியினரே செய்திருக்கலாம் என்ற சந்தேகம் இப்போது வலுவடைந்து வருகிறது. ஆட்சியை கொண்டு நடத்த முடியாத அளவுக்கு பாரிய நிதி நெருக்கடியில் சிக்கியிருக்கும் சிறீலங்கா அரசுக்கு ஜப்பான் டோக்கியோ மகாநாட்டில் வாக்குறுதியளிக் கப்பட்ட நிதியுதவியைப் பெறுவதற்கு சமாதானப் பேச்சைத் தொடரவேண்டும் என்று உதவி வழங்கும் நாடுகள் நிபந்தனை விதித்துள்ளன.

இந்நிலையில் தாங்கள் சமாதானப் பேச்சில் அக்கறை உள்ளவர்கள் என்று சர்வதேச சமூகத்துக்குக் காட்டுவதற்காக அமைச்சர் பதிவியிலிருந்து டக்ளஸ் தேவானந்தாவை விலக்கும் யோசனையை ஆளும் தரப்பின் சில பிரமுகர்கள் முன்வைத்துள்ளனர் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகின்றது.

"SHELVA" "ZUG"
Credit and Insurance
குறைந்த வட்டியில் அதிகூடிய
வங்கிக்கடன்
30% வீதத்தில் வாகனக் காப்புறுதி
சாரதிப் பத்திரம் இல்லாவிட்டாலும் 30 மட்டுமே...
வீட்டுக்காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
இலங்கையிலிருந்து சுவிஸ் வருபவர்களுக்கான மருத்துவக் காப்புறுதி
(Visa கிடைக்காவிட்டால் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்)
"SHELVA" "ZUG"
T.Thangarajah
Buonaserstr. 2
6343 Rotkreuz
Switzerland
Telefon
041 790 64 63
041 790 64 66
Fax
041 790 64 68
Natel
079 514 64 28



# விடுதலைப் புலிகள் பலவீனமாவதை எமது கட்சி ஒருபோதும் விரும்பவில்லை

## — ரவூப் ஹக்கீம்

(27.06.04)

விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துவதற்கு சில சக்திகள் பின்னணியிலிருந்து செயற்படுவதாக சந்தேகிக்கப்பட்டு வருவதாகவும், புலிகளைப் பலவீனப்படுத்த யாரும் துணை போகக் கூடாது எனவும் தெரிவித்திருக்கும் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் இன நெருக்கடிக்கு நிலைத்து நிற்கும் தீர்வுக்கான பேச்சுகளுக்கு புலிகள் பலமானதாக இருக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார். விடுதலைப் புலிகள் பலவீனப்படுத்தப்படுவதை முஸ்லிம் காங்கிரஸ் ஒருபோதும் விரும்பவில்லை எனக் கூறிய அவர் அதன் உள் விவகாரத்தில் எவரும் தலையிடக் கூடாது என்றும் தெரிவித்தார். கொழும்பில் கடந்த திங்களன்று கொழும்பு ஹோல்பேஸ் விடுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இதனைக் கூறியுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகள் பலமான நிலையில் உள்ள அதே வேளை, சிறீலங்கா அரசாங்கமும் பலமான நிலையில் இருந்தால் மட்டுமே சமாதான முயற்சிகளை ஆக்கபூர்வமான முறையில் முன்னெடுக்க முடியுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தும் முயற்சியில் அரசாங்கம் பின்னணியிலிருந்து இயங்குவதாக புலிகள் தரப்பில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டு வருகின்றது. கருணா அணியிலிருந்து வெளியேறிய பெண் உறுப்பினரின் தகவல்களும் இதனையே காண்பிக்கிறது. விடுதலைப் புலிகள் பலவீனப்படுவதை நாம் ஒருபோதும் விரும்பமாட்டோம். சமாதானப் பேச்சுகள் உறுதியுடன் முன்னெடுக்கப்பட வேண்டுமானால் அந்த அமைப்பு பலம் கொண்டதாகவே இருக்க வேண்டியது அவசியமானதாகும்.

அரசும், புலிகளும் பலம் கொண்டதாக இருந்தால் மட்டுமே சமாதானப் பேச்சுகளை உறுதியுடன் முன்னெடுக்க முடியும். அதேபோன்று முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளை வென்றெடுக்கக் கட்டாயமாக முஸ்லிம் காங்கிரசும், பலம் கொண்டதாக இருக்க வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். முஸ்லிம் காங்கிரஸைப் பலவீனப்படுத்தவும் சில சக்திகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அரசு தரப்பும் இதில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. அரசின் அமைச்சரான மங்கள சமரவீர, பிரதியமைச்சர் சிறீபதி சூரியாராச்சி ஆகியோர் முஸ்லிம் காங்கிரசிலிருந்து வெளியேற்றப்பட்ட சிலரை அணி திரட்டி எமது கட்சியைப் பலவீனப்படுத்த செயற்பட்டு வருகின்றனர் என்றும் கூறினார்.

## கருணாவுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய அதிகாரிகளைக் கோரியுள்ளது. இந்தவிடயம் குறித்து ஜாதிக ஹெல உறுமய கடந்த வெள்ளிக்கிழமை இரவு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

கருணா ஒரு காலத்தில் ஆயுதம் தாங்கி இராணுவத்தினருக்கு எதிராக போராடிய போதிலும் தற்போது ஆயுதங்களைக் கைவிட்டு ஜனநாயக வழிமுறையில் கிழக்கை ஆட்சி செய்ய அவர் விரும்புவதாக தெரிவித்த ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர், நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு இவ்விடயத்தில் கருணாவிற்கு அனைத்து உதவிகளும் வழங்கப்படவேண்டும் என அறிக்கையொன்றில் வலியுறுத்தியுள்ளார்.

## கருணா கொழும்புக்கு கொண்டுவரப்பட்டதற்கு அரசாங்கமே பொறுப்பென்கிறார் சந்திரசேகரன்

நாடாளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானா மூலம் கருணா குழுவினர் கொழும்பிற்குக் கொண்டுவரப்பட்டதற்கு அரசாங்கமே பதில் சொல்ல வேண்டுமென மலையக மக்கள் முன்னணித் தலைவரும் நடாராளுமன்ற உறுப்பினருமான சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியில் இல்லாத போது கருணா குழு இந்த நடாராளுமன்ற உறுப்பினரால் கொழும்பிற்கு கொண்டுவரப்பட்டது உண்மையாக இருப்பின் அது தற்போதைய அரசுக்கும் பாதுகாப்பு அமைச்சை தன்வசம் வைத்திருக்கும் அரசுத்தலைவருக்கும் தெரியாதிருக்க முடியாது.

ஒருபுறம் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்குவதற்காக சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதாக சர்வதேச சமூகத்திற்குக் கூறிக் கொண்டு மறுபுறம் தமிழர்களை பிளவுபடுத்தி பலவீனப்படுத்துகின்ற காரியத்தையே அரசும் அரசுத்தவைர் சந்திரிகா குமாரதுங்காவும் செய்து வருகின்றார்கள் என்றே நம்பத் தோன்றுகின்றது என்றும் அவர் கூறியுள்ளார்.

## புறக்கோட்டையில் மாடிக்கட்டட சுவர் இடிந்து வீழ்ந்து மூவர் பலி

(27.06.04)

கொழும்பு புறக்கோட்டை நான்காம் குறுக்குத் தெருவிலுள்ள வர்த்தக நிலையமொன்றின் கட்டடச் சுவர் கடந்த 24ம் திகதி வியாழக்கிழமை அதிகாலை திடீரென்று இடிந்து வீழ்ந்ததில் மூவர் உயிரிழந்ததுடன் 14 பேர் படுகாயமடைந்தனர். அதிகாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற இந்த அனர்த்தத்தில் கட்டட தொழிலாளர்கள் ஐந்து பேரும் அருகேயுள்ள வர்த்தக நிலையமொன்றில் தங்கியிருந்த ஊழியர்களுமே பாதிக்கப்பட்டுள்ளனர். நான்காம் குறுக்குத் தெருவிலுள்ள சைவக் கடையொன்றுக்கு அருகாமையிலுள்ள வர்த்தக நிலையமொன்றில் புதிதாகக் கட்டப்பட்டு வரும் கட்டிடத்தின் ஒரு பகுதியே அதிகாலை வேளையில் திடீரென்று அருகேயிருந்த வர்த்தக நிலையத்தின் மீது இடிந்து வீழ்ந்துள்ளது.



இதன் போதே புதிதாக கட்டப்பட்டு வரும் வர்த்தக நிலையத்தின் கட்டடத் தொழிலாளர்கள் ஐந்து பேரும் வர்த்தக நிலையத்தில் தங்கியிருந்த பன்னிரண்டு பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## கருணாவுக்கு விசா பெற்றுக்கொடுத்ததாக சமரவீர கூறியதை மறுக்கிறார் மிலிந்த மொறகொட

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் வெளிநாடு செல்வதற்கு விசா பெற்றுக் கொடுக்க உதவியதாக கப்பல், துறைமுக, விமானப் போக்குவரத்து அமைச்சரும், ஊடக அமைச்சருமான மங்கள சமரவீர தம்மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டை நாடாளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொட மறுத்துள்ளார். அமைச்சர் மங்கள சமரவீர தன்மீது சுமத்திய குற்றச்சாட்டு பொறுப்பற்றதும் அடிப்படையற்றதும் ஆகும் என்று மிலிந்த மொறகொட விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். கருணாவிற்கோ அவரின் குடும்பத்திற்கோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விசா பெற்றுக்கொடுக்கதான் எந்தவித உதவியையும் செய்யவில்லை என்று அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## வல்லரசுகள் கலந்து கொள்ளும் அமெரிக்க விமானப்படை ஒத்திகையில் சிறீலங்காவிற்கும் இடம் !

(27.06.04)

அமெரிக்காவின் அலாஸ்காவில் நடைபெறும் மிகப்பெரும் விமானப் படை ஒத்திகையில் சிறீலங்கா விமானப்படையும் கலந்து கொள்ளவுள்ளது. அமெரிக்கா, பிரிட்டன், ஜேர்மனி, பிரான்ஸ், ஜப்பான், கனடா, இந்தியா, சிங்கப்பூர் மற்றும் மொங்கோலியாவுடன் இந்த ஒத்திகையில் சிறீலங்காவும் கலந்து கொள்கிறது. இலங்கைக்கும் உபகண்டத்திற்கும் வெளியே நடைபெறும் விமானப் படை ஒத்திகையில் சிறீலங்கா விமானப்படைக்கும் இடமளிக்கப்பட்டது வரலாற்றில் இதுவே முதல் தடவையாகும்.

தங்களுக்கிடையே இராணுவ, கடற்படை மற்றும் விமானப்படை ஒத்துழைப்பை மிக நெருக்கமாக அதிகரிக்கும் பொருட்டே இந்த விமானப்படை ஒத்திகை நடைபெறுவதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த ஒத்திகையில் கலந்து கொள்ளும் இந்திய விமானப்படை, தனது போர் விமானங்கள் பலவற்றுடன் அலாஸ்கா செல்லும் அதேநேரம், இந்த ஒத்திகையில் எந்த அந்தஸ்தில் சிறீலங்கா விமானப் படை கலந்து கொள்கின்றதென்பது குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இந்த ஒத்திகை அடுத்த மாதம் 15ம் திகதி முதல் 30ம் திகதி வரை அலாஸ்காவின் எய்ல்சன் விமானப் படைத் தளத்தில் நடைபெறவுள்ளது.


உங்கள் பிள்ளைகளும் சுவிஸ் நாட்டில் உயர் கல்வி பெற்று நல்ல தரமான தொழில்களை பெறமுடியும்.

சுவிஸ் நாட்டின் பிரபல மொழியியல் ஆசிரியர் லிங்கம் அவர்களின் நெறியாள்கையில் பாடசாலை மாணவர்களுக்கான டொச்மொழிக்கல்வி ஆரம்பமாகின்றது.

ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 மணிமுதல் 12 மணிவரை
5ம், 6ம் வகுப்பு மாணவர்களுக்கு
இடம்: Breitenreinplatz -27, Bern

புதன்கிழமைகளில் மாலை 6 மணிமுதல் 8 மணி வரை
3ம், 4ம் வகுப்பு பாடசாலை மாணவர்களுக்கு
இடம்: Eigerplatz, Bern

தொடர்புகளுக்கு: Lingam master - 062 79741 64 / 079 334 47 33

ஈழமுரசு
POORALAM WEEKLY

# அம்பலமாகிய இரட்டைவேடம்

கருணா, சிறீலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் பாதுகாப்பில்தான் இருந்து வருகின்றார் என்பது தெளிவாகி விட்டது. கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக கருணாவுடன் கொழும்பில் தங்கியிருந்து, மீண்டும் விடுதலைப் புலிகளுடன் வந்து இணைந்து கொண்டுள்ள நான்கு பெண் போராளிகள் இந்த உண்மையையும், கருணாவை வைத்து விடுதலைப் புலிகளுக்குள் பிரச்சினையை ஏற்படுத்தி, தமிழ் மக்களின் பலத்தை அழிக்கும் சிறீலங்கா அரசின் மறைமுகத்திட்டங்களையும் உலகம் முழுவதற்கு அம்பலப் படுத்திவிட்டனர்.

கருணா விவகாரம் மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்பட்டபோது, இது தங்களது உள்விவகாரம் என்பதையும் இதில் எவருமே தலையிடத் தேவையில்லை என்பதையும் நோர்வே அனுசரணையாளர்களூடாக விடுதலைப் புலிகள் சிறீலங்காவின் இரு பிரதான கட்சிகளுக்கும் அறிவித்திருந்தனர். அத்துடன் கருணாவிற்கு ஆதரவு வழங்குவது சமாதான முன்னெடுப்புக்களைப் பாதிக்கும் என்பதையும் தெளிவு படுத்தியிருந்தனர்.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கையை அடுத்து, கருணா மட்டக்களப்பில் இருந்து தப்பியோடினார். இதன் பின்னர் பல படுகொலைகள் மட்டக்களப்பில் தொடர்ச்சியாக இடம்பெற்றன. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவி அங்கவீனப் போராளிகள் உட்பட ஏழு போராளிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் குமாரவேல் தம்பையா, ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசன் உட்பட பல பொதுமக்களும் இராணுவ பகுதிக்குள் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டனர். இக்கொலைகளைத் தாம் செய்யவில்லை, கருணாவின் ஆதரவுக் குழுவினரே செய்து வருவதாகச் சிறீலங்கா இராணுவமும் அதன் அரசும் கூறி வந்தது. ஆனால், ஆரம்பத்தில் இருந்தே இதனை மறுத்துவந்த விடுதலைப் புலிகள், சிறீலங்காப் புலனாய்வுப் பிரிவினரின் நடவடிக்கைகளே இவை என்பதைச் சர்வதேசத் தரப்பினருக்கும் சுட்டிக் காட்டியிருந்தனர்.

ஆனாலும், சிறீலங்கா அரசும், அதன் இராணுவமும் இறுதிவரை அதனை மறுத்தே வந்திருந்தன. இப்போது கருணா எங்கே இருக்கின்றார், எவருடைய பாதுகாப்பில் இருக்கின்றார் என்பது வெட்வெளிச்சாமாகிவிட்டது. இதனை மறுக்க முடியாத சிறீலங்கா அரச தரப்பு, இராணுவத்தின் மீதும் எதிர்க்கட்சியினர் மீதும் பழியைப் போட்டுத் தங்களைச் சமாதானப் பிரியர்களாகக் காட்டிக்கொள்ள முனைந்துள்ளது. சிறீலங்கா முப்படைகளின் தளபதியும் சனாதிபதியுமாகிய சந்திரிகாவிற்குத் தெரியாமல்தான் கருணாவை இராணுவத்தில் ஒருசிலர் பாதுகாத்ததாகவும், சனாதிபதி மாளிகைக்கு அருகில் பாதுகாப்பாகத் தங்கவைத்ததாகவும், டக்ளஸ் தேவானந்தாவுடன் தொடர்புகளை ஏற்படுத்தி கொடுத்திருந்ததாகவும் காதில் பூ சுற்ற முனைகின்றது. சிறீலங்கா அரசினது இந்த வேடிக்கையான பதில், அரசாங்கத்திற்குத் தெரியாமல் சிறீலங்கா இராணுவம் தனியாக முடிவுகளை எடுத்துச் செயற்படுகின்றதா என்ற கேள்வியையே ஏற்படுத்துகின்றது.

இதேவேளை, இதில் ஆச்சரியமான விடயம் என்னவென்றால், விடுதலைப் புலிகளுடன் சமாதான உடன்படிக்கையை மேற்கொண்டு, பேச்சுக்களை நடத்திக்கொண்டிருந்த ரணில் விக்கிரமசிங்கவின் பங்களிப்புதான். தன்னைச் சமாதானப் புறவாகக்காட்டி சந்திரிகா அம்பலப்பட்டது போன்று, இப்போது ரணில் விக்கிரமசிங்கவும் அம்பலப்பட்டுப்போய் நிற்கின்றார். ரணில் அரசின் இந்த நடவடிக்கையில் தமிழ் மக்களுக்கு எந்தவித அதிர்ச்சியும் இல்லை. ஏனெனில் காலங்காலமாகச் சிங்களப் பேரினவாதக் கட்சிகள் இரண்டுமே தமிழ் மக்களை எவ்வாறு ஏமாற்றலாம் என்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வருகின்றன. 94ம் ஆண்டு பேச்சுக்களின் மூலம் சந்திரிகாவின் உண்மை முகத்தை அடையாளம் கண்டுகொண்ட தமிழ் மக்கள், இப்போது கருணா விடயத்தில் ரணிலின் முகத்தையும் அடையாளம் கண்டுகொண்டுள்ளனர்.

கருணா என்ற ஆப்பை இழுக்கப்போய் சிங்களத் தரப்பு மாட்டிக்கொண்டது மட்டுமல்ல, சமாதான முயற்சிகளையும் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. இப்போது சிறீலங்கா அரசின் இரட்டைவேடம் அம்பலமாகியுள்ளது. இந்நிலையில், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக இழப்புக்களுக்கும், நெருக்கடிகளுக்கும் மத்தியில் விடுதலைப் புலிகள் இறுக்கமாகப் பேணிவரும் சமாதான முயற்சிகள் பாதிப்படைந்துவிடுமோ என்ற அச்சமும் கேள்வியுமே தமிழ் மக்கள் மனதில் எழுந்து நிற்கின்றது.

# ஐக்கிய தேசியக் கட்சி ஆடும் நாடகம்!


கருணா விவகாரத்தை அடுத்து ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பலத்த முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. அதேவேளை கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க, கருணா விவகாரத்திற்கு தமது கட்சியே காரணம் என்பதற்கான பெருமைகளையும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றியும் பிரதானமாக அரசாங்கத்தை மீண்டும் அமைப்பதற்கான ஏற்பாடுகள் குறித்தும் பௌத்த பீடாதிபதிகளுக்கு விளக்கி வருகின்றார். மல்வத்த பீடாதிபதி சிறீ சுமங்கல தேரர், அஸ்கிரிய பீடாதிபதி உத்தரகித்த தேரர் ஆகியோரை ரணில் விக்கிரமசிங்க சந்தித்து கருணா விவகாரம் தொடர்பாக பேசி வருகின்றார். தமது ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தொடர்ந்து பதவியிலிருந்திருக்குமானால் கருணா விவகாரத்தை முறையாக பயன்படுத்தி விடுதலைப் புலிகளின் இராணுவப் பலத்தையும் அரசியல்பலத்தையும் வெகுவாக குறைத்திருக்க முடியும் என்றும் சுமங்கல தேரரிடம் ரணில் கூறியிருக்கின்றார். அதேவேளை இரண்டு பிரதான தேசியக்கட்சிகளும் தமது அரசியல் முரண்பாடுகளுக்கு அப்பால் கருணா விவகாரத்தை சிறீலங்காவின் தேசிய நலனுக்குச் சாதகமாகப் பயன்படுத்தத் தவறிவிட்டதாக புத்தரகித்த தேரர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தமது அதிருப்தியை தெரிவித்திருக்கின்றார். இதேவேளை ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் எல்லாவல மேதானந்த தேரரை சந்தித்த ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளுக்கு தாம் சலுகை வழங்கவில்லை என்பதை கருணா விவகாரத்தை வைத்தாவது புரிந்துகொள்ளுங்கள் என கூறியிருக்கின்றார். அத்துடன் தமது கட்சிக்கு ஆதரவு வழங்கி மீண்டும் அரசாங்கம் அமைப்பதற்கு ஆதரவு வழங்கவேண்டும் என்றும் கேட்டிருக்கின்றார்.

இவ்வாறு ரணில் விக்கிரமசிங்க தமது கட்சி நடவடிக்கைகளையும் அதனைச் சாதகமாகப்பயன்படுத்தி மீண்டும் அரசாங்கம் அமைப்பதற்கான ஆதரவுகளையும் ஒரு புறம் திரட்டிக்கொண்டிருக்க, மறுபுறத்தில் கட்சிக்குள்ளேயே அவருக்கு எதிரான எதிர்ப்பிரச்சாரங்கள் எழ ஆரம்பித்துள்ளன. கருணா விவகாரத்தை சரியான முறையில் ரணில் விக்கிரமசிங்கா பயன்படுத்தவில்லையெனவும் ஆகவே கட்சித்தலைமையை அவர் இராஜினாமாச் செய்யவேண்டும் என்றும் சிரேஷ்ட உறுப்பினர்கள் அழுத்தம் கொடுக்கின்றனர். கட்சியின் பிரதித்தலைவரும் கடும்போக்காளருமான கரு ஜெயசூரியாவுடன் ரணிலைப் பதவி இறக்குவது தொடர்பாக பேசி வருகின்றனர். கட்சியின் செயலாளர் மலிக் சமரவீர இந்த விடயத்தை தீவிரமாக முன்னெடுத்து வருகின்றார். கருணா விவகாரம் பிசுபிசுத்துப் போனமையினால் ஐக்கிய தேசியக்கட்சியின் தனித்துவத்திற்கும் எதிர்கால அரசியல் செயற்பாடுகளுக்கும் அது ஆபத்தாக அமைந்துவிடும் என்ற அபிப்பிராயம் கட்சியின் உறுப்பினர்களிடையே நிலவுகின்றது. அதேவேளை பலமான விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குள் முரண்பாடுகளை தோற்றுவித்தமையினால், சிறீலங்காவின் சிங்கள தேசியத்திற்கு சாதகமான நிலையை ஐக்கிய தேசியக்கட்சியே தோற்றுவித்தது என மாகாணசபை வேட்பாளர்கள் தேர்தல் பிரசாரங்களில் தெரிவித்து வருகின்றனர். தமது கட்சி தலைமையிலான கடந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் புலிகளுக்கு சலுகை வழங்கியது என்று பிரசாரம் செய்தே ஐக்கிய மக்கள் முன்னணி அரசாங்கம் வெற்றி பெற்றது. தற்போது அதேபோன்ற பிரச்சாரத்தை ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொள்ள வேண்டும் என கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்கா கண்டியில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசியிருக்கின்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உயர்மட்ட உறுப்பினர்கள் கருணா விவகாரத்திற்கு தாங்களே பொறுப்பு என்று இன்னமும் பகிரங்கமான முறையில் சிங்கள மக்கள் மத்தியில் உத்தியோகபூர்வமாக பிரச்சாரம் செய்ய ஆரம்பிக்கவில்லை. ஆனாலும் அவ்வப்போது சிங்கள கிராமப்புறங்களில் இடம்பெறுகின்ற கூட்டங்கள் மற்றும் பௌத்த மகாசங்கப் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்து மறைமுகமாகப் பேசி வருகின்றனர். முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க கொழும்பில் நடந்த வைபவம் ஒன்றில் ஜே.வி.பி. உறுப்பினர் விமல் வீரவன்சவைச் சந்தித்தபோது, புலிகளுக்குள் நெருக்கடியை ஏற்படுத்திய ஐக்கிய தேசியக் கட்சியை இனியாவது பாராட்டுங்களேன் என்று நகைச்சுவையாகக் கூறியிருக்கின்றார். அடுத்த பொதுத் தேர்தல் பிரச்சாரத்திற்கு எமக்கு நல்ல துரும்பு கிடைத்திருக்கின்றது என்று ரவி கருணாநாயக்க கூற, அதற்கு விமல் வீரவன்ச, கருணாவை நீங்கள் சரியாகப் பயன்படுத்தவில்லையே என நகைச்சுவையாகக் கிண்டல் பண்ணினார். இவ்வாறு கருணா என்ற தனிநபர் செயற்பாட்டினால் சிறீலங்காவின் தென்பகுதி அரசியல் கட்சிகள் ஒருவருக்கொருவர் மகிழ்ச்சி தெரிவித்து சாதகமாக பயன்படுத்த முற்படும் அதேவேளை, அது வெற்றியளிக்கவில்லையே என்ற கவலையையும் ஒருவருக்கொருவர் வெளிக்காட்டி வருகின்றனர். அரசியல் ரீதியாகவும் கொள்கை ரீதியாகவும் வேறுபட்டிருந்தாலும், புலிகளுக்குள் நெருக்கடியை தோற்றுவித்து அதனைத் தமிழ்த்தேசிய முரண்பாடாக சித்தரிப்பதில் சிறீலங்கா அரசியல் கட்சிகள் ஒன்றுக்கொன்று சளைத்தவையல்ல. ஆனால் அவர்கள் ஒன்றை மட்டும் உணரவில்லை. அவர்கள் தோற்றுவிக்கும் நெருக்கடிகள் எல்லாம் புலிகளுக்குள் பலமான கட்டமைப்பையும் தமிழ்த்தேசிய எழுச்சியையும் ஒற்றுமையையும் மேலும் விஸ்தரிக்கின்றது என்பதை அவர்கள் உணர மறுப்பது காலத்தின் தவறு.

கருணா விவகாரத்திற்கு கடந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம்தான் காரணம் என ஏற்கனவே புலிகளின் புலனாய்வுத் துறைக்குத் தெரிந்ததுதான். ஆனால் நிலாவினி மீண்டும் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தமையினால்தான் ஐக்கிய தேசியக்கட்சியின் நேரடியான திருவிளையாடல் தென்பகுதிக்குத் தெரிய வந்தது. அதன்பின்னர் அதனை மூடிமறைக்க முடியாத நிலையில் தமக்குச் சாதகமான பிரச்சாரங்களில் விழுந்தவன் மீசையில் மண் ஒட்டவில்லை என்பது போல் ஐக்கிய தேசியக்கட்சி தற்போது நாடகமாடுகின்றது.

– நகுலன்



# யுத்தம் மூலம் சமாதானம்

## 21ம் நூற்றாண்டுக்கு சாத்தியமற்ற விடயம்

- பிரட்மன் வீரக்கோன் -

யுத்தத்தின் மூலம் சமாதானத்தை காண்பது 21ம் நூற்றாண்டில் சாத்தியமற்ற விடயம். செச்னியாவிலிருந்து பொஸ்னியா வரை, பலஸ்தீனத்திலிருந்து ஈராக் வரை, சர்வதேச ரீதியாக உறுதிப்படுத்தப்பட்ட `பாடம்' இதுவென விபரித்த சிறீலங்காவின் மூத்த சிவில் நிர்வாக சேவை அதிகாரிகளில் ஒருவரும் முன்னாள் பிரதமரின் செயலாளருமான பிரட்மன் வீரக்கோன், இந்தக் காரணங்களை எம்மில் அநேகமானோர் தெரிந்திருக்கின்ற போதிலும் இதனை ஆராய்வதற்கு எமக்கு போதிய காலம் இருக்கவில்லை என்று தெரிவித்தார். கடந்த 21ம் திகதி திங்கள்கிழமை மாலை ஆறு மணிக்கு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் டட்லி சேனநாயக்க நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நினைவுப் பேருரையின் போது, 1950களில் இருந்து இன்று வரையான இலங்கையின் சமாதான முயற்சிகள் என்ற தலைப்பில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தங்கள் மீதான அதிகரித்த அழுத்தத்தின் காரணமாக, அரசாங்கங்களுக்கு பேச்சுவார்த்தை மூலம் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதிலும் பார்க்க இலகுவான தெரிவாக யுத்தம் இருந்து வருவதை இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு முயற்சிகளிலிருந்து அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது என்றும் அவர் கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது, தெற்கில் எந்த அளவிற்கு கலந்துரையாடல்கள், ஆலோசனைகள் நடத்தப்பட்டாலும் இறுதி முடிவினை அரசாங்கத்தின் தலைவர் தான் எடுக்க வேண்டியுள்ளது. இவ்விடயம், மறைமுகமாக, ஆயிரக்கணக்கானோரின் உயிருடன் தொடர்புபட்ட விடயம் மட்டுமன்றி பெரும்பாலும் தலைமைத்துவத்தின் வாழ்வா சாவா என்பதுடனும் தொடர்புற்றுள்ளது. எமது வரலாற்றைப் பார்த்தால் சமாதான முயற்சிகளின் முக்கிய பாத்திரம் மரணத்தை அல்லது படுகாயத்தை அடைந்திருப்பதை அவதானிக்கலாம். அப்பொழுதும் இலங்கையின் பிளவுபட்ட அரசியலின் ஆதரவை சமாதான முயற்சிகளுக்கு பெற்றுக் கொள்வதென்பது சாத்தியமாக இருந்ததில்லை. போட்டித்தன்மையுள்ள அரசியல் அமைப்பில் ஆளும் கட்சி எடுக்கும் முயற்சிகளை பிரதான எதிர்க்கட்சி எதிர்த்து வந்துள்ளதுடன் தேசியவாதக் கருத்துள்ள சிவில் சமூக அமைப்புகள், சமூகத்தில் முக்கியத்துவம் வாய்ந்த தனிமனிதர்கள் ஊடகத்தின் சில பிரிவுகள் மற்றும் வெளி அமைப்புகளின், துணையுடன் அரசாங்கத்தின் முயற்சிகளை குலைக்கும் சகல சாத்தியமான நடவடிக்கைகளையும் எடுத்து வந்துள்ளது.

அரசின் தென்பகுதி அரசியல் எதிராளிகள் வழமையாக சமாதான முயற்சிகளை தனி நாட்டிற்கான முதற்படி பயங்கரவாதத்திற்கு அதிக விட்டுக்கொடுப்பை அளித்தல் என்றே முன்னிலைப்படுத்தி வந்துள்ளன. அண்மையில் மனித உரிமை விடயமும் இத்துடன் சேர்ந்துள்ளது. இந்தச் சகல விடயங்களும் அரசாங்கத்தின் கொள்கைகளுக்கும் தந்திரோபாயங்களுக்கும் எதிரான பரவலான அரசியல் எதிர்ப்பை ஏற்படுத்தும் பாரிய சக்தியைக் கொண்டவையாகும். அரசாங்கத்தினுள் ஏற்படும் உடைவுகளும் எதிர்ப்புகளும் சமாதான முயற்சிகளை பாதித்து வந்துள்ளன. சனாதிபதியின் இடைக்கால நிர்வாகம் தொடர்பான முடிவிற்கு ஜே.வி.பி. எதிர்ப்புத் தெரிவித்து வருவது அண்மைய உதாரணமாகும்.

பாதுகாப்பு ஆய்வாளர்களினதும் அரசியல் கருத்தாளர்களினதும் புலிகள், யுத்தத்திற்கு தயாராகின்றார்கள், முகாம்கள் அமைக்கின்றார்கள், கப்பல்களில் ஆயுதங்கள் கொண்டு வருகின்றார்கள் என்பன போன்ற கருத்துகள் சமாதான முயற்சியை பாதிப்பவையாகும். தற்போதைய சமாதான முயற்சிகளின் போது, உயர் அதிகார வட்டாரங்களினால் 11 ஆயுதக் கப்பல்கள் வந்ததாக தெரிவிக்கப்பட்டது. இது பற்றிய விபரங்கள் எப்பொழுதும் வெளியிடப்படுவதில்லை. நாங்கள் பெரும்பான்மையினர், காலம் பிந்துவதற்கு முன் அவற்றை அழிக்க வேண்டும் என்ற போக்கே அவர்களில் காணப்படுகின்றது.

ஆயினும் சமாதான முயற்சிகளைத் தொடர சில முக்கிய காரணிகள் நிர்ப்பந்திக்கின்றன. இலகுவான தெளிவான யுத்தம் பூகோளமயமான, ஒன்றில் ஒன்று தங்கியுள்ள, தொழில்நுட்பத்தில் முன்னேறிய 21ம் நூற்றாண்டில் விரும்பப்படும் ஒன்றல்ல. இது எவற்றையும் தீர்ப்பதில்லை என்பதுடன் நீண்டகாலத்தில் பிரச்சினையை தீர்ப்பதற்கு கடினமானதாக மேலும், சிக்கலாக்கி விடுகின்றது. அரசு இறுதியாக சில யதார்த்தங்களை உணர்ந்து கொள்ள வேண்டியுள்ளது. இராணுவ ரீதியான எதிர்தரப்பின் பலம், அரசியல் ரீதியாக, புலிகளின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற வெளிப்பாடு மற்றும் மக்கள் ஆதரவு, புலம் பெயர்ந்த தமிழர்களின் செல்வாக்கு, அரசாங்கங்களினால் ஆரம்பிக்கப்பட்ட போர் குறித்த மனித உரிமை கவலைகள், சர்வதேச சமூகத்தின் நிதியுதவி, உள்ளூர் பொருளாதாரத்தின் தேவை, போர் தெற்கின் பொருளாதாரத்தில் ஏற்படுத்திய தாக்கம் என்பனவே அவையாகும்.

# ‘இலங்கை வரலாற்றைத் திருத்தி எழுத வேண்டும்’

## சிங்களப் பேராசிரியர் சுசரித ஹம்லத்

(27.06.04)


இனவாதம் முடிவுக்குக்கொண்டு வரப்படவேண்டுமானால் இலங்கை வரலாறு மீண்டும் ஒரு தடவை



திருத்தி எழுதப்படவேண்டும். இவ்வாறு தெரிவித்தார் சிங்களப் பேராசிரியர் சுசரித ஹம்லத். வவுனியாவில் கடந்த 20ம் திகதி ஞாயிறன்று நடைபெற்ற தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பான இரு சிங்கள நூல்களின் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் கூறுகையில், இலங்கை வரலாற்றில் நீண்டகாலமாகத் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் பகை இருந்து வருவதாகக் காட்டப்பட்டுள்ளமையானது முற்றிலும் தவறானதொன்றாகும். அத்துடன், வரலாற்றில் பல உண்மைகள் மறைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, சிங்கள மொழியின் வளர்ச்சிக்குத் தமிழ் மொழியே காரணமாக இருந்தமையை இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும்.

மேலும் மொழி ஆராய்ச்சி, தொல்பொருளாய்வு போன்றவற்றிலிருந்து எடுக்கப்பட்ட உண்மைகள் திரிபுபடுத்தப்பட்டுள்ளன. இந்த ஆய்வுகள் ஆங்கில மொழியில் காணப்படுவதால் தமிழர்களும், சிங்களவர்களும் இதன் உண்மைத் தன்மையினை விளங்கிக் கொள்ள முடியாமல் உள்ளது என்பதே உண்மை. எனவே, இந்த நாட்டின் வரலாற்றை மீண்டும் எழுதவேண்டும். அப்போதுதான் இனப்பகையை மாற்றமுடியும் என்றார்.



விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் தமது உரையில், ஒரு நீண்ட போராட்டத்தின் பின்னர் இன்று தமிழர்களும், சிங்களவர்களும் ஒன்றிணைந்து ஒரு நிகழ்ச்சியை நடத்துகின்றார்கள் என்றால் இது வரலாற்று நிகழ்வு என்றே கூறவேண்டும். இருவேறு துருவங்களாக இருந்தவர்கள் இன்று ஒன்று சேர்ந்துள்ளனர். இது நிலைத்து நிற்கவேண்டும். நாங்கள் சிங்கள மக்களுக்கு விரோதமானவர்கள் அல்லர். சிங்கள மக்களின் நிலத்தைச் சூறையாடுபவர்களும் அல்லர். எமது உரிமைக்காக நாம் போராடுகிறோம் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். விடுதலைப் புலிகளால் இடைக்காலத் தன்னாட்சி தொடர்பாக முன்வரைபு தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. எனினும், அதைத் தருவதற்குக் கூட அதிகாரம் இல்லாத சனாதிபதி இறுதித்தீர்வைப் பற்றிப் பேச வேண்டும் என்று கூறுகிறார். நேரத்திற்கு நேரம் அவர் ஒவ்வொரு கதை சொல்லுகிறார். நாங்கள் நேர்மையாகப் பேசத் தயாராக உள்ளோம். அதற்கு அரசு தயாரா?

கருணாவுக்கு அடைக்கலம் கொடுத்த அரசோடும் பேசுவதற்குத் தயாராக உள்ளோம். தமிழர்களின் பொறுமையினை இனியும் சோதிக்க வேண்டாம். சந்திரிகா முன்னர் குமாரதுங்கவுடன் வந்து எம்மைச் சந்தித்தார். அந்த நல்ல மனிதனுக்காக மீண்டும், மீண்டும் எமது நல்லெண்ணத்தைக் காட்டி வருகிறோம். நாங்கள் எமது இடத்தில் சந்தோசமாக வாழ்ந்தால்தான் நீங்கள் உங்கள் இடத்தில் சந்தோசமாக வாழமுடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம் எனத் தனது உரையில் தெரிவித்தார்.

NIGHT TRAVEL நைற் ட்ரவல்ஸ்
உங்கள் விமானப் பயணத் தேவைகளை சிறந்த தரத்துடன் இலகுவாக ஆக்கிக்கொள்ள எங்களை நாடுங்கள். தரமான விலை, சிறந்த சேவை, நிறைந்த பயன் போன்றவற்றோடு இரவுநேர ஆசனப் பதிவுகளை 21.00 மணி தொடக்கம் 01.00 மணிவரை வாரத்தில் 7 நாட்களும் தொலைபேசியில் செய்து கொள்ளலாம்.
எங்கள் ஆரம்பத்தை முன்னிட்டு எயர் லங்கா விமானத்தில் கொழும்பு சென்றுவர 970 பிராங்குகள் மட்டுமே
தொடர்புகளுக்கு: 031-302 53 37, 079 - 546 45 20 e-mail:nighttravel@hispeed.ch

# சிங்கப்பூர்த் தலைமை அமைச்சரின் கொழும்பு வருகை

சிறீலங்காவின் பொருளாதாரத்தை எப்படியாவது சீர்படுத்திவிட வேண்டும் என்பதில் சனாதிபதி சந்திரிக்கா தீவிரமாக ஈடுபட்டு வருகின்றார். தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு லண்டன் சென்ற சனாதிபதி அங்கும் முதலீட்டாளர்களைச் சந்தித்து சிறீலங் காவில் முதலிட வேண்டிய அவசியம் பற்றியும் அதற்கான வசதி வாய்ப்புக்கள் குறித்தும் சனாதிபதி விளக்கிக் கூறியி ருந்தார். சிறீலங்காவில் முதலீடு செய்யும் முதலீட்டாளர்க ளுக்குப் பாதுகாப்பையும் வசதிவாய்ப்புக்களையும் மற்றும் சலுகைகளையும் வழங்குவதற்குச் சிங்கப்பூர் ஏற்கனவே தயாராகியிருந்தது. அது தொடர்பாகச் சனாதிபதி சந்திரிக்கா வுடனும் விரிவான பேச்சுக்கள் இடம்பெற்று உடன்படிக்கை களும் கைச்சாத்திடப்பட்டிருந்தன. அவை தொடர்பான சகல விபரங்களையும் சனாதிபதி லண்டனில் சந்தித்த வெளி

## சமாதான முயற்சியில் அவநம்பிக்கை

நாட்டு முதலீட்டாளர்களிடம் கூறியிருந்தார். சிறீலங்காவின் வெளியுறவு அமைச்சும் அது குறித்த பிரச்சாரங்களை ஐரோப்பிய நாடுகளில் மேற்கொண்டு வந்தது. வர்த்தக நோக்கங்களை மையமாகக் கொண்டே சிங்கப்பூர்ப் பிரதமர் கோ சொங்டொங் சிறீலங்காவிற்கு விஜயம் ஒன்றையும் மேற்கொண்டிருந்தார். சனாதிபதி லண்டனுக்குப் புறப்படுவ தற்கு முன்னரே உத்தியோகபூர்வ அழைப்பு சிங்கப்பூர் சனாதிபதிக்கு விடுக்கப்பட்டிருந்தது.

அந்த அழைப்பை ஏற்று சிங்கப்பூர்ப் பிரதமர் கடந்த வாரம் சிறீலங்காவிற்கு விஜயம் செய்திருந்தார். அரசியல் ரீதியாக அன்றி சிறீலங்காவின் பொருளாதாரத்துறைக்குப் புத்துயிர் அளிக்கும் பல திட்டங்களுடன் சிங்கப்பூர் பிரதமர் பல சந்திப்புக்களை சிறீலங்காவில் நடத்தியிருந்தார். சிறீலங் காவில் இருக்கின்ற வெளிநாட்டு, உள்நாட்டு முதலீட்டாளர்க ளையும் சந்திப்பதற்கு முன்னர் சனாதிபதி சந்திரிக்காவை யும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவையும் சந்தித்து நாட்டின் தற்போதைய களநிலவரம் தொடர்பாக அறிந்துகொண்டார். சிறீலங்கா அரசாங்கம் தமது நாட்டு நிலவரம் தொடர்பாக உறுதிமொழிகளை வழங்கியிருந்தாலும் அதனை நேரில் கண்டு கொண்ட பின்னரே தமது உதவித் திட்டங்களைச் செய்ய முடியும் என்ற நோக்கமும் சிங்கப்பூர் பிரதமருக்கு இருந்திருக்கின்றது. சனாதிபதி சந்திரிக்காவிடம் சில விட யங்களைக் கேட்டு அறிந்ததுடன் சில உத்தரவாதங்களையும் பெற்றிருக்கின்றார். அதேவேளை சிறீலங்கா மீதான தமது அபிப்பிராயத்தையும் சிங்கப்பூர் பிரதமர் எடுத்துக்கூறியி ருக்கின்றார்.

பிரதானமாக நிரந்தரச் சமாதானம் ஏற்பட்டு இலங்கை யில் அமைதி நிலவ வேண்டும் என்பதே சிங்கப்பூர் மக்க


*சிறீலங்காவின் உறுதிமொழிகளில் சிங்கப்பூர் பிரதமருக்குச் விடுதலைப் புலிகள் கேட்கின்ற தீர்வை வழங்கி இனப் பிரச்சினையை முடிவிற்குக் கொண்டு வரலாமே*



ளின் எதிர்பார்ப்பு எனச் சிங்கப்பூர் பிரதமர் கோ சொக்டொங் சனாதிபதி சந்திரிக்காவிடம் தெரிவித்திருக்கின்றார். சனாதி பதி சந்திரிக்காவைச் சனாதிபதி மாளிகையில் ஒன்றரை மணித்தியாலங்களாகச் சந்தித்துக் கலந்துரையாடியிருக்கின் றார். நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை, புலிகளுட னான சமாதானப் பேச்சுவார்த்தையின் விபரங்கள், மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் பொரு ளாதாரத் திட்டங்கள் பற்றிச் சனாதிபதி சந்திரிக்கா சிங்கப்பூர் பிரதமருக்கு எடுத்துக்கூறினார். சிங்கப்பூர் முதலீட்டாளர்கள் சிறீலங்காவில் முதலீடு செய்வதற்கான வசதி வாய்ப்புக்கள் இருப்பதாகவும் சிங்கப்பூர் அரசாங்கம் தமது முதலீட்டாளர் களை இங்கு அனுப்பிவைக்க வேண்டும் எனவும் சனாதிபதி சந்திரிக்கா சம்பிரதாயபூர்வமாக வேண்டுகோள் விடுத்தார். அதேவேளை சிறீலங்கா அரசாங்கத்தின் சமாதானப் பேச்சு வார்த்தைக்கான முயற்சிகளைச் சம்பிரதாயபூர்வமாக பாராட் டிய சிங்கப்பூர் பிரதமர் கோ சொக்டொங் சிங்கப்பூர் அரசாங் கம் வேண்டிய உதவிகளைச் செய்வதற்குத் தயாராக இருப் பதாகவும் கூறியுள்ளார். இச்சந்திப்பில் சனாதிபதி சந்திரிக் காவுடன் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் கலந்துகொண்டார். அதேவேளை நிதியமைச்சர் சரத் அமு னுகமவையும் சிங்கப்பூர் பிரதமர் சந்தித்து நாட்டின் பொரு ளாதார நிலமைகள் மற்றும் மேற்கொள்ளப்படவேண்டிய திட்டங்கள் பற்றிக் கலந்துரையாடினார்.

சிறீலங்காவின் உறுதிமொழிகளில் சிங்கப்பூர் பிரதமருக் குச் சந்தேகங்கள் ஏற்படாமலும் இல்லை. அரச மரியா தைச் சந்திப்பின் போது அவ்வாறான சந்தேகங்களை வெளிப்படுத்த முடியாது. ஒரு நாட்டின் தலைவர் என்ற அடிப்படையில் சம்பிரதாயபூர்வமாக தான் விஜயம் செய்த நாட்டின் நடவடிக்கைகளை பாராட்ட வேண்டிது மரபுரீதியான கடமை. அதனை சிங்கப்பூர் பிரதமர் கோ சொக்டொங் சிறீலங்கா சனாதிபதியிடமும் பிரதமரிடமும் முகச்சுளிவுகள் நெளிவுகள் இன்றி தெளிவாக வெளிப்படுத்தியிருக்கின்றார்.

ஆனால் சிறீலங்கா பற்றிய தனது உண்மையான அபிப்பி ராயத்தையும் மன ஆதங்கத்தையும் பொருளாதாரத்து றையை ஊக்குவிக்க சிறீலங்கா மேற்கொள்ளவேண்டிய எதிர்கால நடவடிக்கைகள் பற்றியும் சிங்கப்பூர் பிரதமர் தனது மனதில் பட்ட உண் மையான நிலைமைகளை நிதியமைச்சர் சரத் அமுனு கமவுடனான சந்திப்பின் போதும் உள்நாட்டு வெளி நாட்டு முதலீட்டாளர்களுட னான சந்திப்பின் போதும் வெளிப்படுத்தியிருக்கின்றார்.



சிறீலங்காவில் தற்போது நடைமுறையில் இருக்கும் யுத்தநிறுத்த உடன்படிக்கை யில் வெளிநாட்டு முதலீட்டா ளர்களுக்கு சந்தேகம் நிலவு கின்றது. அத்துடன் சிங்கப் பூர் முதலீட்டாளர்கள் கூட இங்கு வருவதற்குத் தயங்கு கின்றார்கள் எனச் சிங்கப்பூர் பிரதமர் நிதியமைச்சர் சரத் அமுனுகமவிடம் எடுத்துக் கூறியுள்ளார். அந்த வேளை யில் சிங்கப்பூர் பிரதமர் கூறி யவற்றுக்கு மறுப்புக்கூற முடியாத நிலையில் அல்லது ஏதே னும் பொய்யான வாக்குறுதிகளை வழங்க முடியாத சூழ் நிலையில் நிதியமைச்சர் சரத் அமுனுகம காணப்பட்டார். நீங்கள் எடுக்கும் முடிவுகளையும் தீர்மானங்களையும் தாங் கள் ஏற்றுக்கொள்வதாகச் சிங்கப்பூர் பிரதமரிடம் கூறியி

## சந்திக்காமல் நழுவி ஓடிய ரணில்

ருக்கின்றார். அப்போது குறுக்கிட்ட சிங்கப்பூர் பிரதமர் விடு தலைப் புலிகள் கேட்கின்ற தீர்வை வழங்கி இனப்பிரச்சி னையை முடிவிற்குக் கொண்டு வரலாமே என்று கேட்டிருக் கின்றார். அதற்குச் சரியான பதில் வழங்கமுடியாத நிலை யில் இருந்த நிதியமைச்சர் சமாதானப் பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்கும் என்று மாத்திரம் கூறியிருக்கின்றார்.

அதேவேளை இந்தச் சந்திப்பு முடிந்த பின்னர் அங்கு நின்ற உள்ளூர் செய்தியாளர்களின் கேள்விகள் சிலவற் றுக்கு பதிலளித்த சிங்கப்பூர் பிரதமர் சிறீலங்கா இனநெருக் கடிக்குள் சிக்குண்டு இருப்பதைத் தான் உணர்ந்துகொள்வ தாகவும் அந்த நெருக்கடிக்கு தீர்வு ஏற்படுகின்ற பட்சத்தி லேயே சிறீலங்காவின் பொருளாதார நெருக்கடிக்கும் தீர் வைக்காண முடியும் எனத் தான் நம்புவதாகவும் தெரிவித்தி ருக்கின்றார். தென்பகுதியின் அரசியல் நிலைமையும் இரு பிரதான தேசிய அரசியல் கட்சிகளுக்கு இடையேயான அதா வது அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சிக்கும் இடையேயான உறவுகள் தேசிய நல்லிணக்கத்திற்கு ஏற்றவகையில் அமை யவில்லை எனவும் சிங்கப்பூர் பிரதமர் கூறியிருந்தார். அப்படி யானால் உங்கள் எதிர்பார்பின்படி சிறீலங்காவில் முதலீடு செய்வது சாத்தியமானதா என்ற கேள்விக்குப் பதிலளித்த பிரதமர், அது குறித்து தற்போதைக்கு எதுவும் கூறமுடியாது என்று சொல்லியிருக்கின்றார். இதேவேளை எதிர்பார்க்கப்பட் டது போன்று சிங்கப்பூர் பிரதமருக்கான அரச மரியாதைக ளும் இடம்பெற்றதாகத் தெரியவில்லை. அவரின் பாதுகாப் புக்கள் அவருடைய தங்குமிடம் மற்றும் சிறீலங்காவின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் சுற்றிப்பார்த்தமை கூட சிங்கப்பூர் பாதுகாப்பு அதிகாரிகளின் ஏற்பாட்டிலேயே இடம்பெற்றிருந்தது. வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் கூட தனது சந்திப்பு முடிந்த பின்னர் சிங்கப்பூர் பிரதமரை வேறு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சந்திக்கவும் இல்லை பேசவும் இல்லை.

இதேவேளை சிறீலங்காவின் சிங்கப்பூருக்கான உத்தியோ கபூர்வ தூதுவர் ஆலயம் ஒன்றை திறக்கவேண்டும் என்ற சிங்கப்பூர் அரசாங்கத்தின் தீர்மானம் கூட இறுதி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டது. அது குறித்த பேச்சுவார்த்தைகள் கூட சனாதிபதி சந்திரிக்காவோடு இடம்பெறவில்லை என்று சிங்கப்பூர் அதிகாரிகள் தெரிவித்தனர். நெருக்கடியான ஒரு சூழ்நிலையில் அவ்வாறு தூதரகம் திறப்பது சாத்தியமானது அல்ல என சிங்கப்பூர் பிரதமர் கருதியதாலேயே அந்தத் தீர்மானம் கைவிடப்பட்டதாக அறிய முடிகின்றது. அதே வேளை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுட னான சந்திப்புக்குக் கூட இறுதி நேரத்தில் கைவிடப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவரைச் சந்திக்க வேண்டும் என்பதில் சிங்கப்பூர் பிரதமர் ஆர்வம் காட்டியிருந்தார். அத்துடன் அந்தச் சந்திப்பு ஏற்கனவே நிகழ்ச்சி நிரலில் திட்டமிடப்பட் டும் இருந்தது. ஆனால் ரணில் விக்கிரமசிங்கா வேலைப் பழுவை காரணம் காட்டி தமது சிரேஷ்ட உறுப்பினர்களைச் சந்திக்குமாறு தெரிவித்திருந்தார். அவ்வாறு சிரேஷ்ட உறுப் பினர்களுடன் சிங்கப்பூர் பிரதமர் சந்திப்பதை சிங்கப்பூர் பாதுகாப்பு அதிகாரிகள் விரும்பாமையினால் அந்தச் சந்திப்பு இரத்துச்செய்யப்பட்டது. ரணில் விக்கிரமசிங்கா சம்பிரதாய பூர்வமாகவேனும் சந்திக்காததையிட்டு கவலையடைந்த சிங்கப்பூர் பிரதமர் இனநெருக்கடித் தீர்விற்கான சமாதானப் பேச்சுவார்த்தைகள் பற்றிய தனது சந்தேகத்தை வெளிப் படுத்தியிருந்தார். நீண்டகாலப் போருக்கு முடிவு காணக் கூடிய வகையில் இரு தேசியக்கட்சிகளும் ஒன்றுபட வேண் டிய அவசியத்தை அவர் நாசூக்காக வெளிக்காட்டியிருந்தார்.

உள்நாட்டு வெளிநாட்டு முதலீட்டாளர்களை சந்திப்பதற் கான ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது. நூறுக்கும் அதிகமான முதலீட்டாளர்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்த்த போதும் எட்டு முதலீட்டாளர்களே கலந்துகொண்டார்கள். ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாட லில் மொத்தம் இருபத்தைந்து பேர் மாத்திரமே சமூகமளித் திருந்தனர். எட்டு முதலீட்டாளர்களைத் தவிர ஏனையவர்கள் சிறீலங்கா வெளியுறவு அமைச்சின் அதிகாரிகள். அதனை நன்கு உணர்ந்துகொண்ட சிங்கப்பூர் பிரதமர் நான்கு மணித் தியாலங்களாக வரையறுக்கப்பட்டிருந்த இந்தக் கலந்து ரையாடலை ஒருமணித்தியாலத்தில் முடித்துக்கொண்டார். பத்து நிமிடங்கள் மாத்திரமே சிங்கப்பூர் பிரதமர் அங்கு உரை நிகழ்த்தினார். அங்கு கலந்துகொண்ட சுமிசமாஜி என்ற ஜப்பான் நிறுவனத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர்

(தொடர்ச்சி 28ம் பக்கம்)


– கொழும்பிலிருந்து **ஊரோடி**

# இலங்கை அமைதிக்கு இந்தியா உதவ வேண்டும்

## - வைகோ

(27.06.04)

இலங்கை அமைதி பேச்சுவார்த்தைக்கு இந்தியா உதவ வேண்டும் என்று ம.தி. மு.க. பொதுச் செயலாளர் வைகோ கூறினார். ம.தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டம் சென்னை எழும்பூரில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை நடந்தது. கூட்டத்துக்கு கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ தலைமை தாங்கினார். கூட்டம் முடிந்ததும் மாலையில் அவர் நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார்.






*அமெரிக்காவில் இருந்து திரும்பிய ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோவிற்கு அவரது கட்சி உறுப்பினர்கள் சென்னை விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கின்றனர்.*

அப்போது அவர் கூறியதாவது, இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கான தடையை நீக்க வேண்டும் என்பது ம.தி.மு.க.வின் விருப்பம். அதற்காக மத்திய அரசை கட்டாயபடுத்த மாட்டோம். இலங்கை அமைதி பேச்சுவார்த்தையில் இந்தியா உதவ வேண்டும் என்றார். அப்போது பத்திரிகையாளர் ஒருவர் குறிக்கிட்டு, இந்தியாவில் விடுதலை புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட இயக்கம். அப்படி இருக்கும் போது இலங்கை அமைதி பேச்சுவார்த்தையில் இந்தியா எப்படி உதவ முடியும்? என்று கேள்வி எழுப்பினார். அதற்கு பதலிளத்த வைகோ, தடையை நீக்கினால்தான் இந்தியா சரியான முறையில் இலங்கை அமைதிப் பேச்சு வார்த்தைக்கு உதவ முடியும். வருகிற காலங்களில் தடை நீக்க வாய்ப்பு உள்ளது. இவ்வாறு வைகோ கூறினார்.

## சனாதிபதி அப்துல் கலாமிற்கு தபாலில் துப்பாக்கி அனுப்பிய மனநோயாளி


இந்திய சனாதிபதிக்கு ஒருவர் பொதியில் துப்பாக்கியும் தோட்டாவும் அனுப்பி வைத்தள்ளார். அவரை உடனடியாகப் பொலிசார் கைது செய்துள்ளனர். இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது, சனாதிபதி அப்துல் கலாமுக்கு பீகாரில் இருந்து ஒரு பொதி தபாலில் அனுப்பப்பட்டிருந்தது. அந்த பொதியில், அனுப்பியவரின் முகவரியும் எழுதப்பட்டிருந்தது. குறிப்பிட்ட பொதியை வழக்கம் போல சனாதிபதி மாளிகை அதிகாரிகள் ``எக்ஸ்ரே ஸ்கேனிங்" செய்தனர். அப்போது அதனுள் ஆபத்தான பொருள் இருப்பது தெரியவந்தது. உடனடியாக, வெடி குண்டை அப்புறப்படுத்தும் போலீஸ் பிரிவுக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. அவர்கள் விரைந்து வந்து பொதியை, முன் எச்சரிக்கையுடன் திறந்து பார்த்தனர். அப்போது பொதியில் நாட்டுத் துப்பாக்கி ஒன்றும், ஒரு தோட்டாவும் இருப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தனர். அந்த பொதியில் ஒரு கடிதமும் இருந்தது. அதில் 'இந்த நாட்டு துப்பாக்கியை நான் தயாரித்தேன். இதன் மாதிரி ஒன்றையும், தோட்டாவையும் உங்கள் பார்வைக்கு அனுப்பி இருக்கிறேன். தங்களிடம் இதுபற்றி நேரில் விளக்க எனக்கு தாங்கள் நேரம் ஒதுக்கித் தரவேண்டும்.' இவ்வாறு கடிதத்தில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

இதுபற்றி பீகார் போலீசுக்கு, டெல்லி போலீசார் தகவல் கொடுத்தனர். உடனே பீகார் போலீசார் நடவடிக்கையில் இறங்கினார்கள். பொதியை அனுப்பிய 40 வயதான விவசாயியை போலீசார் கைது செய்து விசாரணை நடத்தியபோது, அவர் சனாதிபதிக்கு துப்பாக்கி பார்சல் அனுப்பியதை ஒத்துக்கொண்டார். இதுபற்றிப் பாட்னா போலீசார் கூறுகையில், அவர் மனநிலை பாதிக்கப்பட்டவராகத் தோன்றுகிறார் என்றனர்.

## ஈராக்குக்கு ஐ.நா. புதிய தூதர்

ஈராக்கில் பாக்தாத் நகரில் இருந்த ஐ.நா. சபை அலுவலகம் குண்டு வீசி தாக்கப்பட்டதில் 22 பேர் இறந்ததைத் தொடர்ந்து அலுவலகம் மூடப்பட்டு தூதரக ஊழியர்கள் வெளியேறினார்கள். தற்போது ஜோர்டானில் அந்த அலுவலகம் செயல்பட்டு வருகிறது. என்றபோதிலும் ஐ.நா. பொதுச் செயலாளர் கோபி அனானின் சிறப்பு பிரதிநிதியான லக்தார் பிரகிமா பாக்தாத் சென்று இடைக்கால அரசிடம் அதிகார ஒப்படைப்பு ஏற்பாடுகளை கவனித்து வருகிறார். ஈராக்கில் தொடர்ந்து வன்முறை சம்பவங்களும், பாதுகாப்பு சீர்கெட்டு இருப்பதாலும் ஐ.நா. தூதரகம் திறப்பதில் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. இந்த நிலையில் ஈராக்கில் சனவரி மாதத்தில் தேர்தலை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே இதில் ஐ.நா. ஊழியர்கள் ஈடுபடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் ஈராக்குக்கான ஐ.நா.சபை புதிய தூதர் அடுத்த வாரம் நியமிக்கப்படுவார் என்று தெரிகிறது. இதுபற்றி கோபி அனான் தீவிரமாக ஆலோசித்து வருவதாகக் தெரிவிக்கப்படுகிறது.

## பா.ம.க. தாக்குதலைத் தடுத்து நிறுத்த ஜெயலலிதாவைச் சந்திக்க விஜயகாந்த் முடிவு



நடிகர் விஜயகாந்த் முதலமைச்சர் ஜெயலலிதாவைச் சந்தித்து, பா.ம.க.வினரின் தாக்குதலை தடுத்து நிறுத்தும்படி கோரிக்கை விடுக்க முடிவு செய்து இருக்கிறார். சில தினங்களுக்கு முன்பு இரசிகர் மன்றம் சார்பில் கள்ளக்குறிச்சியில் நடந்த பொதுக்கூட்டத்தில் விஜயகாந்த் பேசினார். அப்போது, "மக்களை நேரடியாகச் சந்திக்காமலே சிலர் அமைச்சராகி விடுகிறார்கள்" என்று அவர் கூறினார். மத்திய அமைச்சர் அன்புமணியை குறிப்பிட்டு அவர் அப்படி பேசியதாகப் பா.ம.க.வினர் கொதிப்படைந்தனர். அதைத் தொடர்ந்து விஜயகாந்தின் இரசிகர் மன்றம் தீ வைத்து எரிக்கப்பட்டது. விஜயகாந்தின் கொடும்பாவியும் கொளுத்தப்பட்டது. இதேபோல் பா.ம.க.வின் அலுவலகத்துக்கும் தீ வைக்கப்பட்டது. டாக்டர் ராமதாசின் கொடும்பாவியை விஜயகாந்த் இரசிகர்கள் கொளுத்தினார்கள்.

இருதரப்பிலும் இந்த மோதல் தொடர்கிறது. இனிமேல் விஜயகாந்தின் படங்களை ஓடவிட மாட்டோம் என்று பா.ம.க.வினர் பகிரங்கமாக அறிவித்தனர். இதற்கு தமிழ் திரைப்பட உலகம் கண்டனம் தெரிவித்தது. பட அதிபர்கள், விநியோகஸ்தர்கள், தியேட்டர் அதிபர்கள் ஆகிய மூன்று தரப்பினரும் "விஜயகாந்த் மீதான மோதல் விவகாரத்துக்கு முற்றுப்புள்ளி வையுங்கள்" என்று டாக்டர் ராமதாசுக்குக் கோரிக்கை விடுத்தனர்.

விஜயகாந்த் - பா.ம.க. மோதல் விவகாரம் நாளுக்கு நாள் விஸ்வரூபம் எடுத்து வளர்ந்து வரும் நிலையில், விஜயகாந்த் இதுவரை தனது கருத்தைத் தெரிவிக்கவில்லை. இரசிகர் மன்றம் சூறையாடப்பட்டது பற்றியும், இரசிகர்கள் தாக்கப்பட்டது பற்றியும் அவர் பதில் பேசவில்லை. அவர் கோவையில் உள்ள நண்பரும், பிரபல ஜோதிடருமான பாலசுப்பிரமணியம் மற்றும் நெருக்கமான நண்பர்களுடன் ஆலோசனை நடத்தினார். அப்போது அவர் இனிமேல் நேரடி அரசியலில் ஈடுபடுவது என்று முடிவு எடுத்ததாகத் தெரிகிறது.

அதன்பிறகு விஜயகாந்த் தனது நண்பர்களுடன் கேரளா சென்று, அங்கு பிரபல ஜோதிடர் ஒருவரை சந்தித்துப் பேசினார். சென்னை திரும்பியுள்ள விஜயகாந்த் நிருபர்களைச் சந்தித்து, தனது அரசியல் ரீதியிலான முடிவை அறிவிக்க திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. அதற்கு முன்பாக முதலமைச்சர் ஜெயலலிதாவைச் சந்தித்து புகார் மனு கொடுக்கவும், பா.ம.க.வினரின் தாக்குதலை தடுத்து நிறுத்தும்படி கோரிக்கை விடுக்கவும், விஜயகாந்த் முடிவு செய்து இருக்கிறார்.

இதேவேளை நடிகர் விஜயகாந்துக்கும், பா.ம.க.வினருக்கும் இடையே நாளுக்கு நாள் மோதல் முற்றி வருவதால், விஜயகாந்தின் வீட்டுக்கும், அவருடைய திருமண மண்டபத்துக்கும் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு இருக்கிறது. சென்னை கோயம்பேட்டில் உள்ள விஜயகாந்தின் `ஆண்டாள் அழகர்' திருமண மண்டபத்துக்குள் செல்பவர்களை நன்றாக பரிசோதித்த பிறகே, உள்ளே அனுமதிக்கிறார்கள்.

லாச்சப்பலில் ஒரு புதிய உதயம்

தரமான, கூடவே சுவையான
இறைச்சித் தெரிவுகளுக்கு நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்
லாச் சபலில் யாழ்ப்பாணம் இறைச்சிக்கடை

5, Rue Perdonnet, 75010 Paris.
Métro - La Chapelle / Gare du Nord
Tél: 01 40 05 92 91

எமக்கு வேறு கிளை நிறுவனங்கள் இல்லை

யாழ்ப்பாணம் இறைச்சிக்கடை
YALPPAANAM BOUCHERIE



ஆட்டு இறைச்சி - மாட்டு இறைச்சி
கோழி இறைச்சி
மான் இறைச்சி - மரை இறைச்சி
காட்டுப் பன்றி - காட்டுக் கோழி
இன்னும்...! இன்னும்...! பலவகை.




Pub-Fr

# கிளிண்டன் புத்தகம் விற்பனையில் சாதனை!

(27.06.04)

அமெரிக்க முன்னாள் சனாதிபதி கிளிண்டன் எழுதிய `என் வாழ்க்கை' புத்தகம், வெளியான முதல் நாளிலேயே அமெரிக்காவில் 4 இலட்சம் பிரதிகள் விற்பனையாகி சாதனை படைத்துள்ளது. நாவல் அல்லாத புத்தகங்கள் இந்த அளவுக்கு இதுவரை விற்றது இல்லை. முதல் பதிப்பாக 15 இலட்சம் பிரதிகள் அச்சடிக்கப்பட்டன. முதல் நாள் விற்பனையைப் பார்த்த பிறகு மேலும் 7 இலட்சத்து 25 ஆயிரம் பிரதிகள் அச்சிடுவதற்குப் பதிப்பாளர் ஆல்பிரட் ஏ.நோப் இறங்கியுள்ளார். வெளிநாடுகளிலும் விற்பனை நன்றாக இருப்பதாகக் கூறிய ஆல்பிரட், புத்தகம் தவிர, ஒலிநாடாவில் பதிவு செய்யப்பட்ட புத்தகம் 35 ஆயிரம் பிரதிகள் விற்பனையாகி உள்ளதாகத் தெரிவித்தார்.




கிளிண்டன் எழுதிய அவரது வாழ்க்கை வரலாறு சுயசரிதை புத்தகத்தில் தாஜ்மகாலை மிகவும் பாராட்டியுள்ளார். உலகிலேயே மிக அழகான தாஜ்மகாலைப் பார்த்து சொக்கிப் போனேன். மூச்சு விடவும் மறந்து, மயக்கத்தில் கட்டுண்டது போல அதன் அழகை ரசித்தேன். காற்றில் உள்ள மாசு காரணமாக அதற்கு ஆபத்து ஏற்படலாம் என்று அஞ்சப்படுகிறது. மாசற்ற பகுதியாக தாஜ்மகால் பகுதியை ஆக்க இந்தியா கடும் முயற்சி செய்து வருகிறது. இதற்காக இந்தியாவும், அமெரிக்காவும் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளன. இதன் மூலம் அமெரிக்க உதவியாக 45 மில்லியன் டொலரும், ஏற்றுமதி - இறக்குமதி மூலம் 200 மில்லியன் டொலரும் இந்தியாவுக்குக் கிடைக்கும். மின்சார உற்பத்திக்கும், தாஜ்மகால் பகுதியை மாசற்ற பகுதியாக்கவும் இந்த தொகை பயன்படுத்தப்படும். இவ்வாறு கிளிண்டன் அந்த புத்தகத்தில் எழுதி உள்ளார்.

இதேவேளை, கிளிண்டனின் சுயசரிதை புத்தகம் தனக்கு ஏமாற்றம் அளிப்பதாக, மோனிகா கூறி இருக்கிறார். அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகையில் பணிபுரிந்த மோனிகா - கிளிண்டனின் காதல் விவகாரம், அப்போது அமெரிக்காவில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. கிளிண்டன் எழுதிய அவருடைய சுயசரிதைப் புத்தகம் தற்போது பரபரப்பாக விற்பனையாகி வரும் நிலையில் தனது காதல் விவகாரத்தை மோனிகா மீண்டும் எழுப்பி இருக்கிறார். இங்கிலாந்து தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில் இதுபற்றி கூறி இருப்பதாவது, எங்கள் உறவு குறித்து அவர் விவரமாக அந்த புத்தகத்தில் குறிப்பிடுவார் என்று நான் எதிர்பார்க்கவில்லைதான். ஆனால், எனது விவகாரத்தில் தங்களது சனாதிபதி பதவியின் பெருமையை பாதுகாத்துக் கொள்வதற்காக அவரும், அவருடைய ஊழியர்களும் என்னைப் பற்றி கூறிய தவறான தகவல்களை யாவது திருத்திக் கொள்வார் என்று எதிர்பார்த்தேன். கிளிண்டன் அதைச் செய்யாதது எனக்கு ஏமாற்றம் அளிக்கிறது. இவ்வாறு மோனிகா லெவின்ஸ்கி கூறினார்.

இதுஇவ்வாறிருக்க, அமெரிக்க முன்னாள் சனாதிபதி கிளிண்டன் ஒரு தொலைக்காட்சிக்குப் பேட்டி அளித்தார். அப்போது ஈராக் விவகாரத்தில் புஷ் அவசரப்பட்டு விட்டார் என்றும் ஐ.நா. சபை கண்காணிப்பாளர்கள் தங்களின் பணியை முடிக்கும் வரை பொறுத்து இருக்காதது தவறு என்றும் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில், சதாம் உசேன் ஆட்சியை வீழ்த்தியதின் மூலம் ஈராக்கில் தீவிரவாதம் பெருக வழி வகுக்கப்பட்டு விட்டது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

## அதிபர் முஷாரப்புடன் மோதல் பாக்.பிரதமர் ஜமாலி பதவி விலகினர்

பாகிஸ்தான் அதிபர் முஷாரப்புடன் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து பிரதமர் ஜமாலி தனது பதவியில் இருந்து விலகியுள்ளார். கடந்த 19 மாதங்களாக பாகிஸ்தான் பிரதமராக ஜபருல்லாகான் ஜமாலி இருந்து வந்தார். ஜமாலியின் நிர்வாகம் சரியில்லை என்று சனாதிபதி முஷாரப் அதிருப்தி அடைந்து இருந்தார். இதற்கிடையில் நாடாளுமன்ற கூட்டத்தில் முஷரப்பை எதிர்க் கட்சி உறுப்பினர்கள் கடுமையாக விமர்சித்தார்கள். முஷாரப்பை தாக்கிப் பேசினார்கள். ஆனால் சபையில் இருந்த பிரதமர் ஜமாலி இதனை கண்டு கொள்ளவில்லை. முஷாரப்பை பாதுகாக்கும் வகையில் எதுவும் பேசவில்லை.

பிரதமர் ஜமாலியின் இந்த செயல் முஷாரப்புக்கு மேலும் கோபத்தை ஏற்படுத்தி இருந்தது. எனவே ஜமாலியை நீக்க திட்டமிட்டிருந்ததாக கூறப்பட்டது. அடுத்த மாதம் (ஜூலை) 3ம்திகதி முஷாரப் ஸ்காண்டிநேவியா நாட்டுக்கு செல்ல இருக்கிறார். அதற்கு முன்பு ஜமாலி நீக்கப்பட்டு புதிய பிரதமர் நியமிக்கப்படுவார் என்று பாகிஸ்தான் பத்திரிகைகள் பரபரப்பு செய்தி வெளியிட்டன. இந்த நிலையில் பிரதமர் ஜமாலி நேற்று தனது பதவியில் இருந்து விலகியதுடன் அமைச்சரவையும் கலைத்தார். தனது கட்சி மற்றும் கூட்டணி கட்சி நிர்வாக குழு கூட்டத்தில் இதை அறிவித்த ஜமாலி, தன்னுடைய பதவி விலகல் கடிதத்தை கட்சியின் தலைவர் சவதாரி சுஜ்ஜத் உசேனிடம் கொடுத்ததாகவும் தெரிவித்தார். அடுத்த பிரதமராக சுஜ்ஜத் உசேனை அவரே முன்மொழிந்தார். அவருக்கு கூட்டணி கட்சியினர் எல்லோரும் ஒத்துழைப்பு தரும்படியும் கேட்டுக் கொண்டார்.

தனக்குப்பின் ஒரு நல்லவர் கட்சியையும், நாட்டையும் நல்ல முறையில் வழி நடத்துவார் என்ற நம்பிக்கையில் வெளியேறுவதாகவும், தன்னுடைய முடிவு கட்சியை பலப்படுத்துமானால் சந்தோஷமடைவதாகவும் அப்போது அவர் கூறினார்.

விரக்தி அடைந்த நிலையில் காணப்பட்ட ஜமாலி, அவசர அவசரமாக, பிரதமர் பொறுப்பை ஆளும் கட்சி தலைவரான சுஜ்ஜத் உசேனிடம் ஒப்படைத்து விட்டு வெளியேறி விட்டார். பின்னர் நிருபர்களுக்கு பேட்டி அளித்த செய்தித்துறை மந்திரி ஷேக் ரஷீத், தற்காலிக பிரதமராகத்தான் சுஜ்ஜத் உசேன் பொறுப்பு ஏற்று இருக்கிறார். அடுத்த பிரதமராக, பிரபல பொருளாதார நிபுணரும், முன்னாள் நிதி மந்திரியுமான சவுகத் அஜீஸ் பதவி ஏற்பார் என்று அறிவித்தார்.

## ஈராக்கில் 4 நகரங்களில் ஒரே நேரத்தில் தாக்குதல்! அமெரிக்க உலங்குவானூர்தி சுட்டு வீழ்த்தப்பட்டது

### 75 பேர் பலி, 250 பேர் காயம்

ஈராக் நாட்டின் அல்கொய்தா பிரிவு தலைவரான அல்-ஜர்க்கா ஆதரவு தீவிரவாதிகள் கடந்த 24ம் திகதி 4 நகரங்களில் ஒரே நேரத்தில் தாக்குதலில் ஈடுபட்டனர். பலுஜா,



பக்பா, மோசூல், ரமாடி ஆகிய 4 நகரங்களில் தாக்குதலில் ஈடுபட்டனர். 75 பேர் பலியானார்கள். 250 பேர் காயம் அடைந்தனர். அமெரிக்க உலங்குவானூர்தி ஒன்றும் சுட்டு வீழ்த்தப்பட்டது.

பலுஜா நகரில் அமெரிக்க உலங்குவானூர்திகள் குண்டு வீசித் தாக்குதல் நடத்தின. தீவிரவாதிகள் பதிலடி கொடுத்து ஓர் உலங்குவானூர்தியைச் சுட்டு வீழ்த்தினர். ஈராக்கில் மோசூல் நகரில் கார் குண்டு வெடித்ததில், பலர் பலியானார்கள். பக்பா நகரிலும் உலங்குவானூர்தி மூலம் தாக்குதல் நடத்தப்பட்டது. அங்கும் கடும் சண்டை நடந்தது. தீவிரவாதிகளுக்கு எதிராக லேசர் வழிகாட்டும் ஏவுகணைகளும் இந்த சண்டையில் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இதில் 13 பேர் பலியானார்கள். பக்பா, மோசூல், ரமாடி ஆகிய நகரங்களில் உள்ள போலீஸ் நிலையங்கள் மீதும் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். மோசூல் நகரில் ஈராக் போலீஸ் பயிற்சிப் பள்ளி, போலீஸ் நிலையம், வைத்தியசாலை என 3 இடங்களில் ஒரே நேரத்தில் கார் குண்டுகள் வெடித்தன.

பக்பா நகரில் கறுப்பு உடை உடுத்திய ஆயுதம் தாங்கிய தீவிரவாதிகள், பக்பா நகரின் பிரதான சதுக்கத்தை கைப்பற்றியதுடன் நகரைச் சுற்றியுள்ள 60 கி.மீ. பகுதியை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். அத்துடன் அப்பகுதியில் நுழையமுயன்ற அமெரிக்க இராணுவத்தினர் மீது தாக்குதலும் நடத்தினர். 4 நகரங்களிலும் நடந்த சண்டையில் மொத்தம் 75 பேர் பலியானார்கள். பாக்தாத் நகரில் துணை இராணுவ அலுவலகம் அருகே போலீஸ் உடையில் வந்த ஒருவர் தன் உடலில் கட்டி இருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்தார். இதில் அவர் வெடித்துச் சிதறியதோடு அருகே இருந்த 4 துணை இராணுவத்தினரும் பலியானார்கள்.

சூரிச் மாநகரில் ஓர் அழகு நகைமாடம்

N.S.Jewellery

(பழைய தமிழரசி நகைமாடம் அமைந்திருந்த இடம்)

உங்கள் நகைத் தேவைகள் எதுவாயினும்
உங்கள் விருப்புக்கேற்றவாறான பல வண்ணத் தெரிவு
22 கரட் தரம் குறையாத தங்க ஆபரணங்கள்
ஏராளமான, பல புதிய டிசைன்களில் இப்போது
இறக்குமதி செய்துள்ளோம்.

சம்பிரதாய முறைப்படி பொன் உருக்கி தாலி செய்து தரப்படும்.

N.S.Jewellery
Neugasse 58
8005 Zürich

Telefon: 01 440 60 50
01 440 60 51
Natel: 079 230 80 04

IATA

# sivatravel

## Gold Award Winning Top Agent for Sri Lankan Airlines In Switzerland 2002-2003



SriLankan Airlines

உங்கள் பிரயாண
திகதிகளை கொழும்பில்
இருந்து இலவசமாக
மாற்றிவரக்கூடியதும்
30 கிலோ எடை எடுத்து
செல்லக்கூடிய வசதியுடன்
அனைத்து ரிக்கெட்டு
க்களும்

now flies you to

**COLOMBO**

## 5 times a week (Sun./Mon./Wed./Fri./Sat.)

(Monday+Saturday via Male / Sunday+Friday Nonstop/ Wednesday via Frankfurt (sometime)

**Zürich-Colombo Return : Adult 1180 Fr. / Child 791 Fr./ Baby 152 Fr)**
(Valid till end of June 2004)

**Zürich-Colombo Return : Adult 1380 Fr. / Child 925 Fr./ Baby 162 Fr)**
(Valid from 01.July till end of July and 01.October till 31.October 2004)

**Zürich-Colombo Return : Adult 1280 Fr. / Child 858 Fr./ Baby 152 Fr)**
(Valid from 01.August till end of Septermber 2004)

(அறிவித்தல்: எமது முயற்சியின் வெற்றியாக 12.06.இல் இருந்து அனைத்து விமானச்சீட்டுகளிலும் 30 கிலோ எடையை எடுத்துசெல்லும் வசதியாக ரிக்கெட்டிலேயே பிரின்பண்ணிகொடுக்கப்படும்)

**Spitalgass-Passage 16, 3011 Bern**

Tel.031 318 44 60 / Fax.031 318 44 61

sw-20

# எனது பாடலும் உனது பாடலும்

## (முன்னாள் தோழருக்கு இந்நாளில் பகிரங்கமாக)

சென்ற இதழின் தொடர்ச்சி

ஞாபகமிருக்கின்றதா நண்பரே, எத்தனை நெருப்பாறுகளைக் கடந்தோம். எத்தனைநாள் மலைகளைக் குடைந்தோம். கடலும், காடும் எம்மை ஈவிரக்கமில்லாமல் தின்ன முயன்றபோதும் இல்லையென்று நிமிர்ந்தோம்.

இல்லையா தோழரே. இவற்றினூடுதானே உங்கள் பயணமும் இனிதாய் நிகழ்ந்தது.

இவற்றுக்கிடையில்தானே உங்கள் இலக்கும். தெளிவாய்த் தெரிந்தது.

இடையில், இப்பொழுது ஏன் இந்தத் தயக்கம் நேர்ந்தது?

சொல்லுங்கள் தோழரே!

விடுதலைப்பாதை கல்லும் முள்ளும் நிறைந்ததுதான். வியர்வை ஆறாகப் பெருக வேலை

புரிந்ததில்லை. இரத்தம் ஆறாக ஓட ஓட அதனுள் மூழ்கி அத்தனையும் புரிந்தோம். இல்லையா?

விடுதலை வேள்வியில் ஒருமுறை ஓய்வு வரும். ஒருமுறை உறக்கம் வரும். ஒருமுறை

**நம் தலைமை தடுமாற்றம் இல்லாத தலைமை. தயக்கம் ஏதும் கொள்ளாத தலைமை. தனக்கென எதுவும் பெறாது, தனக்கெனச் செல்வம் ஏதும் சேர்க்காத தலைமை. தமிழருக்கான தலைமை. தமிழரின் தலை நிமிர்த்திய தலைமை. இலட்சிய உறுதி, வீரச் செருக்கு இவை கொண்ட தலைமை. இப்படி ஒரு தலைமை முற்போதும் இல்லை. இனி எப்போதும் இல்லை அதனை உணர்.**

பின்வாங்கல்

வரும். எப்படியும் வரும். எந்நேரமும் வரும். யார் மூலமும் வரும். அரசாண்டவன் அடிமையாகவும்

ஆவான். அடிமையானவன் அரசாண்டும் போவான். அத்தனையும் நிகழும்.

ஒரு முறை ஓய்வு, ஒரு முறை உறக்கம். ஒரு முறை பிரிவு, ஒரு முறை பின்வாங்கல். புரிந்துகொள் தோழரே!

ஓய்ந்து போனேன் என்று மகிழ்வு கொள்ளாதே.
இது ஓய்வு அல்ல, நிதானம்!
உறங்கினேன் என்று ஆனந்தம் அடையாதே!
இது உறக்கம் அல்ல, தியானம்.
பின் வாங்கினேன் என்று சிரித்து நிற்காதே!
இது பின்வாங்கல் அல்ல பதுங்கல்.
பிரிந்து போனேன் என்று அழுது வடியாதே!
இது பிரிவு அல்ல இறுக்கமான இணைவு.

இன்னும் சொல்ல, இனியும் சொல்ல ஏதுமில்லை. இன்னும் இருக்கிறது காலம். ஆனால் அதிக காலம்

அல்ல. ஆயுள் குறைவு. அதற்கிடையில் ஆவன செய்வோம். வாருங்கள் தோழர்களே!

வதைபட்ட வாழ்வைப் புதைத்து விதைபட்ட வேம்பாய் வீறாய் எழுவோம்.

ஞாபகமிருக்கின்றதா? அந்த நெடுந்தீவின் நீள்கடலின் குமுதினிப்படகில், இரண்டு வயதும் இன்னும் நிரம்பாத குழந்தையைக்கூட சிங்களப் பாதகர் கொன்றது கண்டு குமுறினோமே!

உன் கை நான் பிடிக்க, என் கை நீ பிடிக்க இது என்ன கொடுமை! என்று அரற்றினோமே! அழுதோமே!

அந்த நாட்கள் இன்னும் போய்விடவில்லை. அப்படியான காலம் இன்னும் அழிந்துவிடவில்லை.

ஆகவே நண்பரே, சொல்கின்றேன் கேள்!

காலத்தைக் கைவிடாதே! காலத்தை உனதாக்கு. காலம் யாருக்காகவும் காத்திருக்காது. உன்னை விட்டுக் காலம் ஓடிவிடும். அதற்கிடையில் காலத்தைக் கைப்பற்று.

விமர்சித்துக் கொண்டிருக்கிறாயாக்கும். வீண்பொழுது போக்கிக் கொண்டிருக்கிறாய் என்பது அதன் அர்த்தம்.

விமர்சி. யாவற்றையும் விமர்சி. எல்லாவற்றையும் விமர்சி. முக்கியமாய் உன்னை விமர்சி.

நமது தோழர் மாசே துங் தானே விமர்சனம் – சுய விமர்சனம் என்றொரு நூலே எழுதினார். விமர்சி.

தெளிவு பெறு. ஆனால் வேலை புரி.

### மாயோன் எழுதுவது...

குறை காண்பது மெத்தச் சுலபமான காரியம். யாரிலும் குறை காணலாம். எவரிலும் குறை காணலாம்.

எப்படியும் குறை காணலாம். குறையைக் காண்பதன்முன் அதன் காரணத்தையும் காண். நிறைவாய்

எல்லாவற்றையும் நினைக்கப்பழகு. நின் செயலையும் நிறைவாய்ச் செய்யமுயலு.

தோழரே, ஒன்றை உணர்! நம் இயக்கம், நம் தலைமை, வேகம் மிகுந்தது, வீரம் செறிந்தது. அதை

நீ உணர்வாய். அது உனக்கும் தெரியும்.

மேலும் சொல்வேன். நம் தலைமை தடுமாற்றம் இல்லாத தலைமை. தயக்கம் ஏதும் கொள்ளாத தலைமை. தனக்கென எதுவும் பெறாது, தனக்கென செல்வம் ஏதும் சேர்க்காத தலைமை. தமிழருக்கான தலைமை. தமிழரின் தலை நிமிர்த்திய தலைமை. இலட்சிய உறுதி, வீரச் செருக்கு இவை கொண்ட தலைமை. இப்படி ஒரு தலைமை முற்போதும் இல்லை. இனி எப்போதும் இல்லை அதனை உணர்.

அடங்காத் தமிழன் அவன்.

அணிசேர். சகல அடக்குமுறைகளுக்கு எதிராகவும் போர் புரிவோம். வா. வந்து படைசேர். நமது

மக்களுக்காகப் பணிபுரிவோம். வா!

களத்தில் உன்னைக் காண்பேன் என்று நான் நம்புகின்றேன்.

நல்லது தோழரே, நான் விடைபெறவா?

## வியட்நாம் பாசறையில் பயிற்சி பெற்று வெற்றி பெற்ற பல தாக்குதல்களின் சண்டைப் பயிற்சி ஆசானாகிய

## லெப்.கேணல் ஜனா மாஸ்ரர் – காந்தசீலன்

யாழ்ப்பாணத்தின் தென்மராட்சி மட்டுவில் மண்ணில் நடேசன் சரஸ்வதி தம்பதிகளின் மூன்றாவது மகனாக 1974.04.18அன்று பிறப்பெடுத்தான் ஜெயந்தன். அக்கா, தங்கை என மூன்று சகோதரர்கள் இவன் உடன் பிறப்புகள். சிறுவயது முதலே எல்லோருடனும் அன்பாகப்பழகும் சுபாவம் கொண்ட இவன் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் கற்று வந்தான். படிப்பிலும், விளையாட்டிலும், ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கிய ஜெயந்தனிடம் ஆசிரியர்கள், மாணவர்கள் எல்லோரும் அன்பாக பழகும் வகையில் இந்துக்கல்லூரியில் ஒரு முன்னோடி மாணவனாய் திகழ்ந்தான். சிறுவயதிலேயே ஜெயந்தனான ஜெனா, நேர்மைக்காக போராடவோ குரல்கொடுக்கவோ தயங்க மாட்டான். மற்றவர்கள் யாராவது ஜெனாவின் மனம் நோகும் வகையில் நடந்து கொண்டால் இவனின் கன்னங்களில் கோடிடும் கண்ணீரே ஜெனாவின் இளகிய மனதைப் புலப்படுத்தும். அன்பான குடும்பமாய் ஒரு கூட்டுக் கிளியாக வாழ்ந்து வந்த ஜெனாவின் குடும்பம் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கிக்கொண்டிருந்தது. அந்த வேளையில் தான் இந்திய வல்லூறுகள் எமது மண்ணில் கால்பதித்தன. அதன் அடிவருடிகளாக தேசத்துரோகிகளும் உருவாகி நின்றனர். விடுதலைப் புலிகளோடு தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு அதரவளித்த மக்களையும் அழிக்கக் கங்கணம் கட்டி நின்ற துரோக கும்பல்களின் செயற்பாட்டால் நிராயுத பாணிகளாக நின்ற இவனது குடும்பமும் மிகவும் சித்திர வதைக்குள்ளான இவ்வேளையில் தான், சிறு வயதிலேயே விடுதலை உணர்வு ஊறி நின்ற ஜெயந்தன் விடுதலைப் புலிகளுடன் தானும் இணைந்து பாசறை நோக்கி விரைந்தான்.




ஜனா என்ற பெயரோடு வவுனியாவில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் வியட்நாம்–2 பயிற்சி பாசறையில் பயிற்சியினை முடித்துக்கொண்டு வெளியேறினான். எம் உறவுகளின் உயிர்களை உன்னதமாய்க் காத்திடும் மருத்துவப்பிரிவில் லெப்.கேணல் குணாவுடன் தன் பணி தொடர்ந்தான். களமுனை சென்று கயவரை அழிக்கத் துடித்த இவன் ஆழ்மன எண்ணம் அரங்கேற சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் ஓர் அணிப் பொறுப்பாளனாக விடப்பட்டான். தன் கடமையே கண்ணெணக் கொண்ட ஜனாவின் அணிப்போராளிகள், ஆகாய கடல் வெளிச்சமரில் கலந்து கொள்ள எமது தேசத் தலைவனால் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. சாள்ஸ் அன்ரனி படையணியின் முதல் தாக்குதல் களமாகவும் அமைந்தது ஆகாய கடல் வெளிச்சமர்.

அவ்வேளையில் ஜெனாவின் சகோதரி உறவான ஜனகாவும் அதே களமுனைக்கு வந்திருந்தாள். விடுதலைப் போரில் இணைந்ததன் பின்னர் ஜெனாவும், ஜனகாவும் சந்திக்கும் முதற்சந்திப்பு இதுவாக இருந்தது. நிறைய விடையங்கள் இருவரும் கதைக்க இருந்த போதிலும், சண்டை முடிய கதைப்போம் என்ற உள்ளத்து உணர்வோடு கடமையை கண்ணெனக்கொண்டு இருவரும் களத்தினிலே சமரில் இறங்கி நின்றனர். உப்புவெளியாய் பரந்திருக்கும் தரையும், கடல் சூழ்ந்த பகுதியுமாய் எம் தமிழீழத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஓர் இடமாயும் திகழ்ந்தது ஆனையிறவு. ஜெனா மிகவும் உற்சாகமாக உறுதிதளராத வேங்கையாக தந்திரோபாயங்களைப் பயன்படுத்தி போராளிகளை வழிநடத்தி எதிரிக்கு பாரிய இழப்பை கொடுத்துக் கொண்டிருந்தான். வானத்திலிருந்து குண்டுமழை பொழிவது போல் எதிரியின் கோரத்தாக்குதல் அமைந்திருந்தது. எத்தனை வடிவெடுத்து எதிரி தாக்குதல் நடத்தினாலும் தமிழீழ மண் மீட்பதே குறியெனக்கொண்டு ஜெனா தாக்குதல் தொடுத்துக் கொண்டிருந்தான்.

போராளிகளையும் களமுனை சூழலுக்கு ஏற்ப வியூகம் அமைத்து நகர்த்திக் கொண்டிருந்தான். சண்டை உக்கிரமடைந்திருந்த வேளையில் தளராத வீராங்கனையாக எதிரியை மண்ணில் சரித்து சாதனை படைத்துக்கொண்டிருந்த ஜெனகாவின் உடலில் எதிரியின் ரவை ஒன்று தன் வல்லமையைக் காட்டியமையால் ஜெனகா தாய்மண்ணிலே சரிகின்றாள். வீரப்புலியாக சாய்ந்து விழுந்தவளின் கண்களிலே தம்பி ஜெனா தென்பட வார்த்தைகள் வர மறுக்க, விழுப்புண் அடைந்த நிலையிலும் சைகையால் தம்பியை தன்னருகே ஒருமுறை வருமாறு அழைக்கின்றாள். ஜெனகா தேசம் காக்கப்புறப்பட்ட அந்த பெரும்புயலான ஜெனா அணியை வழிநடத்திக் கொண்டிருந்தான். தன் சகோதரி மண்ணிலே சாய்வதைக் கண்ட பொழுதிலே ஓடிச்சென்று தன் தோழோடு அணைத்து அவளின் கடைசி வார்த்தை என்ன என்று கேட்பதற்கு கூட ஜெனாவுக்கு நேரம் இருக்கவில்லை.

(தொடர்ச்சி 28ம் பக்கம்)

IMPORTAS Asian Groceries

Importers, Distributors & Wholesalers of **Kings, Niru, Suryaa, TRS, GFT**

உங்கள் வியாபார ஸ்தாபனங்களுக்குத் தேவையான இலங்கை, இந்திய, தாய்லாந்து உணவுப் பொருட்களுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

| | | | |
|---|---|---|---|
| பறோட்டா | 36X375 | 1.00 | ஈரோ |
| Family பறோட்டா | 24X750 | 1.80 | ஈரோ |
| பாலப்பம் | 30X400 | 1.30 | ஈரோ |
| மசாலாதோசை | 30X400 | 1.30 | ஈரோ |
| இட்டலி சாம்பார் | 30X500 | 1.40 | ஈரோ |
| சப்பாத்தி | 36X400 | 1.10 | ஈரோ |
| பூரி மசாலா | 30X500 | 1.50 | ஈரோ |
| சென்ன பட்டூரா | 30X500 | 1.50 | ஈரோ |

Tobeleackerstrasse 4, 8212 Neuhausen Tel: + 41 52 672 28 38Fax: + 41 52 228 67 45

சி.புவனேஸ்வரன் (குஞ்சன்) S.J.N. Imports Tel: 0049 -24625557

சிகிரி Calling card ஆதரவில் IBC தமிழ் 2வது ஆண்டாக வழங்கும்

# இன்னிசைக்குரல் 2004

(மாபெரும் பாடல் போட்டி)

➡3 சுற்றுக்கள் அடங்கிய சுவார்ஷ்யமான போட்டி.

➡ரசிகர்களை விறுவிறுப்புடன் ரசிக்கவைக்கும் வித்தியாசமான போட்டி

டென்மார்க், பிரித்தானியா, பிரான்ஸ், சுவிஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளில் நடைபெறும் இன்னிசைக்குரல் போட்டிகளில் வெற்றிபெறுவோர் ஐரோப்பிய இன்னிசைக்குரல் 2004 விருதுக்காகப் போட்டியிடுவர்

**நிகழ்ச்சி விண்ணப்பமுடிவு**

டென்மார்க் -August 28 (சனி) July 5
பிரித்தானியா - September 11 (சனி) July 10
பிரான்ஸ் - October 30 (சனி) Aug 20
சுவிஸ்- November 14(ஞாயிறு) Aug 30
ஜேர்மனி -November 6 (சனி) Aug 30

இறுதிப்போட்டி
(ஐரோப்பிய இன்னிசைக்குரல் 2004)
பிரித்தானியாவில் - 08 january 2005

**விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

பங்குகொள்ள விரும்புவோர் விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்திசெய்து, போட்டியில் நீங்கள் பாடவிரும்பும் 3 பாடல்களை ஒரு ஒலிநாடாவில் பாடி பதிவுசெய்து IBC தமிழுக்கு கீழ்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**'Innisaikural 2004"**
**IBC Tamil**
**3 Colleg Fields, Prince Georges road**
**London Sw 19 2 Pt**
**United Kingdom**

விண்ணப்பப்படிவத்தையும் மேலதிக விபரங்களையும் IBC தமிழின் இணையத்தளம் www.ibctamil.co.uk இல் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: IBC தமிழ் தொலைபேசி. இல 0044 2081000012



# NATHU CASH & CARRY GMBH

## மாபெரும் மலிவு விற்பனை

### காலவரையின்றி இதுவே எமது நிரந்தர விலையாகும்

| உதாரணத்துக்காக மாற்றம் செய்யப்பட்ட விலை | பழைய விலை | புதிய விலை |
|---|---|---|
| இலங்கை மரக்கறி வகைகள் 1Kg | 6.50Fr | **4.90Fr** |
| இந்திய மரக்கறி வகைகள் 1Kg | 5.50Fr | **3.80Fr** |
| தாய்லாந்து மரக்கறி வகைகள் 1Kg | 8.50Fr | **7.35Fr** |
| கீரை வகைகள் அனைத்தும் | 9.00Fr | **6.90Fr** |
| மீன் வகைகள் | 7.50Fr | **6.90Fr** |
| நண்டு, கணவாய் | 7.50Fr | **6.90Fr** |
| (மீன் வெட்டிச் சுத்தம் செய்து தரப்படும் - இலவசம்) | | |
| நல்லெண்ணெய 7.50Ml | 11.90Fr | **9.35Fr** |
| 375Ml | 6.75Fr | **4.90Fr** |
| அவித்து அரித்த சுத்தமான கோதுமை மா | 14.00Fr | **12.90Fr** |
| நெஸ்டமோல்ட் | 6.50Fr | **5.50Fr** |
| வீவா | 7.50Fr | **6.50Fr** |
| கோர்லிக்ஸ் | 6.90Fr | **5.90Fr** |
| மைலோ | 6.50Fr | **5.90Fr** |
| நெல்லி ரசம் | 6.50Fr | **5.40Fr** |
| பழரச வகைகள் | 6.50Fr | **5.40Fr** |
| லெமன் பஃப் | 2.50Fr | **1.25Fr** |
| டீ டைம் | 3.50Fr | **2.50Fr** |
| கிப்ட் செலக்ஸ்ஸன் | 6.50Fr | **4.80Fr** |
| சீனிச் சம்பல் | 6.50Fr | **4.20Fr** |
| ஊறுகாய் வகைகள் | 5.50Fr | **4.20Fr** |
| பிரியாணி மிக்ஸ் | 5.50Fr | **4.20Fr** |
| ஜாம் வகைகள் | 3.90Fr | **3.10Fr** |
| தேங்காய் பால் பவுடர் 1 Kg | 13.50Fr | **9.60Fr** |

| உதாரணத்துக்காக மாற்றம் செய்யப்பட்ட விலை | பழைய விலை | புதிய விலை |
|---|---|---|
| தேங்காய்ப் பால் பவுடர் 350g | 5.95Fr | **4.50Fr** |
| தேங்காய்ப் பால் பவுடர் 150g | 3.15Fr | **2.30Fr** |
| மொட்டைக் கருப்பன் அரிசி5Kg | 12.50Fr | **9.30Fr** |
| மொட்டைக் கருப்பன் அரிசி 1Kg | 2.50Fr | **1.90Fr** |
| புழுங்கல் அரிசி 5 Kg | 12.50Fr | **9.30Fr** |
| புழுங்கல் அரிசி 1Kg | 2.50Fr | **1.90Fr** |
| பசுமதி அரிசி 5Kg | 10.90Fr | **7.45Fr** |
| முத்துச் சம்பா 5Kg | 12.50Fr | **9.30Fr** |
| முத்துச் சம்பா 1Kg | 2.50Fr | **1.90Fr** |
| மைசூர்ப் பருப்பு 2Kg | 5.50Fr | **3.40Fr** |
| உடன் ஆட்டிறைச்சிப் பங்கு 1 Kg | | **8.00Fr** |
| உடன் ஆட்டிறைச்சித் துடை 1 Kg | 14.00Fr | **11.00Fr** |
| அதி குளிரூட்டப்பட்ட கோழிக்கால் 2.5Kg | 12.50Fr | **9.90Fr** |

எமது அனைத்து உணவுப் பொருட்களும் அதி குறைந்த விலையில் எமது மக்களுக்காக விற்கப்படுகின்றன. மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு விஷேட கழிவு உண்டு
வாருங்கள்! நுகருங்கள்!! நது புகழ்பரப்ப நல்லாதரவைத் தாருங்கள்!!!

**Nathu Enterprises(PVT) LTD**
**Importers & Exporters of Textiles, Grocery, Sea Foods, Fruits, Vegetables & Home Needs**
**Attinghausen Str 20, Breiterain, 3014 Bern**
**Tel: 0041 31 332 1010 - 0041 76 539 58 01**

21

# மாவீரச் செல்வங்கள்

மாவீரர்கள் எங்கள் காவிய நாயகர்கள்
தலைவன் படையில் அணி திரண்டவர்கள்.
தளராத துணிவோடு கயவர் கதை முடித்தவர்கள்.
எம் மாவீரர்களின் புகழ் எட்டுத்திக்கும் நிலைத்திருக்கும்.

இன்னல் பல கண்டு இதயம் நொந்தவர்கள் மாவீரர்கள்
இதயக் கோயில்களில் என்றும்
பூசிக்கப்படவேண்டியவர்கள்.
தணியாத தாகம் கொண்டவர்கள் மாவீரர்கள்.
தமிழ் அன்னை பெற்றெடுத்த புதல்வர்கள் எம்
மாவீரர்கள்.

மந்திபோல் குந்தியிருந்து எம் சந்திகளில் சதி செய்த
மந்திகளிடம் கொட்டம் அடக்கியவர்கள் எம் மாவீரர்கள்.
இடி இடிக்க வந்த பகையவனை வெடியதிர
பொடியாக்கியவர்கள்
வெஞ்சினம் கொண்டு வந்த பகையவனை அஞ்சி ஓட
வைத்து
வெஞ்சமராடியவர்கள் எம் மாவீரர்கள்.

சிறிடுவர் பகை எரிக்கும் வேளையில் பஞ்சு
மெத்தையிலும்
பட்டணத்திலும் வாழ்ந்த எம் உறவுகளை கஞ்சிக்கு வழி
இல்லாது கெஞ்ச வைத்த கயவனை கதிகலங்கிட
குறிவைத்தவர்கள்
தன்னையும் மறந்து தன் உறவையும் மறந்து
சமராடியவர்கள் எம் மாவீரர்கள்.

எம் வீரர்களின் பணி ஓய்ந்ததுவோ இல்லை இல்லை
மீண்டும் வருவார்கள்
அம்மணியின் பொன் மொழி கேட்டு செம்மணியில்
மண்மணி தோண்டிய
கயவர்களுக்கு புதைகுழி தோண்டிட மீண்டும்
வருவார்கள்.
சிங்களக் காடையரின் கொட்டம் அடக்க ஒவ்வொரு
நாளும்
இம்மண்ணில் பிறப்பெடுப்பவர்கள் எம் மாவீரர்கள்.

சிட்டுக் குருவிகளாக சிறகடித்து புள்ளிமான்போல்
துள்ளித்திரிந்தவர்கள் எம் மாவீரர்கள்.
பாடித்திரிந்த பறைவைகளே கூடித்திரிந்த குயில்களே
உம் பூமுகம் காண துடிக்கின்றோம் கூவிப் பறந்தீர்களோ
குயிலாக

தாய்மண் காக்க தன்னுயிர்களை ஈகம் செய்து
கல்லறைத் தொட்டில்களில் கண் துயிலும்
எம் வீரமைந்தர்களே விண்ணேகிய விடிவெள்ளிகளே
வீண் போகாது உங்கள் கனவுகள்

எம் தேசத்தில் ஏற்றிவைத்த தீபங்கள் எம் மாவீரர்கள்
நிம்மதியாக விழி மூடித் தூங்குங்கள்!
நிச்சயம் மலரும் தமிழீழம்.

ஆக்கம்:
**போராளி சுமித்திரா**
நவம் அறிவுக்கூடம்.

# சித்திரவதை செய்யப்பட்டோருக்கு ஆதரவான ஐ.நா. சர்வதேச தினம்

சித்திரவதை என்பது பரவலாக உலகம் பூராகவும் பலவிதப்பட்ட முறைகளில் நடைபெறுகின்றன. பெரும்பாலாக சுயநிர்ணய போராட்டம், ஆயுதப் போராட்டம் நடைபெறும் நாடுகளில் போராடுபவர்களின் அரசியல் சிந்தனைகள், குறிக்கோள்கள், முயற்சிககளை முறியடிக்கும் எண்ணத்துடன் சித்திரவதைகள் செய்யப்படுகின்றன.

ஐக்கிய நாடுகளின் சபையின் சித்திரவதைக்கான சாசனம் 1987ம் ஆண்டு யூன் மாதம் நடைமுறைக்கு வந்ததிலிருந்து இன்று வரை 136 அங்கத்துவ நாடுகள் சாசனத்தை ஏற்று கையெழுத்திட்டுள்ளன. இச் சாசனத்தின் சாரம் 2.2 கூறுவதாவது: 'சித்திரவதை செய்வதை எந்தவொரு நாடும் யுத்த சூழ்நிலை, உள்நாட்டு குழப்பங்கள், அவசரகால நிலைமைகள் போன்றவற்றை காரணம் காட்டி நியாயப்படுத்த முடியாது' என்பதே.


ஐக்கிய நாடுகள் சபையின் 'சித்திரவதைக்கு எதிரான குழுவின் 27வது, 28வது கூட்டங்களில் சிறீலங்காவில் திட்டமிடப்பட்ட சித்திரவதை செய்வதற்கான ஆதாரங்கள் நன்கு காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது'. சிறீலங்காவில், 1979ம் ஆண்டு யூலை 20ம் திகதியிலிருந்து நடைமுறையில் உள்ள 'பயங்கரவாத தடைச்சட்டம்', கைது செய்யப்பட்டோர் சித்திரவதைக்கு ஆளாக்கப்படவும், சித்திரவதை மூலம் பெறப்பட்ட வாக்கு மூலங்களை கைது செய்யப்பட்டோருக்கு எதிராக நீதிமன்றங்களில் முன்வைக்கவும், சித்திரவதை செய்யும் அரச படைகள் தண்டனையிலிருந்து தப்பி கொள்ளவும் வழிவகிக்கிறது.

இலங்கைத் தீவில் தமிழர்களின் தாயகப் பிரதேசமான வடக்கு கிழக்கில் கடந்த இருபது வருடங்களாக நடைபெற்ற ஆயுதப் போராட்டத்தை காரணம் கூறி, சிறீலங்கா அரச படைகள் தமிழ் மக்களை கைது செய்து பலவிதப்பட்ட தடுப்பு முகாங்களில் மிகக் கொடூரமான சித்திரவதைக்கு ஆளாக்கப்படுவதும், அவர்களுக்கு புரியாத சிங்கள மொழியில் அவர்களின் வாக்கு மூலத்தை பெறுவதையும் பல அரச சார்பற்ற நிறுவனங்களின் கண்டனத்துக்கு ஆளானது இங்கு குறிப்பிடத்தக்கது.

இப்படியாக சித்திரவதை செய்யப்பட்டோரின் சில தகவல்கள், ஐ.நா சபை மனித உரிமை அறிக்கைகளில் நன்கு பதியப்பட்டவை. தமிழ் மக்கள் மீதான சித்திரவதைகளை சிறீலங்காவின் அரச படைகளான பொலிஸ், இராணுவம், கடற்படை போன்றவற்றுடன் சிறீலங்கா அரசின் கூலிப் படைகளான சில தமிழ்க் குழுக்களும் மேற்கொள்கின்றனர். சித்திரவதை செய்வதற்கென சில விசேட அரச படை அதிகாரிகள் முன்னணியில் உள்ளனர். இப்படியாக சித்திவைதை மேற்கொள்வோருக்கு சிறீலங்கா அரசு வேலை உயர்வும் நல்ல சலுகைகளை பரிசாக வழங்குவதும் சிறீலங்காவில் நடைமுறையில் இருந்து வருகிறது!

இதற்கு நல்ல உதாரணமாக சிறீலங்காவின் ஆவுஸ்திரேலியா தூதுவரான மேஜர் ஜெனரல் ஜனாக பொரோ உள்ளார். இவர் யாழ். குடா நாட்டில் 1995-1996ம் ஆண்டு காலப் பகுதியில் காணமல் போன 600 பேரை கைது செய்தும், கொடூரமான முறையில் சித்திரவதை செய்தும், கொன்றும் செம்மணி புதைகுழிகளில் புதைத்தவர்!

சிறீலங்காவில் தமிழர்களை சித்திரவதை செய்தும் தடுப்புக் காவலில் கொல்வதும் ஓர் நீண்ட சரித்திரம். 1983ம் ஆண்டு யூலை 27-28ம் திகதிகளில், 53 தமிழ்க் கைதிகள் கொழும்பிலுள்ள வெலிக்கடை சிறைச்சாலையினுள், சிங்கள கைதிகளினால் சித்திரவதை செய்து படுகொலை செய்யப்பட்டனர். 1995ம் ஆண்டு யூன் மாதம் கொழும்பில் கைது செய்யப்பட்ட 27 தமிழ் இளைஞர்கள் சித்திரவதையின் போது கொல்லப்பட்ட போது அவர்கள் பிரேதங்கள் பொல்கொட ஏரியினுள் வீசப்பட்டன. 1996ம் ஆண்டில் 1,650 தமிழ் அரசியல் கைதிகள்



இலங்கை தீவின் தெற்கில் உள்ள தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டதாக பதிவாகியிருந்தது. இவர்கள் யாவரும் சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டவர்களே!

2000ம் ஆண்டு ஒக்டொபர் மாதம் 27 தமிழ் இளைஞர்கள் பிந்துனுவெவ தடுப்பு முகாமில் சிங்கள பொது மக்களினால் வெட்டி கொல்லப்பட்டனர். அரச படைகளினால் பாலியல் வன்முறைக்கு ஆக்கப்படும் தமிழ் பெண்களும் சித்திரவதைக்கு ஆளாக்கப்படுபவர்களே! பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்படும் எல்லா தமிழ் பெண்களும் கலாச்சார காரணங்களுக்காக முன்வந்து முறையிடுவதில்லை. இப்படியாக ஏராளமான சம்பவங்கள் நடைபெறுகின்றன. ஆனால், இன்றுவரை சிறீலங்கா அரசு எத்தனை சித்திரவதையாளரை நீதிமன்றத்தில் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தியுள்ளது?

கடந்த ஆண்டு ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா. உப மனித உரிமை ஆணைக்குழுவில் உரையாற்றிய ஓர் அரச சார்பற்ற நிறுவனம் கூறியதாவது, 'சிறீலங்காவில் சமாதான பேச்சு வார்த்தைகள் சித்திரவதையை எவ்விதத்திலும் தடுத்து நிறுத்தவில்லை, சித்திரவதை தொடர்ந்து நடைபெறுகின்றன'! ஆகையால் சிறீலங்காவின் தேசிய மனிதர் உரிமை ஆணைக்குழு என சொல்வோர், இவ்விடயத்தில் மிகுந்த அக்கறை காட்டவேண்டிய அவசியம் உள்ளது.

தேசிய மனிதர் உரிமை ஆணைக்குழுவினர் அரச படைகள் சித்திரவதையை மேற்கொள்வதை தடுத்து நிறுத்த முயற்சிப்பது மட்டுமல்லாது, சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டோருக்கு

(தொடர்ச்சி 28ம் பக்கம்)


**நேசன் Cash and Carry**



இலங்கை, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் கடலுணவு வகைகள் உடன் மரக்கறிவகைகள் தொலைபேசி அட்டைகள் மற்றும் தமிழ் மக்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் மிக மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
இலங்கை இந்தியா பசுமையான மரக்கறி வகைகள், கடல் உணவு வகைகள், பதப்படுத்தப்பட்டுள்ள உணவுகள், பழவகைகள்,
V.D.O C.D க்கள் விற்பனைக்கும், வாடகைக்கும் மற்றும் உங்களுக்கு தேவையான பொருட்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.


**217, The Broadway, Southall, Middiesex, UB1 1NB - Tel: 020 8574 4018 Fax: 020 8574 4035 Mobile: 07904100201**


தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பிரான்ஸ் கழகம் நடாத்தும் தமிழர் விளையாட்டு விழா கடந்த 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பாரிசின் புறநகர்ப் பகுதியான L'Aire des vents (Dugny) Parc départemental de La courneuve 10,000ற்கும் அதிகமான தமிழ் மக்கள் கலந்துகொண்ட இந்த விழாவில் சிறப்பு விருந்தினராக பிரான்சின் முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சரும் தற்போது பிரான்ஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக இருப்பவரும் சென்-சென்ரெனி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான திருமதி மரி ஜோர்ஜ் வூவ்பே Mme. Marie-George BUFFET கலந்துகொண்டார். அவருடன் சென்-சென்ரெனி பிரதேசசபைத் தலைவர் திரு ஏர்வே பிறேமியும் Mr Hervé BRAMY அச்சபையின் உபதலைவர் திருமதி ஜோசையின் பேர்னா Mme. Josiane BERNARD, டுனி நகர முதல்வர் திரு. ஆந்திரே வெஸ்சியர் Mr. André VEYSSIERRE, டுனி நகரசபை உறுப்பினரும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் பிரான்ஸ் கிளைத் தலைவருமான திரு. அலன் ஆனந்தனும் Mr. Alain ANANADANE கலந்துகொண்டனர். இந்த விழாவில் தொடக்க நிகழ்வாக பிரெஞ்சு கொடியை டுனி நகரசபை உறுப்பினர் அலன் ஆனந்தனும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் கொடியை M+T நிறுவன அதிபர் திரு. இராஜரட்ணம் சூசைராஜாவும் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து உதைபந்தாட்டம், கயிறிழுத்தல், முட்டியுடைத்தல், தாச்சிப்போட்டி, தலையணைச்சண்டை, குண்டெறிதல் போன்ற பல்வேறு விளையாட்டுக்கள் சிறப்புற நடைபெற்றன. காலை 9 மணிக்கு ஆரம்பித்த இந்த விளையாட்டு விழா இரவு 10 மணிவரை நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.















# பிரான்ஸ் - தமிழர் விளை









## நல்வாய்ப்பு சீட்டிழுப்பில் வெற்றிபெற்ற இலக்கங்கள்

முதல் பரிசு இலக்கம் 001311

ஆறுதல் பரிசு இலக்கம்

001182
003303
003836
002689
003635

தொடர்புகளுக்கு
01 40 38 30 74





சிறுகதை

# ஊனமது நல் அழகே

(2)

(சென்ற இதழ் தொடர்ச்சி)

என்னுடைய நல்ல அம்மாவும் எனக்கு தேவதைகள் தந்த பரிசு என அப்பொழுதுதான் எனக்கும் புரிந்தது. என் அம்மாவின் கையை இறுகப்பற்ற வேண்டும் போல் தோன்றியது. எப்பொழுதுமே என் உணர்வுகளை புரிந்து கொள்ளும் அம்மா அன்றும் என் கையை தன்கைகளுக்குள் இறுகப்பொத்தி நான் எப்பொழுதும் உன்னுடன் இருக்கின்றேன் என எனக்கு உணர்த்தினா. என் அன்பு அம்மா உங்கள் அன்பினால்தானே என் ஒவ்வொரு நிமிட துளிகளும் உயிர்ப்புடன் இயங்குகின்றன. என் நன்றியை வார்த்தைகளால் கூற முடியாமல் கண்களால் உணர்த்தினேன்.

குளிர் காலம் மறைந்து இலைகளெல்லாம் துளிர்விட தொடங்கியது. என்னை வெளியில் அழைத்து செல்வதற்காக ஆயத்தப்படுத்திக்கொண்டிருந்த அம்மாவை தொலைபேசி மணி அடித்து அழைத்தது. தற்செயலாக என் காதுகளில் என் பெயர் அடிபட என்னவாக இருக்குமென உற்று கேட்கத்தொடங்கினேன். எனது பாடசாலை அட்டவணைகளை போக்குவரத்தை பற்றி பேசிக்கொண்டிருந்ததை கேட்டு என் இதயம் வேகமாக அடிக்கத்தொடங்கியது. இந்த அம்மாவும் அப்பா சொல்லிறதைதான் கேக்கிறா. அம்மா என்னை பாடசாலைக்கு அனுப்பாதீங்க எனக்கு உங்களை பிரிந்து ஒரு நிமிடம் கூட இருக்கமுடியாது என் உணர்வுகளை புரிந்து கொள்ளும் நீங்களே இப்படி செய்யலமா அம்மா? எனக்கு அழவேண்டும்போல் இருந்தது. ஆனால் அம்மா எதுவும் நடக்காதமாதிரி என்னை பார்த்து மெல்லசிரித்தா. ஆனால் நான் சிரிக்கவேயில்லை.

ஆதவன் நாங்கள் இப்போ வெளியேபோவம் அங்க கலர்கலா நிரம்ப பூக்கள் பூத்திருக்கும். அதையெல்லாம் யாருக்கும் தெரியாமல் நாங்கள் மட்டும் ரசிப்போம் என்ன. எங்க சிரியுங்க பார்ப்பம் என கூறிய அம்மாவை நான் முறைத்து பார்த்தேன். சக்கர நாற்காலியை தள்ளியபடி அம்மா பேசத்தொடங்கினா.

ஆதவன் குஞ்சு நீங்கள் அம்மாவோடயே இருந்தா எப்படி படிக்கிறது? படித்து கெட்டிக்கார பிள்ளையா வரவேனும் அதை பார்த்து அம்மா சந்தோஸப்படவேணும்.

நான் எப்படி கெட்டிக்காரனா வருவது? அம்மாவும் எல்லோரையும்போல இப்ப பொய் சொல்ல பழகிவிட்டா. எனக்கு கோபம் கோபமாக வந்தது.

அங்க உங்கள மாதிரி நிரம்ப பிள்ளைகள் வருவினம். அவையளோட நீங்கவிளையாடலாம், சிரிக்கலாம், அங்க இருக்கிற அன்ரிமார் அம்மா பார்க்கிற மாதிரி பிள்ளையை பார்ப்பினம். என்ன போறீங்களா?

அவையளுக்கும் என்னை போலத்தான் அங்க வர விருப்பமிருக்காது. ஆனா அவையளின்ர அம்மாவும் உங்களை மாதிரிதான் இருக்கவேணும்.

என்ன ஆதவன் யோசிக்கிறீங்க? இங்க பாருங்க இது சிவப்பு வெள்ளை மஞ்சள் என பூக்களின் வர்ணங்களை விளக்கி கொண்டு இருந்தா. எனக்குள் வழமைபோல் கேள்வி ஒன்று எழுந்து நின்றது. அம்மா பூக்களின் மென்மையை வாசனையை எல்லாம் கூறினீர்கள். எல்லா வர்ணங்களையும் கொண்ட மலர்களிடம் ஏன் கறுப்பு நிறம் இல்லை? கறுப்பு எல்லோரரலும் வெறுக்கபடும் நிறம் என்பதாலா? அல்லது இவ்வளவு மென்மையான மலர்கள்கூட அந்த நிறத்தை வேண்டாமென்று ஒதுக்கிவிட்டதா? நானும் கறுப்புதானே என்னையும் ஒதுக்கிவிடுவீங்களாம்மா? அப்பாவின் கோரிக்கை நினைவில் உதித்தது. அம்மாவுக்கு தம்பி பாப்பா பிறந்து விட்டால் அவர் நடப்பார், கதைப்பார், சிரிப்பார்... அம்மாவும் என்னை மறந்துவிடுவா இல்லை

அப்பாவின் விருப்பம்போல அந்த விடுதியில் சேர்த்துவிட்டுவிடுவா. எனக்கு அந்த முகம்தெரியாத தம்பி மீது வெறுப்பு இன்னும் அதிகமாகியது. அதைவிட பயமும் அதிகரித்தது. ஆதவன் இங்க பாருங்க எத்தனை பட்டாம் பூச்சிகள் எத்தனை வர்ணங்கள். இந்த பட்டாம் பூச்சிகளில பல இனங்கள் உண்டு அதில ஒரு இனம் எட்டு நாள்தான் வாழுமாம். அம்மாவின் விளக்த்தை எனை மறந்து கேட்டுக்கொண்டு இருந்தேன் அப்போது...

ஹலோ நளினி...! கண்டு கனகாலம். எப்படி இருக்கிறீர்? நல்லா மெலிந்து போனீர் இப்படி சில

உதடுகள் அம்மாவை போலியாக நலம்

சாந்தினி வரதராஜன்
(ஜேர்மனி)

கேட்டபடி விழிகளால் எனை அளந்தார்கள். மனிதர்களின் பார்வைகளில் எத்தனை வகைகள். சிலர் எனை பரிதாபமாக, பலர் அருவருப்பாக தீண்ட தாகதவனாக பார்த்தார்கள். இறைவன் விழிகளை படைத்தது அதன் மூலம் இயற்கையை ரசித்து பிறர் துயருக்காக கண்ணீர் சிந்தி நல்லதை பார்த்து பார்த்ததை மற்றவர்களுக்கு பரிமாறு என்பதற்காகத்தான். எப்பொழுதுமே இயற்கைக்கு மாறக செயல்படும் மனிதனின் கண்களுக்கு நல்லவைகள் எதுவும் தென்படாது. அப்போதும் அப்படித்தான் தன்பெரிய வயிற்றை பிடித்தபடி நின்ற பெண்... வாங்கபோவம் இந்த நேரத்தில இப்படி வலது குறைந்த பிள்ளையை என்னை பார்க்க வைச்சிட்டீங்க பாம்பின் பல்லிலிருந்து வரும் விசத்தைவிட கொடியது சில மனிதர்களின் நாக்கு. அம்மாவின் முகம் அந்த பேச்சால் வாடிப்போனது.

இயேசு நாதர் மனிதர்களின் பாவச்சிலுவையை சுமந்தார் என்பதற்காக அவரை சிலுவையில் அறைந்தார்கள் என அம்மா அடிக்கடி கூறுவா. அதுபோல என்னை வயிற்றில் சுமந்த குற்றத்திற்காக தினம் தினம் வார்த்தை எனும் ஆணி எடுத்து என் அம்மாவின் இதயத்தில் அறைகிறார்களே இறைவா. நீயும் இதை பார்த்துக்கொண்டுதானே இருக்கிறாய். எனக்கு இவ்வளவு அறிவை கொடுத்த நீ அதை வெளிப்படுத்தும் சக்தியையாவது தந்திருக்கலாமே. ஏன் என்னை படைத்தாய்? என்னால் என் அம்மா படும் வேதனை போதும் என் கண்ணீரை துடைப்பதற்கு கூட என் அம்மாவின் உதவிதேவை என்பதால் என்னை கட்டுப்படுத்திக்கொண்டு அம்மவை பார்த்தேன்.

அம்மாவின் கண்களோ கண்ணீரை வடித்தபடி இருந்தது. அம்மா என அழைத்தேன். என்ன என்பதுபோல் இமைகளை உயர்த்தி பார்த்தா. அம்மா எட்டுநாட்கள் வாழும் பட்டாம் பூச்சியே தன்மீது பல வர்ணங்களை பூசியபடி மலர்களின் இதழ்களுக்கு முத்தமிட்டபடி அந்த குறுகிய நாட்களுக்குள் இனங்களை பெருக்கியபடி எவ்வளவு ஆனந்தமாக சிறகடிக்கின்றன. நாங்கள் அதைவிட பல காலம் இணைந்து வாழப்போகின்றோம். இப்படி ஒரு அன்பான இதயத்தோடுவாழும் வாழ்க்கையை அதன் ஒவ்வொரு நிமிட துளிகளையும் அணு அணுவாக ரசித்து வாழ ஆசைப்படுகிறேன் வந்து என் சக்கர நாற்காலியை தள்ளுங்கம்மா....

நான் பாடசாலை செல்லும் நாளும் வந்தது. அன்றைய இரவை விழிப்புடனும் ஏக்கத்துடனுமே கழித்தேன். விடிகாலை பொழுதில் பாடசாலைக்கு வேண்டிய பொருட்களை எடுப்பதும் பையினுள் வைப்பதுமாக பம்பரமாக சுழன்று கொண்டிருந்த அம்மாவை பார்க்க எனக்கு கோபம் கோபமாக வந்தது. என் கோபத்தை எப்படி வெளிப்படுத்துவது என்று சிந்தித்தபடி இருந்தேன். அம்மாவோ என் முகத்தை பார்ப்பதும் தன் வேலையில் மூழ்குவதுமாக இருந்தா. நான் பாடசாலை செல்வதற்கான பஸ்சும் வந்தது. அதில் என்னை இருத்திவிட்டு இறங்கிய அம்மாவை கண்ணீர் அரும்ப பார்த்தபடியே இருந்தேன். அம்மா இப்பவாவது உங்கட மனம் மாறாதா? என என் மனம் இரைஞ்சியது. ஆனால் அம்மாவும் தன் கண்ணீரை கட்டுப்படுத்த முடியாமல் தவித்தபடி இருந்ததை பார்க்க எனக்கு கொஞ்சம் ஆறுதலாக இருந்தது.

என் அம்மா சிறு புள்ளியாக மறைய ஆரம்பித்தா. ஆனால் என் மனதிலோ அம்மா பெரும் விருட்சாமாக வளர்ந்து கொண்டே இருந்தது. எனக்கும் அம்மாவுக்கும் இடைவெளியை பெருக்க ஆரம்பித்த பஸ்சின் மீதும் எனக்கு வெறுப்பு ஏற்பட்டது. பாடசாலையில் என் அம்மா இல்லாத வெறுமை என் மனதை பாலைவனம்போல் ஆக்கியது. ஆனால் இந்த உலகில் என்னைப்போல் பல பிள்ளைகள் உள்ளார்கள் என்ற உண்மை தெரிய வந்தபோது மனதுக்குள் மெல்லிய மகிழ்வு அரும்பியது. இப்பொழுதெல்லாம் இரண்டு மணித்தியலாம் அம்மாவை பிரிந்திருப்பதற்கு என்னை பழக்கப்படுத்திக்கொண்டுவிட்டேன். பிரிவது பின்பு இணைவது அதுகூட மகிழ்ச்சியாகத்தான் இருந்தது. இங்கு உள்ள பிள்ளைகளின் கண்கள் எதையோ தொலைத்துவிட்டு தேடுவதைபோல் எனக்கு தோண்றின. என்னவாக இருக்கும்? ஓ இவர்களும் என்னைப்போல் தேவதை கொடுத்த அம்மாவை தேடுகிறார்கள் என புரிந்து கொண்டேன்.



இவர்களின் அம்மாவை பார்க்க வேண்டும் என்ற ஆசை எனக்குள்ளும் வளர ஆரம்பித்தது.

இப்பொழுதெல்லாம் அம்மாவிடம் ஏதோ ஒரு மாற்றம் இருப்பதுபோல் எனக்கு தோண்றியது. அம்மா மட்டும் அல்ல அப்பாவிடமும்தான். முன்புபோல் எரிந்து விழுவதில்லை அம்மாவிடனும் என்னுடனும் அன்பாக நடக்கிறார். அம்மாவின் வயிறு ஏன் இப்படி பெரிதாக இருக்கிறது. ஏதாவது வருத்தமாக இருக்குமோ? அம்மாவிடம் இதை எப்படி கேட்பது என்று யோசித்தபடி இருந்த எனக்கு அம்மா உணவு ஊட்டும் பொழுது அந்த சந்தர்ப்பம் கிடைத்தது. அம்மாவின் வயிற்றையும் முகத்தையும் மாறி மாறி பார்த்தபடியே இருந்தேன். என் பார்வையின் அர்த்தத்தை புரிந்து கொண்ட அம்மா. ஆதவன் நான் பிள்ளைக்கு ஒரு விஷயம் சொல்லப்போகிறன். என்ன என நான் விழிகளால் வினாவினேன்?

உங்களுடன் விளையாட கதைக்க ஒரு தம்பி பாப்பா பிறக்கப்போகிறான். குஞ்சுக்கு சந்தோஷம்தானே? அம்மா சிரித்தபடி என் முகத்தை பார்த்தா.

எனக்கு என் சக்கர நாற்காலி சுற்றுவதுபோல் பிரமை ஏற்பட்டது....

(அடுத்த இதழில் நிறைவுறும்)




S.A. Nathan Credit & insurence Bern

சுவிசில் 14 வருட அனுபவத்தோடு கூடிய பணத்தினை பெற்றுக்கொடுத்து வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெற்று முன்னணி வகிக்கும் ஒரே நிறுவனம் S.A. Nathan Credit

* கடன் பெறுவோருக்கு வங்கி ஆலோசனையுடன் விசேட சலுகை அதிககூடிய பணமா! குறைந்த வட்டி வீதமா! GE capital லா (Pro credit), Swiss Credit ஆ எது வேண்டுமாயினும் நாடவேண்டிய நிறுவனம் S.A. Nathan Credit


* அத்தோடு அனைத்து காப்புறுதிகளும் செய்து கொடுக்கப்படும்.

வங்கி கடன் பெற விரும்புகின்றீர்களா ? B or C or CH உள்ளவர்களின் பணத்தேவையை உடனுக்குடன் பூர்த்தி செய்யக் காத்திருக்கின்றோம்.

S. Atputhanathan (Atputhan) Kaspar str 15/94, 3027 Bern CH. Tel: 031 992 62 14 / Fax: 031 992 62 11 / Natel: 079 208 50 46

பாகம் - 2

20



# வலிகாமம் இருந்து வன்னி வரை

**- கவிஞர் நாவண்ணன்**

அந்தக் குருவானவர் ஜோர்ச் அடிகள் எனக்கு தூரத்து உறவினரும் கூட. ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த அவரது உறவினரால் ஆலயம் நிறைந்து வழிந்தது. நாம் அவரைச் சந்தித்தோம். ஓர் இரவு அங்கே தங்கிவிட்டு மறுநாள் புறப்பட்டு மீண்டும் புதுக்குடியிருப்புக்கு வந்தோம்.

தமிழீழத்தில் விருந்தோம்பலுக்கு பேர்போன இடம் தென்தமிழீழம் என்பது எனது கருத்து. ஆனால் நாம் சென்ற இடங்களில் எமக்குக் கிடைத்த வரவேற்பும், உபசரிப்பும் அதற்குச் சற்றுக் குறைவானதாகக் காணப்படவில்லை. சென்ற இடங்களில் பாலும், தயிரும், பலா, வாழை, மாங்கனிகளும் அத்தியாதி.... அத்தியாதி...

சில இடங்களில் கட்டாயப்படுத்தி `சாப்பிட்டுவிட்டுத்தான் போக வேண்டும்' என்ற அன்புக் கட்டளைக்கண்டு என் மகள் வியந்தவளாக `என்னப்பா இது?' என்றாள். `இதுதான் வன்னி' என்று பதில் கூறினேன் அவளுக்கு.



வன்னிக்கு மக்கள் இடம் பெயர்ந்த பின்னர் கிடுகிடு என விலையேறிய பொருட்களில் கிடுகும் ஒன்று. இடம் பெயர்ந்து வந்தவர்கள் தத்தமக்கு குடிசைகள் அமைத்துக்கொள்ள கிடுகுகள் இன்றி அலைந்தனர். நவம்பர், டிசம்பர் மாதங்கள் தென்னையில் இருந்து ஓலைவிழும் காலமும் அல்ல. இலட்சக் கணக்கானோர் புதிதாகக் குடிசைகள் அமைப்பதற்கு போதிய அளவு கிடுகுகளும் கிடைக்கவில்லை. அதுதான் ஒருமட்டை (இரண்டு கிடுகுகள்) ரூபாய் முப்பதுவரை விற்கப்பட்டன. அப்படிக் கூடிய விலைகொடுத்து கிடுகுவாங்குவதற்கு இடம்பெயர்ந்து வந்தவர்களிடம் பணவசதியும் இருக்கவில்லை. காலம்வேறு மாரி காலம். இதுவே மக்கள் முதன் முதலில் சந்தித்த பெரும் துன்பம்.

மழையும், வெள்ளமும், குளிரும் நுளம்பும் மக்களை மலேரியா நோய்க்குத் தள்ளிவிட்டன. முன்னைய அரசின் காலத்தில் பொருளாதாரத்தடையும், உணவு நெருக்கடியும் இருந்தன என்றாலும் தொண்டர் நிறுவனங்கள் தேவையானவற்றை எடுத்து வந்து மக்களுக்கு உதவுவதற்கு தடையெதுவும் இருக்கவில்லை. ஆனால் சந்திரிகா அரசு மனிதநேய மறுப்பின் உச்சக்கட்ட நடவடிக்கையாக இடம் பெயர்ந்தோருக்கு நிழல் அமைத்துக் கொடுக்க தொண்டர் நிறுவனங்களால் கிழக்கில் இருந்து கொண்டுவரப்பட்ட கிடுகுகள், மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் கொண்டுவந்த கூடாரங்களைத் கூடத்தாண்டிக் குளத்தை தாண்டிவரமுடியாமல் தடை செய்தது. இடம் பெயர்ந்த மக்கள் வீதிகளிலும், தாழ்வாரங்களிலும், கோவில்களிலும், பாடசாலைகளிலும், நீரிலும் சேறுசகதியிலும் ஏங்கி நோயுற்று நிற்க. இவர்களுக்காகக் கொண்டுவரப்பட்ட கிடுகுகளும், கூடாரங்களும் வவுனியாவில் தேங்கிக்கிடந்தன.

எமது சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு மீண்டும் உருத்திரபுரம் 8ஆம் வாய்க்காலுக்கு வந்து சேர்ந்தோம். சுமார் எண்பது மைல்கள் சைக்கில் ஓட்டம். பெற்றுவந்த அனுபவங்கள், உபசரிப்புகளும் காரணங்கள் போலும் உடல் அலுப்பே தெரியவில்லை. அச்சக வேலையுடன் டிசம்பர் 31ம் நாளுக்கு முன்னர் ஆரோபணத்தைவிட்டு வெளியேறிவிட வேண்டும் என்று முயற்சித்துக்கொண்டு வந்தேன். மகரகம சென்றிருந்த என்னவளும், மகளும் திரும்பிவந்துவிட்டனர்.

கிளிநொச்சியிலே இருக்கிற கலைஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்களுக்கான ஒரு ஒன்றுகூடல் கலைபண்பாட்டுக்கழக அலுவலகத்தில் நடைபெறவிருப்பதாகவும், அதில் எம்போன்றவர்கள் கலந்து கொள்ளும்படியும் கேட்டிருப்பதாகவும் அறிந்தேன். அதில் கலந்துகொள்வதற்காக நானும் சென்றிருந்தேன்.

அங்கு இடம்பெற்ற கலந்துரையாடலில் கவிஞர் புதுவை இரத்தினதுரை, எனக்கே உரிய பாணியில் சில கருத்துக்களைக் கூறினார்.

`அண்மையிலே ஒருவர் என்னிடம் வந்தார். வந்தவர் போச்சு, போச்சு வன்னியின் பண்பாடு, பழக்கவழக்கங்கள் எல்லாம் யாழ்ப்பாணத்தில இருந்து இடம்பெயர்ந்து வந்தவர்களால் போச்சு' என்று தலையில் அடித்துக்கொண்டார்.

`நான் என்னடாப்பா? என்ன விஷயம் என்று சொல்லிப்போட்டு தலையில அடியன் என்றேன்'

`எங்கட பெண்டுகள் பிள்ளைகள் நிம்மதியாய் குளிக்க முழுகக்கூட முடியவில்லை, றோட்டால போறவன்கள் நின்று வேடிக்கை பார்க்கிறான்கள்'

இதுதான் அவளுக்குக் கவலை கொடுத்த விசயம். வன்னி நிலப்பரப்பு இதை மட்டுமல்ல இதுபோன்ற பலவற்றைச் சந்திக்கத்தான்வேண்டும். இது தவிர்க்க முடியாததுதான். வலிகாமத்தைப் பொறுத்தவரையில வளவைச்சுற்றி ஒருவேலி, வளவுக்குள்ள கிணற்றைச் சுற்றி ஒரு வேலி எனப்பல வேலிகளை அமைத்துக்கொண்டு அதற்குள்ளே வாழ்க்கை நடாத்திப் பழக்கப்பட்டவர்கள்.'

`கிணற்றடியில் சகோதரியோ, ஏன். பெற்ற தாயோ குளிக்கும் வாளிச்சத்தம் கேட்டால்கூட ஒரு ஆண் கிணற்றடிக்குப் போகத் தயங்கும் பண்பாடு. பருவமடைந்த மகள் குளிக்கும் இடத்துக்கு பெற்ற தந்தைக்குப் போகத் தயக்கம். இத்தகைய கட்டுப்பாடான பண்பாட்டில் வளர்ந்துவிட்டவன் இன்று வன்னிக்கு வந்திருக்கிறான். 'இங்கு அணைகளிலும், வாய்க்கால்களிலும், குளங்களிலும் இந்தக் காட்சிகளை சர்வசாதாரணமாகக் காணும்போது வன்னியின் பண்பாடு அவனை விசித்திரமாகப் பார்க்க வைக்கிறது. இன்றைக்கு நேரே பார்க்கும் இவன் வெளிநாட்டில் இருக்கும் தனது யாழ்ப்பாணத்து நண்பனுக்கு எழுதப் போகின்றான். அங்கே இருந்து வருகிறவன் ஒருவேளை பைனாக்குளரோட வந்தாலும் வருவான் இந்தக் காட்சிகளைப் பார்ப்பதற்கு.

`இந்த இடப்பெயர்வு கலாச்சாரச் சீரழிவை மட்டுமல்ல, கலாச்சார்மாற்றத்தை, ஒரு கலாச்சாரப் புரட்சியையே ஏற்படுத்தப்போகின்றது. வன்னியில் உள்ள நல்ல பண்புகளை வலிகாமத்தவரும், வலிகாமத்தில் இருந்து வந்தவர்களின் பண்புகளை வன்னி மக்களும் ஏற்று வாழத் தொடங்கும்போது இங்கு ஒரு புதிய கலாச்சாரப் பரிணாமம் ஏற்படத்தான் போகின்றது.'

> **கிணற்றடியில் சகோதரியோ, ஏன். பெற்ற தாயோ குளிக்கும் வாளிச்சத்தம் கேட்டால்கூட ஓர் ஆண் கிணற்றடிக்குப் போகத் தயங்கும் பண்பாடு. பருவமடைந்த மகள் குளிக்கும் இடத்துக்கு பெற்ற தந்தைக்குப் போகத் தயக்கம். இத்தகைய கட்டுப்பாடான பண்பாட்டில் வளர்ந்துவிட்டவன் இன்று வன்னிக்கு வந்திருக்கிறான்...**

`சீனாவில் மக்கள் புரட்சியை நடாத்தி வெற்றி கண்ட மாசேதுங் பதினாறு வருடங்களுக்குப் பின்னர்தான் கலாச்சாரப் புரட்சியை ஏற்படுத்த முடிந்தது. ஆனால் தமிழீழத்தைப் பொறுத்த வரையில் அரசியல் புரட்சி நடந்துகொண்டிருக்கும் அதே தருணத்தில் கலாச்சாரப் புரட்சியும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. வேலிக்குள் வாழ்ந்த நாங்கள் வெளி உலகிற்கு வந்துவிட்டோம்.' இந்த இடப்பெயர்வு வெள்ளத்தால் எங்கள் வீண்பெருமைகள், மூடப்பழக்க வழங்கள், தடிப்புகள் யாவும் அடிபட்டுச் செல்லத்தான் போகின்றன.

கவிஞரின் இந்தக் கருத்துகளில் நூறுவீதம் உண்மை இருப்பதை என்னால் உணரமுடிந்தது. வலிகாமம் மக்களின் இடப்பெயர்வு இப்பொழுதுதான் ஏற்பட்டுள்ளது. 1977 ஆம் 1983ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட இனக்கலவரங்களின் பொழுது மலையகத்தில் இருந்து இடம்பெயர்ந்து வன்னியில் வந்து குடியேறிய மக்கள் இந்த மண்ணுக்கு உரியவர்களாகவே தம்மை மாற்றிக்கொண்டது மட்டுமல்ல. வலிகாமத்தில் இருந்து இன்று இடம் பெயர்ந்து வருவோருக்கு வாழ்ந்து காட்டும் முன்னோடிகளாகவும் திகழ்கின்றார்கள்.

1990 ஆம் ஆண்டில் வன்னி மக்களே வன்னிக்குள் இடம்பெயர்ந்து குடியேறினர். சிலர் கடல்தாண்டி தமிழகம் சென்றனர். மன்னார், மாந்தை, செட்டிகுளம், வவுனியா போன்ற இடத்தவர்கள் ஒன்று சேர்ந்த கலவைக் களமாக மாறிய மடுத்திருப்பதியில் அமைக்கப்பட்டிருந்த அகதி முகாம்.

பழக்க வழக்கங்களில், கல்வித் தகமைகளில், தொழில் ரீதியில் பேச்சு வழக்கில், நாகரீகத்தில், சமயங்களில் சாதி, சமூகப் பிரிவுகளில் எல்லாம் முற்றாக முரண்பட்ட பல்வேறு மக்களின் கூட்டுச் சமூகமாக மாறியது அந்த முகாம். தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் நீடித்த அவர்களின் அகதி முகாம் வாழ்க்கை அவர்களிடையே பாரிய மாற்றங்களை ஏற்படுத்தின. புதிய உறவுகளை, புதிய பண்பாடு பழக்க வழக்கங்களை, புரிந்துணர்வுகளை, சமூகங்கள் கலந்த காதல் திருமணங்களை, அவர்களிடையே உருவாக்கி பழைய சம்பிரதாயங்களை உடைத்தெறிந்தன. அதன்பயன் அவள் தத்தமது கிராமங்களில் மீளக்குடியேறும்போது பலமாற்றங்களையும், வளர்ச்சியையும் பெற்ற புதிய சமூகமாகப் பரிணமித்துள்ளனர் என்பது யதார்த்தமாகும்.

இயற்கையோடு இணைந்து வாழப் பழகிவிட்டவர்கள் வன்னி மக்கள். இதனால் வலிகாமத்தில் இருந்து இடம் பெயர்ந்து வந்தவர்களில் அடிப்படைத்தேவைகள் பல ஆடம்பரமானவையாகவும், அநாவசியமானதாகவும் வன்னி மக்களின் பார்வைக்குத் தோன்றியதில் வியப்பில்லை.

சில இடங்களில் `அடுத்தவீடு' என்றால் சுமார் கால் மைல் தொலைவில் இருக்கும். `ஒரு கூப்பிடு தொலை' என்று சிலர் கேலியாகப் பேசியதும் என் காதுகளில் வீழவே செய்தன. இவற்றையெல்லாம் என்னால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை. கவிஞர் புதுவை அன்று கூறியது போல வேலிக்குள் வாழ்ந்து பழகிவிட்ட அவர்களது பட்டணத்து வாழ்க்கையில் பல அம்சங்கள் நாகரீகமானதும், நலமானவையும்கூட. வன்னியில் உள்ள நல்லவற்றை வலிகாமம் எப்படி உள்வாங்கி வாழவேண்டுமோ அதே போன்று வலிகாமம் சுமந்து வந்துள்ள நல்லனவற்றை ஏற்று வன்னி வளர்ச்சி பெறவேண்டும். ஒவ்வொரு மண்ணிலும் அவற்றுக்குரிய பண்பாடுகள் காக்கப்படும் அதே வேளை கிணற்று வாழ்வை உலகம் என்று எண்ணித் திருப்திகொள்ளமுடியாது.

கிளிநொச்சியில் கருத்தரங்கம் முடிந்து உருத்திரபுரம் வரும் வழியில் ஜெயந்தி நகரில் எதிர்பாராத விதமாக ராமசேதுவைக் கண்டேன். அவனைக் கண்டதில் பெரும் மகிழ்ச்சி. சுமார் பதினொரு ஆண்டுகளுக்குப் பின்னர் அவனைக் காண்கின்றேன். அன்று கண்ட அதே குறும்புத்தனம், அதே கிண்டல் பேச்சு எந்தவிதமாற்றமும் இல்லை.

*(தொடரும்)*

# தியானமும் ஒருமுகப்படுத்தலும்

`தியானம்' என்றுமே `ஒருமுகப்படுத்தல்' என்ற பொருளைக் கொண்டதல்ல. தியானமும் ஒருமுகப்படுத்தலும் எதிர்த்துருவங்கள். ஒரு முகப்படுத்தலில் (concentration) மனம் ஒடுக்கப்படும். ஒரு குறிப்பிட்ட புள்ளியில் மனத்தைக் குவிக்கும் முயற்சியே ஒருமுகப்படுத்தல் ஆகும். ஒருமுகப்படுத்தலில் ஒரு சில மட்டும் உள்ளடக்கப்பட்டு மற்றவை எல்லாம் விலக்கப்படுகின்றன. தியானமோ (meditation) அனைத்தையும் உள்ளடக்குவது. தியானத்தில் எதுவும் தவிர்க்கப்படுவது இல்லை. தியானத்தில் மனம் ஒடுக்கப்படுவதில்லை. அதில் விழிப்பு நிலை வியாபிக்கும். ஒருமுகப்படுத்தல் மனதிற்கு உரியது. எனவே ஒருமுகப்படுத்தலில் ஈடுபடும் ஒருவருக்குத் தான் ஒரு முகப்படுத்தலில் ஈடுபட்டுக்கொண்டிருப்பது தெளிவாகத் தெரியும். விழிப்புணர்வுடன்

## என்னோடு நான்

### கந்தையா நவரேந்திரன்

நேரடித் தொடர்புடையதே தியானம். `மனமின்மை' தான் தியானம். `நான்' இல்லா நிலையில் நிகழ்வது தியானம். தியானத்திற்கு வழிமுறைகளோ, முன்வரைவோ, எடுகோள் வார்ப்போ, முன்மாதிரியோ, பின்பற்றப்பட வேண்டிய படிவமோ, ஒழுங்கு முறைமையோ கிடையா. மனத்தாலையே ஒருமுகப்படுத்தலைச் செய்ய இயலும். ஒருமுகப்படுத்தல் என்பது ஒரு வலிந்திழுப்பு. அது செறிவான ஓர் அழுத்தநிலை. எனவே இப்பொழுது இல்லாவிட்டாலும் பின்னர்தானும் நாம் இது தொடர்பாய்க் களைப்புறவே செய்வோம். ஒருவராலும் மிக நீண்ட காலத்துக்கு ஒருமுகப்படுத்தலில் ஈடுபட முடியாது. அதில் ஈடுபடும் அந்தச் சொற்ப நேரத்திற்கும் கடும் முயற்சி தேவை. அத்தோடு அதற்குத் தெரிவும் (choice) தேவை. ஆனால் தியானத்தில் முயற்சிக்கும் (effort) தெரிவுக்கும் அறவே இடமில்லை. தியானம் தொடர்ச்சியாகப் பலமணி நேரங்களுக்குக் கூட நீடிக்கக்கூடியது. ஏனெனில் அது ஓர் அமைதியான ஓய்வாகும்.

துயரம் ஏற்படும்போது அதனை நோக்கித் தியானிக்க வேண்டும். இதை விடுத்துத் துயரை ஒழித்துக்கட்ட அவசரப்படக் கூடாது. அதேபோல் துயரை மறப்பதற்காக வேறு ஏதாவது ஒரு செயலில் ஈடுபடும் முயற்சியில் இறங்குவதற்கும் நாம் அவசரப்படக்கூடாது. இப்படியெல்லாம் செய்ய முனைவதால் நாம் எமக்குக் கிடைத்த ஓர் அரிய சந்தர்ப்பத்தை இழந்துவிடுவோம். ஏனெனில் துயரத்திற்கெனச் சொந்த ஆழமும், அழகும், சுவை நுகர்வும் உள்ளன. நாம் அதிலிருந்து தப்பி ஓட முயற்சிக்காமல் அதனுடன் நல்ல உறவுகொண்டு ஆறுதலாகச் சேர்ந்து வாழப்பழக வேண்டும்.

துயரம் அப்படியே இருக்கட்டும். நாம் அதை உணர்ந்து மகிழுவோம். துயரம் எமது மெய்ம்மையின் ஒரு வித மலர்ச்சியே. துயரத்தின் மீது தியானிக்கும்போது, துயரத்தின் இரகசியங்கள் வெளிவரும். அவை எங்கள் தேடலுக்கு மிகவும் அவசியமானவை- தவிர்க்க முடியாதவை. துயரமானது தனது இரகசியங்களை வெளிக்காட்டிய பின்பு தானாகவே மறைந்துபோகும். துயரத்தின் மறைவில் மகிழ்ச்சி வியாபிக்கும்.

ஒரு விதையை மூடியிருக்கும் கோது போன்றது துயரம், கோது விதையைப் பாதுகாக்கும். கோது விதைக்கு எதிரியல்ல. விதையானது மண்ணுக்குள் புதைக்கப்பட்ட பின்பு அதன் மேல்கோது அழுகி விழுகிறது. அதன் பின்புதான் தளிர் முளையிடுகிறது. அதுபோலவே துயரம் மகிழ்ச்சியாகவும், சினம் கருணையாகவும், அவா பிறருடன் உள்ளதைப் பகிர்ந்து கொள்ளும் பண்பாகவும் தளிர் விடுவதை அவதானிக்கலாம். இவ்வாறே நாம் கற்பனை செய்து அஞ்சும் நரகம் சுவர்க்கமாகவும், நஞ்சு அமிர்தமாகவும் மாறும். இவ்வாறே நேர்படிவம் எதிர்மறையின் பின்னால் மறைந்து இருக்கிறது. எதிர்மறையும் ஒருவித கவசமேயாகும்.


ஒரு கிணறு தோண்டப்படும்போது முதலில் சேறும் சகதியுங் கலந்த அழுக்கான நீரே வெளியேறும். பிறகு போகப்போகச் சுத்தமான நீர் வெளியாகும். இதே வகையில் நாம் ஒவ்வொருவரும் எம்முள் இருக்கும் கிணற்றைத் தோண்டவேண்டும். முதலில் எதிர்மறையான படிவமும் அதன் முடிவில் அதைத் தொடர்ந்து நேர்படிவமும் வெளிவரும். நாம் எதிர்மறையுடன் செயற்பட்டால் தான் நேரிய படிவம் சன்மானமாய் வந்து சேரும். தியானத்தில் காண்பான் காணும் பொருளாகின்றான். நான் தான் துயரம். துயரமும் நானும் ஒன்றே என்று நான் உணரும்போதுதான் பேருண்மையைக் கண்டுபிடிக்கும் தறுவாய்க்குத் தள்ளப்படுவேன். அக்கணத்தில் எனது துயரம் சூரியனைக் கண்ட பனித்துளிபோல் மறையும். ஒரு குறிப்பிட்ட தறுவாயில் ஒரு குறிப்பிட்ட தீவிர முனைப்பில் எம்முள் தோன்றும் எதிர்மறைப் படிவம் மறையும். அந்த மறைவுடன் நேர்படிவம் மலரும்.

எம்முள் தோன்றும் சினம், துயரம், பொறுமையின்மை போன்ற குணங்களை நாம் எம்முள் இருக்கும் எதிரிகளாய்க் கொண்டு அவற்றை மூர்க்கத்தனமாக விரட்டியடிப்பதற்கு எம்மைவிடப் பெரியவர்கள் என நினைக்கும் மற்றவர்களின் உதவிகளை நாடுகின்றோம். திருமறை நூல்களின் அறிவுரைகளை நாடுகின்றோம். இது புத்தகத்தை மட்டும் படித்துவிட்டு நீந்தக்கற்பதுபோன்றது. நானே துயரமாய், சினமாய் இருந்துகொண்டு வேறு ஒருவரை உதவிக்கு நாடுகிறேன். என்னால் உருவாக்கப்பட்டதை நான் தானே நீக்கவேண்டும்? இது தியானத்தால் மட்டுமே சாத்தியமாகும். தியானம் என்று சொல்லிக்கொண்டு ஒருமுகப்படுதலைச் செய்வதன் மூலம் நாம் எமது `தான்' என்னும் முனைப்புக்கு உரமூட்டுகின்றோம்.

*தியானத்தில் எதுவும் தவிர்க்கப்படுவது இல்லை. தியானத்தில் மனம் ஒடுக்கப்படுவதில்லை. அதில் விழிப்பு நிலை வியாபிக்கும். ஒருமுகப்படுத்தல் மனதிற்கு உரியது. எனவே ஒருமுகப்படுத்தலில் ஈடுபடும் ஒருவருக்குத் தான் ஒருமுகப்படுத்தலில் ஈடுபட்டுக்கொண்டிருப்பது தெளிவாகத் தெரியும். விழிப்புணர்வுடன் நேரடித் தொடர்புடையதே தியானம். `மனமின்மை' தான் தியானம்.*



நெதர்லாந்தில் கடந்த 19.06.2004 சனிக்கிழமையன்று மாவீரர் வெற்றிக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி – 2004 நடைபெற்றது.





இப்போட்டியில்

1ம் இடத்தினை அம்சர்டாம் தமிழர் விளையாட்டுக் கழகமும்,

2ம் இடத்தினை கோர்ன் சிட்டு விளையாட்டுக் கழகமும்,

3ம் இடத்தினை டென்கெல்ட தமிழர் உதைபந்தாட்டக் கழகமும்

பெற்றுக்கொண்டன





## வன்முறையில் ஈடுபடும் தமிழ்.....

(01ம் பக்க தொடர்ச்சி)

குறிப்பாக இலண்டன் நகரத்தில் கடந்த 2000ம் ஆண்டிற்கும் 2004 எப்ரல் மாதத்திற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 11 தமிழ் இளைஞர்கள் இந்த குழு மோதலில் கொல்லப்பட்டிருப்பதாக ஸ்கொட்லாண்ட் யாட் காவற்துறை உயரதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பிரான்சிலும் இதே காலப்பகுதியில் 30ற்கும் அதிகமான வன் சம்பவங்கள் தமிழ் இளைஞர்களிடேயே இடம்பெற்றதாக உள்துறை அமைச்சு அதிகாரிகள் கூறியுள்ளனர். இந்த இளைஞர்களில் வன் செயல்களுக்கு அரசியல் பின்னணிகள் எதுவும் இல்லாதபோதும் ஆட்கடத்தல், போதைப்பொருள் கடத்தல் மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகள் காரணமாக ஏற்படும் தகறாறுகளே இந்த மோதல்களுக்கு காரணமாக அமைகின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பல குற்றவாளிகள் பாரிசில் அல்லது இலண்டனில் குற்றமிளைத்துவிட்டு கனடா, அவுஷ்திரேலியா போன்ற நாடுகளுக்கு தப்பிச்சென்றிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றும் ஸ்கொட்லாண்ட் யாட் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அண்மையில் சுபேந்தர் இராமச்சந்திரன் என்ற 18 வயது இளைஞரை கொலை செய்துவிட்டு, அவரது சடலத்தை எரியூட்டி வீசியெறிந்த சம்பவத்தை பிரித்தானிய அரசு மிக கடுமையான ஒரு விடயமாகப் பார்ப்பதாக பிரித்தானிய உள்துறை அமைச்சு அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

குறிப்பாக தெற்காசிய நாட்டு இளைஞர்களிடத்தில் அண்மைக் காலமாக வன்முறைகள் அதிகரித்துச் செல்கின்றபோக்கு காணப்பட்டபோதிலும் இலங்கைத் தமிழர்களே அதில் முன்னணியில் இருப்பதாக ஸ்கொட்லாண்ட் யாட் தெரிவித்துள்ளது. இந்த வன்முறையைக் கட்டுப்படுத்துவதற்கு பிரான்ஸ், இத்தாலி மற்றும் கனேடிய காவற்துறையினருடனான கூட்டுச் செயற்திட்டம் ஒன்றை வகுப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் ஸ்கொட்லாண்ட் யாட் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தெற்காசிய அகதிகள் விடயத்தில் இதுவரை இருந்த நெகிழ்வுப்போக்கை இறுக்கி கடுமையான குடிவரவுச் சட்டங்களை அமுலப்படுத்துவது பற்றி றொனி பிளேயருடைய அரசாங்கம் ஆலோசித்து வருவதாகவும் தெரியவருகின்றது. குற்றமிளைப்பவர்களை தண்டனைக்காலம் முடிவடைந்ததும் சிறைச்சாலையில் வைத்தே அவர்களது சொந்த நாட்டிற்கு திருப்பியனுப்புவது பற்றியும் ஆலோசித்து வருவதாக இலண்டன் செய்திகள் தெரிவிக்கின்றன. பிரான்ஸ் அரசாங்கமும் குற்றமிளைக்கும் ஆசிய நாட்டவர்கள் விடயத்தில் கடும் நடவடிக்கைகளை எடுக்க இருப்பதாக அண்மையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் குடிவரவு கொள்கை தொடர்பான கூட்டத்தில் தெரிவித்திருந்தது.

## அமைதி முயற்சி தொடருமா?....

(01ம் பக்க தொடர்ச்சி)

இந்தச் சந்திப்பினை அடுத்து ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர் ஊடகவியலாளர் நடேசன் கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் தம்பையா உட்பட கிழக்கில் இடம்பெற்ற பல படுகொலைச் சம்பவங்களின் சூத்திரதாரியான கருணாவை சிறீலங்கா அரசும் பாதுகாப்பு படைகளும் பயன்படுத்துவதும் பாதுகாப்பதும் சமாதான முயற்சிகளுக்கு பாரிய அச்சுறுத்தலாக இருக்கிறது என்றும் கிழக்கில் இடம்பெறும் சம்பவங்களின் அமைதி முயற்சி தொடர்பான நம்பிக்கையீனத்தை ஏற்படத்தியிருப்பாகவும் குறிப்பிட்டார்.

கிழக்கில் இடம்பெற்ற படுகொலைகள் மற்றும் வன்முறைகள் தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு விசாரணை நடத்த வேண்டும் என்று தாம் கோரியிருப்பதாகவும் தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் துறுண்ட் பியுறா ஹொவ்ட தலைமையிலான பிரதிநிதிகள் நால்வரும், விடுதலைப் புலிகளின் சார்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன் ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டார்கள்.

## கருணாவுடனான நெருங்கிய தொடர்பு
### பலகலவுக்கு சேவை நீடிப்பு கிடைக்கவில்லை

கருணாவுடன் கொண்டிருந்த நெருங்கிய தொடர்பினாலேயே, சிறீலங்காவின் படைத்துறை தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகலவுக்கு பதவி நீடிப்பு வழங்கவில்லையென கொழும்புச் செய்திகள் தெரிவித்துள்ளன. நாளை 30ம் திகதி லெப்.ஜெனரல் பலகல ஓய்வு பெறுகின்றார். புதிய தளபதியாக மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட நியமிக்கப்பட்டுள்ளார்.

இராணுவத் தளபதியாக மூன்றரை வருடங்கள் கடமையாற்றிய நிலையில், மேலும் 6 மாதங்கள் சேவை நீடிப்பு வழங்கினால் தளபதி பதவியில் 4 வருட சேவையை பூர்த்தி செய்ய முடியுமென பலகல கருதினார். இதற்கான கோரிக்கையை அவர் விடுத்த போதிலும், சிறீலங்காவின் அரசுத்தலைவர் சந்திரிகா குமாரதுங்கா இதனை நிராகரித்து விட்டார்.

கருணாவுடன் பலகல நெருங்கிச் செயற்படுவதாக தொடர்ச்சியாக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வந்ததால் இது சமாதான முயற்சிகளைத் தொடர்வதில் பெரும் சிக்கலை ஏற்படுத்துமென உணர்ந்ததாலேயே சந்திரிகா இவரது சேவை நீடிப்பை இரத்துச் செய்ததாகக் கூறப்படுகிறது. ஐக்கிய தேசிய முன்னணியின் முக்கியஸ்தர்கள் கருணாவுடன் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தமை தெரியவந்ததால், விடுதலைப் புலிகள் கடும் சீற்றமடைந்துள்ளனர். அதேநேரம், படைத்தரப்பினரூடாகவே தற்போதைய அரசு கருணாவுடன் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டது. இந்த நிலையிலேயே, பலகல்லவின் கோரிக்கையை நிராகரித்துள்ள அரசுத் தலைவர் சந்திரிகா புதிய தளபதியாக சாந்த கொட்டேகொடயை நியமித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### தமிழகத்திலிருந்து 5000 அகதிகள் நாடு திரும்பியுள்ளனர்

தமிழகத்திலிருந்து இந்த வருடத்தின் முதல் ஐந்து மாதங்களில் 950க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 5000 அகதிகள் நாடு திரும்பியுள்ளதாக மன்னார் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. வடக்கு - கிழக்கில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக சுமார் 2 இலட்சம் அகதிகள் தமிழகம் சென்றிருந்தனர்.

கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக தமிழகத்தில் தங்கியிருந்த நிலையில், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சுமுக சூழ்நிலையை அடுத்து பெருமளவு அகதிகள் நாடு திரும்புகின்றனர். தற்போது தமிழகத்தில் அகதி முகாம்களில் 120,000 அகதிகளும், வெளியே 60,000 பேரும் தங்கியிருக்கின்றனர்.


# அக்கினி தாண்டவம்

## ஐரோப்பா தழுவிய இளங் கலைஞர்களுக்கான மேற்கத்தைய நடனப் போட்டி

### விதிமுறைகளும் விண்ணப்பப் படிவமும்

- தமிழீழ மக்களின் போராட்டம், வீரம், தியாகம், துயரம் என்பவற்றை மையப் பொருளாகக் கொண்டு மேற்கத்தைய முறையில் நடனம் அமைந்திருத்தல் வேண்டும்.
- நடனத்திற்காக இசை மற்றும் பாடல்களைப் பயன்படுத்தும்போது, அவை எமது தாயகம் சார்ந்தவையாக இருத்தல் விரும்பத்தக்கது. அவை தாயகப் படைப்பாகவோ அன்றேல் சுய படைப்பாகவோ இருக்கலாம்.
- ஒவ்வொரு நடனமும் குறைந்தது 5 பேர் கொண்ட குழு நடனங்களாக அமையும். இவற்றின் கால அளவு 10 தொடக்கம் 15 நிமிடங்களாகும்.
- போட்டியில் இறுதியாக வெற்றி பெறும் குழுவினருக்கு `அக்கினி தாண்டவம் 2004' சிறப்பு விருது வழங்கிக் கௌரவிக்கப்படும்.
- கீழுள்ள விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்திசெய்து அதில் குறிக்கப்பட்ட முகவரிக்கு அனுப்பி போட்டிக்கான மேலதிக விபரங்கள் அடங்கிய குறிப்பேடைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
- போட்டியில் பங்குபற்றுவதற்கான அனுமதிக் கட்டணம் 400 சுவிஸ் பிராங்குகள்.

**விண்ணப்பப் படிவம் — அக்கினி தாண்டவம் 2004**

குழுவின் பெயர்: ____________

முகவரி: ____________

நாடு: ____________

தொடர்பாளர் பெயர்: ____________

தொடர்பாளர் ____________

தொலைபேசி: ____________

மின் அஞ்சல்: ____________


விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

**Francis Albert, Buendtestrasse 12,
7000 Chur, Switzerland**

விண்ணப்ப முடிவுத் திகதி: 05.07.2004
(இத் திகதிக்குப் பின் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது)

தொடர்பாளர் கையொப்பம்: ____________

11.09.2004 சனி அன்று சுவிஸ், செங்காலனில் நடைபெறவுள்ள நடனப்போட்டி நிகழ்வில் பங்குபற்ற எமது குழு சார்பில் விண்ணப்பிக்கிறேன். இவ்விடயம் தொடர்பான மேலதிக விடயங்களை அறியத்தரவும்.




## குறுங்கதை

### கறை

கடைத் தராசில் பொருட்களை ஏற்றும் போதெல்லாம் தட்டு ஒரு பக்கம் சாய்ந்தது. படிக்கல் இருக்கும் தட்டு மேலேயே நின்றது.

உருளைக் கிழங்குகளும் வெங்காயங்களும் இதை உற்றுக் கவனித்தன.

`ஓ! இது கொடுமை!' என்று கத்தியது உருளைக்கிழங்கு.

வெளியே தலை நீட்டிக்கொண்டிருந்த வெங்காயமும் `இது பச்சைத் திருட்டு' என்று வயிற்றெரிச்சலைக்கொட்டியது.

இரண்டும் குரலெழுப்பின:

**`தராசை முதலில் எடைபோடு!'**

*- காசி ஆனந்தன்.*

## அறிஞர் முற்றம்

### லூயிஸ் பாஸ்டர்



பிரான்ஸ் நாட்டு டோல் என்ற இடத்தில் 1822ம் ஆண்டு டிசம்பர் மாதம் 27-ஆம் திகதியன்று லூயிஸ் பாஸ்டர் பிறந்தார். தனது தொடக்கக் கல்வியை அவர் அரபோயிசில் பயின்றார்.

பிரான்ஸ் நாட்டு ஸ்டிராஸ்பர்க் நகரில் 1849-இல் பாஸ்டர் வேதியியல் பாடம் கற்பிக்கத் தொடங்கினார். நுண்ணுயிரிகளால் உணவுப் பொருள்களில் புளித்துப்போதல் என்னும் வேதியியல் மாற்றம் ஏற்படுவதைப் பற்றிய ஆராய்ச்சியை அப்போது அவர் தொடங்கினார். கெட்டுப் போன திராட்சை ரசம் மற்றும் பாலை ஒரு உருப்பெருக்காடியில் வைத்து அவர் பார்த்தபோது, கூட்டம் கூட்டமாகக் குச்சி போன்ற நுண்ணுயிர்கள் அவற்றில் நெளிவதைக் கண்டார். ஒரு குறிப்பிட்ட அளவுக்கு பாலையும் திராட்சைரசத்தையும் சூடாக்கியபோது, அந்த நுண்ணுயிர்கள் அழிக்கப்பட்டதையும், அதன் பின் அந்தப் பானங்கள் நீண்ட நேரத்திற்குப் புதியது போன்றே இருந்ததையும் அவர் கண்டார். பேரரசர் மூன்றாம் நெப்போலியனும், அரசியும் பாஸ்டரைப் பெருமைப்படுத்தி அவரது ஆராய்ச்சியில் அவருக்கு உதவி அளித்தனர். சூடுபடுத்துவதன் மூலம் கிருமிகளைக் கொல்லும் இந்த நடைமுறை லூயி பாஸ்டரின் பெயரையொட்டி பாஸ்டரைசேஷன் என்று அழைக்கப்பட்டது.

பெப்ரின் என்னும் நோயினால் அழிவு நிலையில் இருந்த பட்டுத் தொழிலுக்குப் பாஸ்டர் 1865-இல் உதவி புரிந்தார். பட்டுப் பூச்சியின் முட்டைகளைத் தாக்கும் ஒரு நுண்ணுயிரிதான் இந்த நோய் தோன்றக் காரணம் என்பதை நிரூபிக்க அவர் பல ஆண்டு காலம் ஆய்வு மேற்கொண்டார். பட்டுப் பண்ணைகளில் இருந்து இந்த கிருமியை அகற்றுவதன் மூலம் இந்த நோயை முற்றிலுமாக அழிக்க முடியும் என்பதை அவர் காட்டினார்.

மருத்துவத் துறைக்கும் லூயிஸ் பாஸ்டர் பெரும் சேவையாற்றியுள்ளார். உடலில் பல்கிப் பெருகும் கிருமிகளே பல நோய்கள் உண்டாகக் காரணம் என்று அவர் நிரூபித்தார். சோதனைச் சாலையில் வைத்து நுண்ணுயிரிகள் வீரியமிழக்கச் செய்யப்பட்ட பின் ஒரு விலங்கின் உடலில் அதனை புகுத்தினால், அந்த நுண்ணுயிரிக்கு எதிரான எதிர்ப்பு சக்தி அந்த விலங்கின் உடலில் ஏற்படுகிறது என்பதையும் அவர் நிரூபித்தார். இவ்வாறு நுண்ணுயிர்களுக்கு எதிராகப் போராடும் இந்த நடை முறையை தடுப்பூசி முறை என்று அவர் அழைத்தார். பிரான்ஸ் நாட்டில் ஆந்த்ராக்ஸ் என்ற நோய் பல கால் நடைகளையும் கொன்று கொண்டு இருந்தது. இறந்த கால்நடைகளைப் புதைப்பதற்குப் பதிலாக அவற்றை எரித்துவிடுமாறு பாஸ்டர் விவசாயிகளுக்கு அறிவுறுத்தினார். தடுப்பூசி முறை மூலம் அம்மை, காலரா மற்றும் விலங்குகளால் உண்டாகும் நோய்களில் இருந்து பாதுகாப்பு மூலம் தடுக்க முடியும் என்பதை பாஸ்டர் காட்டினார். ரேபிஸ் கிருமிகள் தொற்றிய விலங்குகளின் கடி மூலம் பரவும் உயிர்க்கொல்லி நோயான ரேபிசைப் பற்றி 1881-இல் பாஸ்டர் ஆராய்ச்சி செய்யத் தொடங்கினார். 1857-இல் எகோல் நார்மலி நிறுவனத்தின் அறிவியல் ஆய்வுப் பிரிவு இயக்குநராக ஆனார். நீண்ட காலம்உடல் நலமில்லாமல் இருந்த அவர் 1895-இல் உயிரிழந்தார்.

*-த.க.பாலகிருட்டிணன்*

## கதை முற்றம்

### கானல்

தான் நல்ல பலமுடையவன், சர்வவல்லமையுடையவன். பெரிய சாம்ராஜ்யத்தின் மன்னன் என்ற கர்வம் அந்தச் சிங்கத்திற்கு.

ஒருநாள் மாலை நேரம்.

செவ்வொளி வீசும் அஸ்தமன சூரியன் விரிந்து பரந்துகிடக்கும் அந்திவானத்தை இரத்தமயமாக்கிக் கொண்டிருக்கின்றது.

வனப்புமிக்க இக்கண்கொள்ளாக் காட்சி அங்கும் இங்குமாக அலைந்துகொண்டிருக்கின்ற இந்தச் சிங்கத்திற்குக் களிப்பூட்டுகின்றது.



`இதோ இந்தப் பரவசமூட்டும் ஒளிப்பிரவாகம் எனது சாம்ராஜ்யத்தின் மாமன்னனாகிய நான் இந்த ஒளிப்பிரவாகத்தைக் கைப்பற்றி அதை எனது ஆட்சிப் புலத்திற்குள் கொண்டுவந்து அடக்கி வைத்திருக்கத் தவறினால் அது எந்த நேரத்திலும் மங்கி அழிந்து மறைந்துவிடும். ஆகையால் இந்தக் கணமே இந்த உன்னத ஒளிப் பிரவாகத்தைக் கைப்பற்றுகின்றேன்'

சிங்கம் இறுமாப்புடன் கூறிக்கொண்டு தனது உடலைச் சிலிர்த்து நிமிர்ந்து கம்பீரமாக நிற்கின்றது.

இரத்தம் சூடேறி, கொதித்துப் பீறிட்டு உடலெங்கும் வீறாப்புடன் ஓட, தூசிப்படலத்தை எழுப்பிக்கொண்டு மேற்குத் திசையை நோக்கிப் பாய்ந்தோடிக்கொண்டிருக்கின்றது சிங்கம். அது பாய்ந்து செல்லச் செல்ல அஸ்தமன சூரியன் பின்னே பின்னே சென்று வானத்தின் விளிம்பை நோக்கி இறங்கிக்கொண்டிருக்கின்றான். மாலை இருள் மெல்ல மெல்லப் பிரபஞ்சத்தை விழுங்கத் தொடங்குகின்றது.

பாலைவனத்தின் அரும்பெரும் செல்வமான ஓர் ஏரி பாய்ந்தோடிக்கொண்டிருக்கின்ற சிங்கத்தைத் தடுத்து நிறுத்துகின்றது.

அந்த வானத்தின் செஞ்சூரியன் ஏரியின் பளிங்கு போன்ற நீரில் பிரதிபலித்துச் செவ்வொளி வீசுகின்றது.

`நான் தேடிக்கொண்டிருக்கின்ற இரை இங்கேதான் இருக்கின்றது'

கூறியபடியே வீறாப்புடன் கர்ச்சித்துக்கொண்டு சிங்கம் ஏரிக்குள் பாய்ந்து மூழ்கி இறக்கின்றது.

`ஒரு மாயைத் தோற்றத்திற்காக என்னைத் தியாகம் செய்வதிலும் பார்க்க வேறு எந்த மகத்தான முடிவை என்னால் ஏற்றுக்கொள்ள முடியும்?'

சிங்கத்தின் இந்த இறுதி வார்த்தைகள் காற்றில் மிதந்து சங்கமித்து மடிகின்றது.

- நீர்வை பொன்னையன்

### கடந்தவார விடை

1. கரும்பு.
2. பல்.
3. அம்பு.
4. நெருப்பு.
5. பனைமரம்.
6. புளியங்காய் + மீன் = மீன்குழம்பு
7. தோசை.
8. தேங்காய்.
9. காளான்.
10. புடலங்காய்.


### நட்பு

*நமது வாழ்க்கையில் நட்பு மிக முக்கியமானது. மாணவர்களுக்கிடையே தோன்றும் நட்பானது முக்கியமானதும் ஆபத்தானதுமாகும். ஆகவே நாங்கள் நட்பை அறிந்து நட்புக் கொள்ளவேண்டும். உண்மையான நண்பர்களின் நட்பே எங்களுக்கு உயர்வைத் தரும். நாம் பாடசாலை நண்பர்களுடன் பழகும்போதும் அவர்களுடைய குண நலன்களை அறிந்து நட்புக்கொள்ளவேண்டும். மாணவர்களாகிய நாம் எப்போதும் நல்ல பண்புகளை நம்மிடம் வளர்த்துக்கொண்டால் எமக்கு எப்போதும் நல்ல நண்பர்கள் கிடைப்பார்கள். எமது மனதில் உள்ளவற்றை நாம் நமது நெருங்கிய நண்பர்களிடமே கூறுவோம். நாம் நல்லதைச் செய்யும்போது ஏற்றுக்கொண்டு தீயவற்றைச் செய்யும்போது கண்டித்துக் திருத்தும் நண்பர்களே நமக்கு ஏற்றவர்களாவார்கள். ஆகவே நல்லதைச் செய்து நல்ல நட்பைப் பெறுவோம்.*

*பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை பெருகலின் குன்றல் இனிது என்று நட்பைப் பற்றி திருவள்ளுவரும் கூறியிருக்கின்றார்.*

- வேதநாயகம் சிந்துஜா
பிரான்ஸ்

## கவிதை முற்றம்



*சின்ன, குருவி வானிலே*
*சிங்கா ரமாய்ப் பறக்குது*
*என்ன வியப்பு அப்பப்பா!*
*எப்படித்தான் சொல்லுவேன்!*

*கணத்தில் கூட்டை கட்டுது,*
*கட்டி முடித்துக் கூட்டிலே*
*இணக்க மாகக் குஞ்சினை*
*இன்பத்தோடு காக்குது!*

*உண்ணும் உணவைத் தேடுது*
*ஓட்டமாகத் திரும்புது*
*கொண்டு வந்த உணவினைக்*
*குஞ்சின் வாயில் ஊட்டுது!*

*சின்ன குருவி போலநாம்*
*சுறுசுறுப்பாய் உழைத்தாலே*
*நன்மை பெற்று வாழலாம்*
*நாட்டில் உயர்ந்து சிறக்கலாம்!*

- பழனி பாரதி -

## தகவல் முற்றம்

*01. முதல் கணினியின் பெயர்*
*– ஈனியாக் (eniac)*

*02.உலக சமாதானத்திற்கு முதன் முதல் நோபல் பரிசு பெற்றவர்*
*– வில்லியம் (இங்கிலாந்து) ரண்டால் கிரீமர்*

*03. பூஜ்ஜியத்தை ஒரு எண்ணாக முதன்முதல் உபயோகித்த இந்திய வல்லுநர்*
*– பிரம்ம குப்தன்*

*04. முதல் தமிழ்ச் சங்கம் தோன்றியது*
*– தென் மதுரையில்*

# ஐரோப்பியக் கிண்ணம் 2004




விளையாட்டு

ஜே.ஜே.


பன்னிரண்டாவது ஐரோப்பியக் கிண்ணத்திற்கான சுற்றுப் போட்டியின் குழுநிலைப் போட்டிகள் கடந்த 12.06.2004 முதல் போர்த்துக்கல் நாட்டில் ஆரம்பமாகியது. ஆரம்ப நாள் ஆட்டத்தில் குழு A இல் கிறீஸ் அணி சுற்றுப்போட்டியினை நடாத்தும் நாடான போர்த்துக்கல்லினை 2:1 எனும் நிலையில் வெற்றிகொண்டு அனைத்துத் தரப்பினரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. மறுநாள் குழு B இல் பிரான்ஸ் இங்கிலாந்திடையே நடைபெற்ற ஆட்டத்தில் முப்பத்தெட்டாவது நிமிடம் முதலாவது கோலினை அடித்த இங்கிலாந்து 89வது நிமிடம்வரையே தமது வெற்றியைத் தக்கவைக்க முடிந்தது. 90,93வது நிமிடங்களில் அடுத்தடுத்து இரண்டு கோல்களை அடித்த பிரான்ஸ் அணி மீண்டுமொரு அதிர்வலையை ஏற்படுத்தியது. குழு C இல் டென்மார்க் இத்தாலியிடையேயான ஆட்டம் கோல்களற்ற சமநிலையில் முடிவுற்றது. குழு D இல் ஜேர்மனி -நெதர்லாந்திடையேயான ஆட்டம் 1:1 எனும் சமநிலையில் முடிவுற்றது.

குழு C இல் இரண்டாவது ஆட்டத்தில் இத்தாலி சுவிடனிலே நடைபெற்ற ஆட்டம் 1:1 எனும் நிலையிலும், 3வது ஆட்டம் இத்தாலிக்கு 2:1 எனும் நிலையில் பல்கேரியாவிற்கு எதிரான ஆட்டத்தில் வெற்றியைக் கொடுத்து 5 புள்ளிகளைப் பெற்றநிலையிலும் இரண்டாவது சுற்றிற்கு தகுதி பெறமுடியவில்லை. 1968ம் ஆண்டு சம்பியன் அணியான இத்தாலி 2000ம் ஆண்டு இறுதிப்போட்டியில் பிரான்சிடம் 2:1 எனும் நிலையில் தோல்வி பெற்றது. நடந்து முடிந்த பதினொரு சுற்றுக்களில் ஆறுமுறை தகுதிகாண் ஆட்டங்களில் வெற்றி பெறவில்லை.

குழு D இல் இரண்டாவது ஆட்டத்தில் லற்றீவாவுடன் பெறுபேறுகளற்ற சமநிலையும், மூன்றாவது ஆட்டத்தில் செக்குடியரசிடம் 2:1 எனும் தோல்வினையும் அடைந்து இரண்டு புள்ளிகளுடன் இரண்டாவது சுற்றிற்குத் தகுதி பெறாது வெளியேற்றப்பட்டது. 1972ம் 1980ம் 1996ம் ஆண்டு சம்பியனான ஜேர்மனி 1984ம் 2000ம் ஆண்டுகளில் முதற் சுற்றில் வெளியேற்றப்பட்டது. ஜேர்மனி இம்முறை உட்பட ஒன்பது முறை இறுதிச் சுற்றிற்கு தகுதிபெற்றிருந்தது. குழு A இல் ஸ்பெயின் இரண்டாவது, மூன்றாவது ஆட்டங்களில் முறையே கிறீஸ் 1:1, போர்த்துக்கல்லுடன் 1:0 எனும் நிலையில் தோல்வியையும் அடைந்தது. 1964ம் ஆண்டு சம்பியனாக ஸ்பெயின் கடந்த நாற்பது வருடங்களில் சர்வதேச அளவில் எந்த வெற்றியையும் பெறவில்லை. ஐந்து முறை இறுதிச் சுற்றிற்கு தகுதி பெறாத ஸ்பெயின் இரண்டு முறை முதற்சுற்றிலேயே வெளியேறியிருந்தது. இவ்வாண்டுச் சுற்றிற்கான தகுதிகாண் ஆட்டங்களில் தமது குழுவில் இரண்டாவது இடத்தைப் பெற்ற இவர்கள் நோர்வேயுடனான இருவழித் தடை ஆட்டங்களில் (2:1, 3:0) வெற்றிபெற்றே இறுதிச் சுற்றிற்கு தகுதி பெற்றது.

போர்த்துக்கல்-இங்கிலாந்திடையேயான முதலாவது காலிறுதி ஆட்டத்தில் மூன்றாவது நிமிடம் கோலினை அடித்த





இங்கிலாந்தினை 83 வது நிமிடம் போர்த்துக்கல் சமநிலைப் படுத்தியது. 90வது நிமிடமும் இதேநிலை நீடித்ததால் மேலதிகமாக வழங்கப்பட்ட முதல் பதினைந்து நிமிட முடிவிலும் அதே பெறுபேறு இருந்தால் இரண்டாவது பதினைந்து நிமிட ஆட்டத்திற்கு செல்லவேண்டிய நிலை இரு அணியினரிற்கும் ஏற்பட்டது. நூற்றிப்பத்தாவது நிமிடம் போர்த்துக்கல் தமது பெறுபேறினை 2:1 எனும் நிலைக்கு உயர்த்தியது. அடுத்த ஐந்து நிமிடத்தில் இங்கிலாந்து ஆட்ட -த்தை 2:2 எனும் சமநிலை -க்கு கொண்டு வந்தது. 120 வது நிமிட முடிவில் ஆட்டம் சமநிலையில் காணப்பட்டதால் தண்டனை உதை மூலம் (Penalty Kicks) வெற்றி தீர்மானிக்கவேண்டி ஏற்பட்டது. இதில் முதல் ஐந்து தண்டனை உதையில் போர்த்துக்கல், இங்கிலாந்து என்பன தலா நான்கு கோலினைப் பெற்றன. தொடர்ந்த தண்டனை உதையில் போர்த்துக்கல் 6:5 எனும் நிலையில் வெற்றிபெற்று அரையிறுதி ஆட்டத்திற்கு தொடர்ச்சியாக இரண்டாவது முறை தகுதி பெற்றுள்ளது. இங்கிலாந்து அணி சார்பில் தண்டனை உதையை தவற விட்டவர்களில் டேவிட் பெக்கமும் ஒருவர் ஆவார்.

நான்கு முறை இறுதிச் சுற்றிற்கான தகுதிகாண் ஆட்டங்களில் வெளியேற்றப்பட்ட இங்கிலாந்து நான்கு முறை முதற் சுற்றிலேயே (1980,88, 92, 2000) வெளியேறியது. 1968ம் 96ம் ஆண்டுகளில் அரையிறுதி ஆட்டத்திற்கு தகுதிபெற்ற இவர்கள் தமது நாட்டின் ஆதரவாளர்களின் நடத்தையினால் எந்த நேரமும் சுற்றுப்போட்டியில் இருந்து நீக்கப்படும் நிலையில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது காலிறுதி ஆட்டத்தில் முதல் முறையாக காலிறுதி ஆட்டத்திற்கு



தகுதிபெற்ற கிறீஸ் அணி பிரான்சை 1:0 எனும் நிலையில் வெற்றிபெற்று அரையிறுதி ஆட்டத்திற்கு சென்றுள்ளது. முதல் ஆறு இறுதிச் சுற்றுகளிற்கும் தகுதி பெறாத பிரான்ஸ் 1984ம் ஆண்டு தமது நாட்டில் நடைபெற்ற ஏழாவது சுற்றினையும், 2000ம் ஆண்டு பெல்ஜியம் -நெதர்லாந்தில் நடைபெற்ற பதினோராவது சுற்றினையும் தமதாக்கிக்கொண்டவர்கள். 1992ம் அண்டு முதற் சுற்றிலேயே வெளியேறிய இவர்கள் அடுத்துவந்த சுற்றில் அரையிறுதி ஆட்டத்தில் செக்குடியரசிடம் தோல்வி அடைந்தனர்.

மூன்றாவது காலிறுதி ஆட்டத்தில் நெதர்லாந்து-சுவீடன் என்பன முதல் 90 நிமிடத்திலும் சரி அடுத்து வந்த இரண்து பதினைந்து நிமிடங்களிலும் சரி கோல் எதனையும் பெறாத நிலையில் தண்டனை உதை மூலம் வெற்றி தீர்மானிக்கும் நிலைஏற்பட்டது. இதில் நெதர்லாந்து 5:4 எனும் நிலையில் வெற்றிபெற்று நான்காவது முறையாக அரையிறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளது. முதல் எட்டுமுறை இறுதிச் சுற்றிற்கு தகுதி பெறத் தவறிய சுவீடன் அணி 1992ம் ஆண்டு அரையிறுதி ஆட்டத்தில் ஜேர்மனியிடம் 2:3 எனும் நிலையில் தோல்வி அடைந்தனர். 1996ம் ஆண்டு மீண்டும் இறுதிச் சுற்றிற்கு தகுதி பெறத் தவறிய இவர்கள் கடந்த சுற்றில் முதற் சுற்றுடன் வெளியேற்றப்பட்டனர்.

நாலாவது காலிறுதியாட்டத்தில் செக்குடியரசு -டென்மார்க் 3:0 என்ற கோலடிப்படையில் வெற்றிபெற்றது. இதில் டென்மார்க் 92ம் ஆண்டு வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. 64ம், 84ம் ஆண்டுகளில் அரையிறுதியாட்டத்திற்கு தெரிவாகியது. 3 தடவைகள் முதற்சுற்றிலும், 5 தடவைகள் இறுதிச்சுற்றிலும் தகுதிபெறவில்லை.


## மினி சுற்றுலா

Paris - Lourdes
Lourdes - Andora
Andora - Paris



Aller 09.07.2004 / 06.08.2004 / 20.08.2004 — Retour 12.07.2004 / 09.08.2004 / 23.08.2004

பயணச்சீட்டு, தங்குமிட கட்டணம், சனி காலை, மதியம், இரவு, ஞாயிறு காலை உணவு அனைத்துடனும்

பெரியவர்கள் 150 ஈரோ சிறியவர்கள் 110 ஈரோ

அன்புடையீர் வணக்கம்!

சிறிய விடுமுறையில் லூர்து அன்னையின் தரிசனம் பெற்று அந்தோரா மலை பிரதேச காட்சிகளை பார்த்துமகிழவும்ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

•மேலே குறிப்பிட்ட திகதிகளில் பேருந்து பாரிசிலிருந்து வெள்ளி இரவு 9.00 மணிக்கு புறப்பட்டு சனி காலை லூர்து வந்தடைந்து தரிசனத்தை முடித்துக்கொண்டு, ஞாயிறு காலை அந்தோரா புறப்பட்டு மதியம் சென்றடையும். அந்தோராவிலிருந்துமாலை புறப்பட்டு திங்கள் காலை பாரிசை வந்தடையும்.

sumangali textail la chapelle — மேலதிக விபரங்களுக்கு : — theepam textail la chapelle

06 60 92 12 69 - 06 63 31 49 32



## ஸ்ரெபான் டெக்ஸ்டைல்ஸ்

கோடைகால விடுமுறையில் உறவுகளின் உள்ளம் குளிர ஸ்ரெபான் ரெக்ஸ்ரைல்ஸ் வழங்கும் மாபெரும் மலிவு விற்பனை.

இளைஞர்களுக்கான இன்றைய நவ நாகரீக ஆடைகள், ஆண்களுக்கான சேட், ரவுசர், சாரம், வேட்டி மற்றும் பெண்களுக்கான சாறிகள், பஞ்சாபிகள் குழந்தைகளுக்கான அனைத்து ஆடைகளும் நீங்கள் விரும்பிய டிசைன்களில் மிகமிக மலிவாக பெற்றுக்கொள்ளலாம்.

ஆடைகள் 1Sfr இல் இருந்து விற்பனைக்கு உண்டு

மற்றும் வாகனத் தரிப்பிடம் நிறைவாக உள்ளது.எமது ஸ்தாபனத்தில் கடல் உணவுகள் மற்றும் ஆசிய மரக்கறி உணவு வகைகள் அனைத்தையும் ஓரே இடத்தில் மிகக்குறைந்த விலைகளில் பெற்று மகிழுங்கள்.



தொடர்புகளுக்கு :
G.S.அன்ரன்
Stefan Textil und Lebensmittel
Papiermuhlestr - 153
3063 Lttigen
Autobahn Ausfahrt (Wankdorf)
Papiermuhle Bahnhof ற்கு அருகாமையில்
Tel :- 031 922 23 18
079 784 60 25

# நீலவாணி எண்டர் பிறைஸ்

## இரண்டாவது வருட பூர்த்தியை முன்னிட்டு
## பேர்ண் மாநகரில்

# மாபெரும் மலிவு விற்பனை

| உதாரணத்துக்காக மாற்றம் செய்யப்பட்ட விலை | பழைய விலை | புதிய விலை |
|---|---|---|
| உடன் இலங்கை மீன் வகைகள் 1Kg | 7.50Fr | 6.90Fr |
| உடன் இலங்கை நண்டு கணவாய் 1Kg | 9.00Fr | 6.90Fr |
| இலங்கை கீரை வகைகள் 1Kg | 9.00Fr | 6.90Fr |
| மரவள்ளி | 3.80Fr | 3.00Fr |
| இராச வள்ளி | 8.00Fr | 5.50Fr |
| வெண்டி, புடோல், பூசணி, முருங்கை | 5.50Fr | 3.80Fr |
| உள்ளி | 3.00Fr | 1.75Fr |
| சின்ன வெங்காயம் | 8.00Fr | 5.50Fr |
| தாய்லாந்து பயற்றங்காய், பாகற்காய் | 9.00Fr | 7.35Fr |
| நெஸ்டோமோல்ட் | 6.90Fr | 5.50Fr |
| விவா | 8.90Fr | 6.90Fr |
| கோர்லிக்ஸ் | 6.90Fr | 5.90Fr |
| மைலோ | 6.90Fr | 5.90Fr |
| நெல்லி ரசம் (தோலகட்டி) | 6.50Fr | 5.40Fr |
| பழரச வகைகள் | 6.50Fr | 5.40Fr |
| லெமன் பஃப் | 2.50Fr | 1.25Fr |
| டி டைம் | 3.50Fr | 2.50Fr |
| கிப்ட் செலக்ஸ்ஸன் | 6.50Fr | 4.80Fr |
| ஃபமிலி ஷசேட்மன்ட் | 4.80Fr | 3.50Fr |
| கிறிம் கிறேக்கர் | 2.50Fr | 1.70Fr |
| சீனி சம்பல் | 5.50Fr | 4.20Fr |
| ஊறுகாய் வகைகள் | 5.50Fr | 4.20Fr |

| உதாரணத்துக்காக மாற்றம் செய்யப்பட்ட விலை | பழைய விலை | புதிய விலை |
|---|---|---|
| பிரியாணி மிக்ஸ் | 5.50Fr | 4.20Fr |
| ஜாம் வகைகள் | 3.90Fr | 3.10Fr |
| தேங்காய் பால் பவுடர் 1 Kg | 13.50Fr | 9.60Fr |
| தேங்காய் பால் பவுடர் 350g | 5.95Fr | 4.50Fr |
| தேங்காய் பால் பவுடர் 150g | 3.15Fr | 2.10Fr |
| மொட்டைக் கருப்பன் அரிசி 1Kg | 2.50Fr | 1.90Fr |
| புழுங்கல் அரிசி 5Kg | 12.50Fr | 9.30Fr |
| புழுங்கல் அரிசி 1Kg | 2.50Fr | 1.90Fr |
| சம்பா 5 Kg | 13.50 Fr | 9.30Fr |
| சம்பா 1Kg | 2.50Fr | 1.90Fr |
| பசுமதி அரிசி 5Kg | 12.00Fr | 7.50Fr |
| U.S.A அரிசி 25 Kg | 35.00 Fr | 28.50Fr |
| மைசூர் பருப்பு 2Kg | 5.50Fr | 3.50Fr |
| நல்லெண்ணெய் 375 Ml | 6.90Fr | 4.90Fr |
| 750 Ml | 11.90Fr | 9.40Fr |
| வறுத்த அரிசி மா 1 Kg | 3.90Fr | 2.90Fr |
| யாழ்.மிளகாய்தூள் 900g | 9.60Fr | 7.90Fr |
| கிங்ஸ், லீலா, சூரியா 500g | 5.50Fr | 4.30Fr |
| அதி குளிரூட்டப்பட்ட கோழிக்கால் 2.5Kg | 12.90Fr | 9.90Fr |
| உடன் ஆட்டிறைச்சி பங்கு 1Kg | 9.50Fr | 8.00Fr |
| உடன் ஆட்டிறைச்சி தொடை 1Kg | 14.00Fr | 11.00Fr |
| உடன்கோழி | 6.50Fr | 5.50Fr |

**மீன்வெட்டிச் சுத்தம் செய்து தரப்படும் இலவசம்**

இங்கு குறிப்பிடப்படாத மேலும் பல பொருட்கள் அதி குறைந்த விலையில் விற்பனை செய்கிறோம் மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு விஷேட கழிவு உண்டு

**வாருங்கள்! நுகருங்கள்!**
**நல் ஆதரவைத் தாருங்கள்!!!**

**Bubenbergplatz 8 - 3011 bern**
**Tel: 031 -312 17 50**
**Natel: 079-300 37 49**
**Fax: 031 - 312 17 49**
பேர்ண் பெரிய தபால் நிலையத்துக்கு அருகே

காலவரையின்றி இதுவே எமது நிரந்தர விலையாகும்
எமது ஸ்தாபனம் உங்களுக்காக 365 நாட்களும் திறந்திருக்கும்

sw-70

INDIAN ASTROLOGER

# சாய்பாபா

# Laxmi Kanthswamy

**பிரபல இந்திய ஜோதிடர் கைரேகை நிபுணர் இந்தியாவிலிருந்து இங்கே வருகை தந்துள்ளார்.**

எம்மிடம் வருவதால் உங்கள் சகல பிரச்சனைகளும் தீர்த்து வைக்கப்படும். 99 வீதம் சரியாக கணித்துச் சொல்லப்படும். உங்கள் நிகழ்காலம், வருங்காலம், வியாபாரம், கல்வி, குடும்ப விபரங்கள், தேகசுகம் எல்லாம் சரியாக கணித்துச் சொல்லப்படும். அத்துடன் சாந்தி பூஜா, இலட்சுமி பூஜா பிரார்த்தனைகளும் செய்து தருவோம்.கண் திருஷ்டி, சூனியம் அகற்ளுதலும் செய்து தருவோம்.

**சந்திக்குமிடம்:**

**(West London) South hall**

**Contact:**

**Tel: 07932724065 / 07939613067**



## விரைவில்

களத்திலிருந்து
போராளி
ஆனதி எழுதும்

# விடுதலையின் வீச்சும் வீரச் சாவுகளும்

நெஞ்சைப் பிழியும்
உண்மைச்
சம்பவங்களின் தொடர்....

# பூபாளம்

பொத்தகசாலை

**உங்களுக்குத் தேவையான அனைத்துவகையான பொத்தகங்களையும் ஒரே இடத்தில் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.**

உங்களுக்குத் தேவையான நூல்களை குறுகிய நாட்களுக்குள் பெற்றுத் தருவோம்.

*தமிமீழ விடுதலைப் பாடல்கள் அடங்கிய CDக்கள், மற்றும் தமிழீழத்தில் வெளியாகும் நூல்களையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.*

## நூலகம்! நூலகம்!! நூலகம்!!!

**தமிழ் மக்களுக்கோர் இனிய செய்தி!**

பூபாளம் பொத்தகசாலையுடன் இணைந்த புதிய சேவை.
பல்துறை சார்ந்த 2000 க்கும் மேற்பட்ட பொத்தகங்களை வாசிப்பதற்கான அரியவாய்ப்பு.
பூபாளம் நூலகத்தில் இப்பொழுதே நீங்களும் ஒரு அங்கத்தவராகி உங்களுக்குப் பிரியமான பொத்தகங்களை வாசித்துப் பயன்பெறுங்கள்.

# பூபாளம்

*Informatique*


## ORDINATEUR COMPLET
## *(OCCASSION)*

சிறப்பு மலிவு விற்பனை

**à partir de 150 Euro**

**Ecran 15”**
**u Centrale PII, PIII ou Celeron**
**Claviet**
**Souris**
**Haut Parleur (150 watts)**

விபரங்கட்கு
தொடர்புகொள்ளவும்.



# பூபாளம்

பொத்தகசாலை

*22, Rue Perdonnet, 75010 Paris, France.*
*Tél: 01 40 05 95 15*

## சிங்கப்பூர்...

(7ம் பக்க தொடர்ச்சி)

சிறீலங்காவில் புலிகளுடன் நடைமுறையில் உள்ள யுத்த நிறுத்த உடன்படிக்கையை அரசாங்கம் உரிய முறையில் கடைப்பிடிக்காத நிலையில் இங்கு முதலீடு செய்வது அச்சத்திற்கு உரியது என தெரிவித்திருந்தார். சமாதானப் பேச்சுக்களும் ஆரம்பிக்கப்படவில்லை என்றும் அவர் குறைபட்டுக்கொண்டார். அவருடைய கூற்றை சிங்கப்பூர் பிரதமர் ஆமோதித்துக் கொண்டார். அத்துடன் ஆப்கானிஸ்தான், சூடான், பலஸ்தீனம் போன்ற நாடுகளின் சமாதானப் பேச்சுவார்த்தைகளை உதாரணம் காட்டிய சிங்கப்பூர் பிரதமர் சிறீலங்காவில் அவ்வாறானதொரு நிலை தோன்றவில்லை என்பதை தான் உணருவதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறு சிங்கப்பூர் பிரதமரின் விஜயத்தை நோக்கும்போது வெளிநாட்டுத் தலைவர் ஒருவர் சம்பிரதாயபூர்வமாக அரச மரியாதையுடன் அழைக்கப்பட்டு அவர் எதிர்பார்த்த பொருளாதார முதலீடுகள் நிறைவேறாத நிலையில் வெறுங் கையுடன் திரும்பிச்சென்றதையே உணரமுடிகின்றது. இது சிங்கப்பூர் பிரதமரை பொறுத்தவரை முதல் அனுபவமாகவே கருதமுடியும். ஆனால் சிறீலங்காவைப் பொறுத்தவரையில் சிங்கப்பூர் பிரதமரின் விஜயத்துடன் தமது நாட்டின் வங்குரோத்து நிலயை வெளியுலகுக்கு தாங்களாகவே வெளிக்காட்டி அவமானப்பட்டுக் கொண்டதாகவே சித்தரிக்க முடியும். ஒன்று மட்டும் உறுதியாக தெரிகின்றது. புலிகளுடன் பேசி இறுதித் தீர்வைக்காணும் வரை சிறீலங்கா எந்த வழிகளிலும் முன்னேறுவதற்கு சாத்தியமே இல்லை. சிங்கப்பூர் பிரதமர் கூட கொழும்பில் வைத்து அதன் பொருள் பட பல கருத்துக்களைக் கூறியதையும் சிறீலங்கா அரசாங்கம் கவனத்தில் எடுக்கவேண்டும்.

## கடந்த வருடம் ஏற்பட்ட படகு விபத்தில் நான்கு கடற் கரும்புலிகள் வீரச்சாவு

கடந்த வருடம் ஜூன் மாதம் 27ம் திகதி, சர்வதேச கடற்பரப்பில் ஏற்பட்ட படகு விபத்தின்போது நான்கு கடற் கரும்புலிகள் வீரச்சாவடைந்துள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். கடற் கரும்புலி லெப்.கேணல் யாழினி (நாகரத்தினம் நிரஞ்சனி - தோப்புக்காடு காரைநகர் யாழ்ப்பாணம்), கடற்கரும்புலி லெப்.கேணல் அமுதம் அல்லது ஈழப்பிரியா (பால சுப்ரமணியம் சுகந்தினி - பன்னாலை தெல்லிப்பழை), கடற்கரும்புலி மேஜர் கதிர் ஓவியன் (செல்வன் ஞானேஸ்வரன் - புன்னாலைக்கட்டுவன் தெற்கு யாழ்ப்பாணம்), கடற்கரும்புலி கப்டன் ஈகைவண்ணன் (குகேந்திரன் ரமணன் - நந்தாவில் அம்மன் கோவிலடி கொக்குவில் தெற்கு யாழ்ப்பாணம்) ஆகிய கடற்கரும்புலிகளே வீரகாவியமாகியுள்ளனர். இம்மாவீரர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

## சித்திரவதை...

(13ம் பக்க தொடர்ச்சி)

நஷ்ட ஈடுவழங்கவும் ஒழுங்கு செய்ய வேண்டும். சிறீலங்காவில் சித்திரவதையை ஒழிக்க வேண்டுமானால், உடனடியாக பயங்கரவாத தடை சட்டம் என்று கூறப்படும் கொடூரமான சட்டத்தை சிறீலங்கா அரசு நீக்க வேண்டும். அத்துடன் சித்திரவதை செய்வோர் தண்டிக்கப்பட வேண்டும். இதேவேளை சித்திரவதைக்கு ஆளாக்கபட்டோருக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும். இதுவே இன்று 'சித்திரவதை செய்யப்பட்டோருக்கு ஆதரவான ஐ.நா. சர்வதேச தினத்தில்' (யூன் 26) தமிழர் மனித உரிமை மையத்தினரால் முன் வைக்கப்படுகிறது.

**ச.வி. கிருபாகரன்**

*(பொதுச் செயலாளர் தமிழர் மனித உரிமைகள் மையம் பிரான்ஸ்)*

## வியட்நாம் பாசறையில் பயிற்சி பெற்று....

(11ம் பக்கத் தொடர்ச்சி)

மனம் தன் சகோதரியை ஓடிச்சென்று தூக்கிக் கொண்டு பின்னுக்குப் போகச் சொன்னாலும், ஜெனாவின் ஆழ்மனமோ அடம்பிடித்தது. 'உன் இலக்கு முக்கியம் இடைவிடாது தொடரு உன் தாக்குதலை' என மனம் வலியுறுத்த, ஜனகா விழுப்புண்பட்டிருப்பாள் ஆனையிறவு வெற்றியாக பிடித்து விட்டு அக்காவை போய் பார்க்கலாம் என்ற எண்ணம் இளையோட அவன் பயணம் தொடர்கிறது.

ஆனால், ஜனா திடீரென விழுப்புண் அடைந்ததால் களத்தின் பின் தளத்திற்கு கொண்டு வந்தனர் போராளிகள். தீவிர சிகிச்சை அழிப்பின் பின் ஓரளவு சுகமடைந்த நிலையில் மருத்துவமனையில் இருந்த ஜெனா பத்திரிகை மூலமாக தான் அறிகின்றான் தனத சகோதரி வீரச்சாவடைந்த செய்தியை. ஜெனாவின் கண்கள் கசிந்தன. களத்திலே தனது அக்கா கையசைத்து தன்னருகில் என்னை அழைத்து என்ன சொல்ல நினைத்தாள் என்ற எண்ணம் ஜெனாவின் மனதில் ஆழமான வேதனையைத்தர, இவனின் கண்களில் இருந்து வழிந்த கண்ணீர் கன்னத்தை நனைத்தது.

வீரப்புலியாக வீழ்ந்த ஜெனகாவின் இலட்சியம் நிறைவேற தன்பணி தொடர முடிவெடுத்தான். விழுப்புண் மாறிய பின்பு எம் தேசியத்தலைவரின் சிந்தனையின் வழிகாட்டலில் இடம்பெறும் தாக்குதல் களங்களில் எம் போராளிகள் வெற்றி பெற வழிவகுக்கும் சண்டைப்பயிற்சி ஆசானாக நியமிக்கப்படுகின்றான். வீரத்தலைவனின் வழி வந்த வீரப்புலியாய் வரலாறு படைக்கும் போராளிகளுக்கு நல்ல ஆசானாய் அன்புத்தோழனாய் சக போராளியாய் இருந்து வழிநடத்தினான். இதன் பின் நடைபெற்ற தாக்குதல்களில் ஜெனா வளர்த்த போாரளிகளும் ஜெனாவுமாக பல களங்கள் கண்டு எமது விடுதலைப் போருக்கு மேலும் வலுச்சேர்த்தனர். இவ்வாறான காலப்பகுதியில்தான் ஓங்கியடிக்க பொங்கியெழுந்தது ஓயாத அலை–02 நடவடிக்கை இச்சண்டையின் வெற்றிக்காக, தான் பயிற்சி வழங்கிய போராளிகளுடனேயே எம் தேசத்தலைவரின் நல்லாசிபெற்று, சண்டை அணியின் மேலதிக கொமாண்டராக களம் புகுந்தான் ஜெனா.

கிளிநொச்சி மண்ணை மீட்டு அதில் எம்மக்கள் சுதந்திரமாய் வாழ வழிதேடி நடந்த வீரப்புலிகளை நோக்கி எதிரி குண்டு மழை பொழியத் தொடங்கினான். மூண்டது தாய்மண் காக்கும் வீரப்போர். தர்மம் காக்கும் தமிழர் பேரர். ஜெனா வேகமாக தன் அணியுடன் முன்னேறிக் கொண்டிருக்க, எதிரியின் ரவை எம் ஜெனாவின் உடலை ஊடுருவிச் செல்ல எல்லோராலும் ஜெனா மாஸ்ரர் என அழைக்கப்பட்ட காந்தசீலன் தன் தொழர்களின் மடியில் லெப்.கேணல் ஜெனாவாக விழிமூடிக் கொண்டான்.

*எம்மினம் ஜெயம் பெற இம்மண்ணில் மலர்ந்த – ஜெயந்தா*
*அன்புத் தோழனாய் வீரத்தின் ஆசனாய்*
*விடுதலைப் புலியாய், ஜெனா மாஸ்டராய் இம்மண்ணில் வீழ்ந்தவனே*
*ஒவ்வொரு வைகறை வேளையிலும் உன் பட மதிலே*
*மலர்தூவிப் பணிகின்றோம். வல்லமைகள் தந்து*
*எமக்கு வழிகாட்டு உன் பணிதொடர்ந்து*
*தமிழீழம் வெல்வதற்கு...*

**– போராளி திருமதி மாருகா**


### விடுமுறையைக் கழிக்க தமிழ்நாடு போகின்றீர்களா !

சென்னை அடையாறில் AC + 3 அறை + சகல வசதிகளுடன் வீடுகள் வாடகைக்குண்டு. ஒருநாளுக்கு 17 ஈரோக்கள்

தொடர்புகளுக்கு: மகேஸ்வரன்
தொலைபேசி: 01 48 27 20 59
*(பிற்பகல் 5.00 மணிக்குப் பின்னர்)*



### வாடகைக்கு

1 Salon séjour cuisine, WC, Douche Lavabo, 1 chambre. சகல வசதிகளுடனமைந்த புதிய இரு அறைகள் கொண்ட (F2) வீடு வாடகைக்கு உண்டு. 2 நிமிட நடைதூரத்தில் La Courneuve métro, Carrefour, Centre Comerciale 5 நிமிடங்களில்

**வாடகை: மாதம் 620 ஈரோக்கள்**
**தொலைபேசி: 06 74 39 59 02**



### N.S. Jewellery யின்

**மாபெரும் மலிவு விற்பனை!**

இத்துடன் N.S. jewellery யின் ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டும் வாடிக்கையாளர்களின் வேண்டுகோளிற்கிணங்க விசேட விலைக் கழிவுடன் அனைத்தும், காலத்திற்கேற்ப கண்கவர் அலங்கார டிசைன்களுடன் உங்களுக்காக....

காலம்: 02.07.2004 (வெள்ளிக்கிழமை)
03.07.2004 (சனிக்கிழமை)
04.07.2004 (ஞாயிற்றுக்கிழமை)
05.07.2004 (திங்கட்கிழமை)

இடம்: N.S. Jewellery
(பழைய தமிழரசி நகைமாடம் அமைந்துள்ள இடம்)
Neugasse 58, 8005 Zurich
(langstrasse Mcdonald's இருந்து 2 நிமிட நடை தூரம்)


**காலை 10.00 முதல் 20.00 மணிவரை**

sw-20

N.S. Jewellery. Neugasse 58, 8005 Zurich
Tel: 01 / 440 60 50, 01 / 440 60 51 Fax: 01 /440 60 52


## 31ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 12 . 08 . 1994



மறைவு 03 . 06 . 2004

## தேவதாஸ் விதுரசன்

03.06.2004 அன்று நடைபெற்ற இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு ஆற்றாத் துயரில் இருந்த எங்களுக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டவர்களுக்கும் பல வழிகளில் உதவியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

அன்னாரின் 31ம் நாள் நினைவஞ்சலியும், ஆத்மசாந்தி ஆராதனையும் வருகின்ற 03.07.2004 சனிக் கிழமை நடைபெற இருப்பதால் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

**நடைபெறும் இடம்**
**Dorf Str - 39, 3457 Wasen**

| தகவல்: | தொலைபேசி: |
|---|---|
| த. தேவதாஸ் | 078 859 6562 |
| குடும்பத்தினர், நண்பர்கள். | 034 437 0360 |




**பேர்ண் மாநகரில்** பாசல் ரவி கடை

2004 ற்கான அனைத்து விதமான புதிய ஆடைகளை உங்கள் விருப்பத்திற்கு ஏற்றவாறு மிக மிக மலிவாக பெற்றுக்கொள்ளலாம்.

பஞ்சாபி, டெனீம், சேட், சாறி, T.Shirt, Audio CD வகைகள், மணிக்கூடு அனைத்தும் ஒரே இடத்தில்

தொடர்புகளுக்கு: 076, 272 90 30, 061 272 09 90, 079 356 22 78



## ஆபத்தான விளையாட்டு

ஸ்பெயின் நாட்டில் கடந்த 13ம் திகதி நடைபெற்ற ஆபத்தான விளையாட்டு இது. ஸ்பெயினின் பூர்கோசிற்கு அருகே உள்ள மூர்சியா என்ற நகரில் நடைபெற்ற எல் சல்றோ டெல் கொலாசோ என்ற கலாச்சார விழாவில், குழந்தைகளை கீழே கிடத்தி விட்டு, அவர்களை தாண்டிப்பாயும் ஆப்பதான





விளையாட்டும் இடம்பெற்றது. நான்கு குழந்தைகள், ஆறு குழந்தைகள் என மெத்தையில் கிடத்தப்பட அக் குழந்தைகளை தாண்டிப் பாய்கின்றார் எல் கொலாசோ என்ற ஸ்பானியர்.


## சாமியார்களின் சங்கமம்




இந்தியாவின் உத்தரப்பிரதேச மாநிலத்தில் உள்ள கமக்ஹயா ஆலயத்தில் வருடம்தோறும் மூன்று நாட்கள் நடைபெறும் அம்புவாசி விழாவில் கலந்துகொள்வதற்காக இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் இருந்து



சாமியார்கள் வந்து குவிவது வழக்கம். கடந்த 22, 23, 24ம் திகதிகளில் நடைபெற்ற விழாவில் கலந்துகொண்ட சாமியார்கள் தங்கள் வித்தைகளைக்காட்டி பொது மக்களிடம் நிதி சேகரிப்பதை படத்தில் காண்கிறீர்கள். இதில் ஒரு சாமியார் தனது




நீண்ட முடியை நிலத்தில் பரப்பிவிட்டு நிதி சேகரிக்கின்றார். இவரது முடி எவ்வளவு நீளமோ...?



## 31 வருடங்கள் முடி வெட்டாதவர் !

உலக சாதனைப் புகழுக்காக 31 வருடங்கள் முடிவெட்டாது வாழ்ந்து வருகின்றார் ஒரு வியட்நாமியர். வியட்நாமின் ஹ்யன் ஜியோங் பகுதியில் வசித்துவரும் 67 வயதான டிரான் வான் ஹே உலக சாதனை நூலான



## பலதும் பத்தும்


கின்னசில் தனது பெயரை பதிந்துகொள்வதற்காக தனது முடியை 31 வருடங்களாக வளர்த்து வருகின்றார். இப்போது இவரது முடியின் நீளம் 6.2 மீற்றர் (20.40 அடி) என அளவிடப்பட்டுள்ளது.

1997ம் ஆண்டு, தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த சியாங் மே என்பவரே உலகின் மிகவும் நீளம் கூடிய முடியைக் (5.15 மீற்றர்) கொண்டிருந்தார் என கின்னஸ் சாதனை நூலில் பதிவாயிருக்கின்றது. அவரது சாதனையை இந்த வியட்நாமியர் முறியடித்துள்ளார். தனது முடியினை வளர்ப்பதற்காக விவசாயத் தொழிலைக் கைவிட்ட இவர், தனக்கு தெரிந்த பரம்பரை மருத்துவத் தொழிலையே பார்த்து வந்தார்.

இத்தனையும் சரி... கடந்த ஆறு ஆண்டுகளாக இவர் தலை முழுகவில்லை என்பதும் தனது முடியை கழுவவில்லை என்பது இன்னொரு சாதனைதான்...

## தீவிர இரசிகர்

ஐரோப்பிய கால்பந்து போட்டி–2004 போத்துக்கல் நாட்டில் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றது. இப்போட்டிகளை கண்டு இரசிப்பதைவிட, போட்டியைப் பார்வையிட வரும் இரசிகர்களும் இரசிகைகளும் தமது நாட்டு விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்த அணித்துவரும் ஆடைகளும், அணிகளும் பலரையும் கவரும் வண்ணம் அமைந்துள்ளன.



கடந்தவாரம் லித்வியா – நெதர்லாந்து அணிகளுக்கு இடையே இடம்பெற்ற போட்டியில் நெதர்லாந்து நாட்டின் இரசிகர் ஒருவர் தனது நாட்டினர் அணியும் வர்ணத்தில் ஆடையை அணிந்து வந்திருந்ததுடன், அதே வர்ணத்தில் உள்ள கரட் கட்டுக்களையும் இரு காதுகளிலும் தொங்கவிட்டு, விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்தினார்.


சுஜி ஜுவல்லரி SUJI JEWELLERY

சுஜி ஜுவல்லரியின் தங்கநகை சேமிப்புத் திட்டம் 2004



தங்கநகை உற்பத்தியில் அனைவர் மனங்களிலும் இடம்பிடித்த சுஜிஜுவல்லரி 2004ம் ஆண்டில் தங்கநகை சேமிப்புத் திட்டம் ஒன்றினையும் உங்களுக்கு அறிமுகப் படுத்துகிறது. எம்முடன் தொடர்புகொண்டு அங்கத்தவர்களாக சேர்ந்து கொள்ளலாம். இந்த தங்கநகை சேமிப்புத் திட்டத்திற்கு ஒவ்வொரு மாதமும் நீங்கள் செலுத்த வேண்டியது 150Sfr மட்டுமே. அதேபோல் ஒவ்வொரு மாதமும் குலுக்கல் முறையில் அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுபவர் 1800Sfr பெறுமதியான நகைகளைப் பெற்றுக்கொள்வதோடு அவர் தொடர்ந்து பணம் செலுத்தத் தேவையில்லை. மாதமொருவர் அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படும் அதேவேளை தொடர்ந்து சந்தாதாரராக இருப்போர் விசேட சலுகைகளோடு வருட இறுதியில் 1800Sfr பெறுமதியான தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம். அதிஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படுவோரின் விபரம் IBC தமிழிலும் மற்றும் ஈழமுரசு பத்திரிகையிலும் வெளியிடப்படும்.

Neuengass - Passage 3, 3011 Bern Telefon 031 311 20 49 / Mobile 079 241 59 02

# புலிகள் முன்வைத்துள்ளது சிறந்த யோசனை

## அதனை ஆராய்ந்து சமாதானத் தீர்வை ஏற்படுத்த அரசு முன்வராமை ஆச்சரியமான விடயம்

**- கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன -**

விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக அலகு தொடர்பான யோசனை அரசு, தமிழர், முஸ்லிம் ஆகிய பிரிவினர்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. இத்தகைய ஒரு சிறந்த யோசனையை ஆராய்ந்து ஒரு நிலையான சமாதானத் தீர்வை காண சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் முன்வராமை ஆச்சரியமானதாகும். இவ்வாறு சமாதானத்தை ஏற்படுத்தாது காலம் தாழ்த்துவது மீண்டுமொரு யுத்தத்துக்கே நாட்டை இட்டுச் செல்லும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை என்று கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

போருக்கெதிரான தேசிய முன்னணியின் ஏற்பாட்டில் மாவட்ட ரீதியான முதலாவது கருத்தரங்கு `மக்கள் சமாதான அரங்கு' எனும் தலைப்பில் கண்டி நவசுரச மண்டபத்தில் நடைபெற்றது. இவ்வைபவத்தில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன இவ்வாறு தெரிவித்தார். கலாநிதி குமார் ரூபசிங்க, பேராதனை பல்கலைக்கழகச் சமூக விஞ்ஞானவியல் விரிவுரையாளர் விஜித நாணயக்கார ஆகியோரும் அதிதிகளாகக் கலந்து கொண்டு உரையாற்றினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், இவ்வாறு மிகவும் கீழ்த்தரமாக நாடாளுமன்றில் நடந்து கொள்ளும் மக்கள் பிரதிநிதிகள் எவ்வாறு நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தப் போகின்றார்கள். நாட்டின் தலைவி சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதானம் பற்றிக் கருத்து தெரிவிக்கையில், அவரது அமைச்சர்கள் வெளியில் பிளவுபட்டு பல்வேறு சமாதானத்துக்கு முரணான கருத்துகளை வெளியிடுவது வேடிக்கையானது. விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக அலகு தொடர்பான யோசனை அரசு, தமிழர், முஸ்லிம் ஆகிய பிரிவினர்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. தனிநாடு கோரியவர்கள் இன்று அரசு மற்றும் முஸ்லிம் தரப்பினருடன் இணைந்து இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்த முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதும், வரவேற்கக்கூடியதுமாகும்.

இந்த யோசனையில் சிவில் சேவை, காணிப் பகிர்வு, நிதி நிர்வாகம், வரி போன்ற விடயங்கள் இடைக்கால நிர்வாக அலகிற்குள் உள்ளடக்கப்பட வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது. இவ்வதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு இன்று வழங்கப்பட வேண்டிய முக்கிய விடயங்களாகும். அத்தகைய ஒரு சிறந்த யோசனையை ஆராய்ந்து ஒரு நிலையான சமாதானத் தீர்வைக்காண சனாதிபதி சந்திரிகாவின் அரசாங்கம் முன்வராமை ஆச்சரியமானதாகும். சமாதானத்தை ஏற்படுத்தாது காலம் தாழ்த்துவது மீண்டுமொரு பயங்கர யுத்தத்திற்கே நாட்டை இட்டுச் செல்லும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை, என்றார்.

# புறாவின் மரணத்துக்குப் பின்னால் சதி முயற்சிகள் இல்லை

(27.06.04)

சிறீலங்கா பிரதி பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவினால் பறக்கவிடப்பட்ட சமாதானப் புறாவின் மரணத்துக்குப் பின்னால் எதுவிதச் சதிமுயற்சிகளும் இல்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறீலங்காவின் குக்குளுகங்கை படைமுகாமில் அண்மையில் ஆரம்பமான பல்லின படைப்பயிற்சி ஆரம்ப நிகழ்வின் போது, சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவினால் பறக்கவிடப்பட்ட சமாதானப் புறா கழுத்து முறிந்த நிலையில் இறந்து நிலத்தில் வீழந்தது. சதி முயற்சி காரணமாகவே இச்சம்பவம் இடம்பெற்றிருக்கலாமெனச் சந்தேகம் தெரிவிக்கப்பட்டதையடுத்து, இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட 3 பேர் கொண்ட விசாரணைக்குழு அதிக வெப்பத்தைத் தாங்கமுடியாமலே புறா இறந்ததாகத் தெரிவித்துள்ளது. இப்புறா ரட்ணசிறி விக்கிரமநாயக்கவிடம் கையளிக்கப்படுவதற்கு முன்னர் சுமார் 50 நிமிடங்கள் வரை படைச்சிப்பாய் ஒருவரின்



கைகளிலேயே அது இருந்ததாகவும், இதன் காரணமாக, அதிக வெப்பத்தைத் தாங்க முடியாமல் அது இறந்திருக்க வேண்டுமெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். ரட்ணசிறி விக்கிரமநாயக்காவின் இச்செய்தியைச் சர்வதேச இணையத்தளம் ஒன்று தனது நகைச்சுவைச் செய்திப் பகுதியில் பிரசுரிப்பது குறிப்பிடத்தக்கது.


**LA CHAPELLE**

**இறைச்சிக் கடை**

சுவையான, சுத்தமான, தரமான ஆடு, மாடு, உயிர் கோழி மற்றும் கோழிக் கால்களுடன் அனைத்து வகையான இறைச்சி வகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்

34 Rue Philippe Girard
Paris 75010, M° : La chapelle
Tel : 01 42 05 00 95

**அதிசயம் ஆனால் உண்மை**

உங்கள் அனைத்துக் கொண்டாட்டங்களுக்கும் தேவையான பேப்பர் பிளேட்ஸ், கப், மேசை விரிப்பு, கரண்டி, பாயாசக்கப், கை துடைக்கும் பேப்பர் மற்றும் உங்களுக்குத் தேவையானவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

விமல் விநியோக நிலையம்

**VIMAL DISTRIBUTION**

1 Bis , Rue Chemain Vert
93800 Epiny Sur Saine
Port 0616812200 Ou 0666795689
Tel.et Fax - 01 42 35 24 98

குறிப்பு - மிகுதிப் பொருட்கள் திரும்பப் பெறப்படும்.

**Asha Video Movies**

உங்கள் இல்லத்தின் திருமணம், பூப்புனித நீராட்டுவிழா பிறந்தநாள் மற்றும் அனைத்து மங்கலகரமான நிகழ்வுகளைச் சிறந்த முறையில் (Digital - DV Camera) மூலம் வீடியோவில் படம் பிடித்து, நவீன முறையில் கணினி (Computer) மூலம் பதிவுசெய்து தருகின்றோம். அத்துடன் புகைப்படமும் எடுத்துக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 01 48593429 / 0615737073

Pub-Fr-39


**தேசிய ஊடகக்கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கு ஆரம்பிக்கப்பட்ட நல்வாய்ப்புச் சீட்டிழுப்பு.....**

தேசத்தின் குரலாய், தமிழ்தேசியத்தின் ஆன்மாவாயிருந்து தாயக விடுதலைக்குப் பலம் சேர்க்கும் வகையில் தேசிய ஊடகக்கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கு ஆரம்பிக்கப்பட்ட நல்வாய்ப்புச் சீட்டிழுப்பு.....

**03.07.2004 சனிக்கிழமை**
**ரீ.ரீ.என் கலையகத்தில்..**

நேரடி ஒளிபரப்பில்... உங்கள் முன்னிலையில்... குலுக்கல் முறையில் தெரிவுக்குள்ளாகிறது. தாயக மண்ணை வீரம் விளைந்த நிலத்தைத் தரிசிக்கப் போகும் நல்வாய்ப்புப் பெற்றவர்கள் யார்?
அறியக் காத்திருங்கள்.....அது நீங்களாகக் கூட இருக்கலாம்.


ஈழமுரசு
POOBALAM WEEKLY

"POOBALAM"
JOURNAL TAMOUL HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris, France.

**RCS PARIS**
B 452 164 817 (2004B03079)

**Directeur de la publication:**
A.F. Santiogu

**Redacteur:** K. Jeisanthar

**Impression:**
IMPRIMERIES SAGITTAIRE
157 Boulevard Davout
75020 Paris.
Via - Imprimé chez I.C.T.
Z.A. de l' EPI d'Or, 94800 Villejuif.

நிர்வாகி: அ.பி. சந்தியோகு
ஆசிரியர்: கி.ஜெய்சந்தர்

**தபால் தொடர்புகளுக்கு:**
POOBALAM
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-
Poobalam_murasu@hotmail.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பிரான்ஸ்:
Tel: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16

ஜேர்மனி:
T C C (வெளியீட்டுப் பிரிவு)
POSTFACH 101 613
46016 OBERHAUSEN
GERMANEY
TEL: 0208 205 99 103
FAX: 0208 205 99 104
HAND: 0049 172 28 86 291

சுவிஸ்:
MEDIA HOUSE
POSTFACH 6707, 3001 BERN.
TEL: 031 381 75 72

டென்மார்க்:
**அன்பு**
P.O.Box 65
7400 Herning, Denmark.
Tel: 86336352 - Fax: 65302588

பிரித்தானியா:
பரணி : - Tel: 07958675021
மோகன் : - Tel: 07961582285

இத்தாலி: மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD
Tel: 22425527

நெதர்லாந்து: த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
Tel: 61 3 8802 8368



**குறிப்பு:**
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு. ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.



Restaurant
**Tharsana's**
**தர்ஷனாஸ் உணவகம்**
23, Rue Perdonnet, 75010 Paris
Tél: 01 40 05 08 36- 06 80 02 93 41
M°: La Chapelle *ou* Stalingrad

* இலங்கை, இந்திய உணவுவகைகளை உங்கள் குடும்பத்தோடு வந்து சுவைத்து மகிழ்ந்திடவும்
* உங்கள் இல்லத்தின் இனிய விழாக்களை கொண்டாடி மகிழ்ந்திடவும், அனைத்து உணவு வகைகளையும் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்வதற்கும் லாச்சப்பலில் நீங்கள் நாடவேண்டியது.




**தர்ஷனா & பிரஷா உணவகங்கள்**
இங்கு சாப்பாடுகளை ஓடருக்குப் பெற்றுக் கொள்வதுடன், உங்கள் விழாக்களையும் இங்கு மகிழ்வுடன் கொண்டாடலாம்



Restaurant
**Prassah**
*Gastronomiques Indiennes*
**பிரஷா உணவகம்**
54 Rue Louis Blanc, 75010 Paris
Mo: La Chapelle *ou* Louis Blanc
Tel: 01 53 26 39 41

உங்கள்...
மில்லர் அங்காடியின் 10வது ஆண்டை முன்னிட்டு 04.07.2004 வரை

# மாபெரும் மலிவு விற்பனை




மீன் 7.50 sfr இருந்து

மளிகைப் பொருட்கள்
அனைத்தும் மிக மலிவு விலையில்....
உங்கள் இல்லங்களின் விழாக்களுக்கு
விசேட விலைக் கழிவு
தருகிறோம்

மரக்கறி 3.80 sfr இருந்து

அனைத்துவகை தொலைபேசி அட்டைகளும் சிறப்பு
விலையில் கழிவில் விற்கப்படும்...

**LOTUS, HOME SWEET HOME**

தொலைபேசி அட்டைகள் ~~30~~ - 24

உலகின் எப்பாகத்துக்கும் பணம் அனுப்பித் தரப்படும்
உலகின் எப்பாகத்திலிருந்தும் பணம் எடுத்துத் தரப்படும்.
அனைத்துப் பொருட்களும் அதி விசேட விலைக்கழிவில்

**MOOS STR 11, 6003 LUZERN**
**Tel / 041 210 63 67**




# Restaurant Thamilini
## தமிழினி உணவகம்

party Service -Take away

**திருமண விழாக்கள், நீராட்டு விழா, பிறந்த நாள் என
உங்கள் அனைத்து வைபவங்களுக்கான சைவ-அசைவ
உணவுகள் அறுசுவையுடன் சுவிசின் அனைத்துப்
பாகங்களுக்கும் குறித்த நேரத்தில் செய்துகொடுக்கப்படும்.**

பிரியாணி வகைகள்
சோறுடன் 5 வகை மரக்கறிகள்
கொத்து ரொட்டி, இடியப்பம்,
பிட்டு, தோசை, இட்லி,
றோல்ஸ், வடை, கட்லற்,
லட்டு, மஸ்கற்,
பகோடா, எள்ளுப்பாகு
மசாலாத் தோசை
என அனைத்தும் உங்கள் தமிழினியில்....



Martastrasse 145 (Ecke Amtlerstrasse) 8003 Zurich,
Tel: 01 / 450 84 00

குறிப்பு: 500 சாப்பாட்டிற்கு மேல் ஓடர் தருபவர்க்கு விநியோகம்
இலவசமாகச் செய்யப்படும். விசேட விலைக் கழிவும் வழங்கப்படும்.

sw-72



# Yarl Cash & Carry GmbH

Heimstrasse 5, 3422 Alchenflüh, Tel : 034 445 98 38, Fax: 034 445 98 41




உங்கள் இல்லத்திற்குத் தேவையான
மளிகைப் பொருட்கள், இலங்கை, இந்திய
உடன் மரக்கறி வகைகள், பூஜைப் பொருட்கள்
மற்றும் திருவிழா, விசேட வைபவங்களுக்கும்
தேவையான பொருட்களை மொத்தமாகவும்
சில்லறையாகவும் உத்தரவாதத்துடன்
பெற்றுக்கொள்ளவும்

உங்கள் வைபவங்களுக்குத் தேவையான
தங்க நகைகள், அன்பளிப்புப் பொருட்கள்...



உலகின் அனைத்துப் பாகங்களுக்குமான
துரித பணமாற்றுச் சேவை அனைத்திற்கும்...

**Yarl Cash & Carry**



# ஓம் சாந்தா
## வங்கி கடன்

2004

....நம்பிக்கை....நாணயம்....உத்தரவாதம்....

**சுவிஸில் உங்கள் அவசரப் பணத்தேவையைப் பூர்த்திசெய்ய
இலவசமாக நீங்கள் இருக்கும் மாநிலத்திலேயே
குறைந்த வட்டி Insurans வசதிகளுடன் வங்கிக்கடன்
ஒழுங்கு செய்துதரப்படும்**



கடந்தபல ஆண்டுகளாக இயங்கிவரும் Ohmsantha வங்கிக்கடன் மூலம்
நீங்களும் கடன்வசதி பெற்று உங்கள் பணத்தேவையைப் பூர்த்தி செய்ய
விரும்புகிறீர்களா? எங்களுடன் தொடர்புகொள்ளுங்கள். உங்களுக்குத்
தேவையான அனைத்து ஆலோசனைகளும் அறியத்தரப்படும்.

**Ohm Santha**
Sonnhaldenstr. 8
CH 6122 Menznau
Luzern, Switzerland

ohmsantha@firemail.de

Ohm Santha
Telefon: 041 493 03 83
**Natel: 079 283 51 82**
Fax: 041 493 03 84

ஈழமுரசு ஐரோப்பா
POOBALAM WEEKLY
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"POOBALAM"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16

வீடு வாங்குதல்–விற்றல்–முதலீடு செய்தல்
☒ வீடு வாங்குவோருக்கான 100% கடன் வசதி
☒ SCI ஸ்தாபனத்தின் மூலம் வீடுகள் வாங்கி முதலீடு செய்து கொள்ளுதல்
☒ கட்டப்பட்ட புதிய – பழைய வீடுகள் வாங்குதல்
☒ நிலம் வாங்கி புதிய வீடுகள் கட்டுதல்
முழு அளவிலான இலவச
ஆலோசனைகள் வழங்கப்படும்
தொடர்புகள்: 06 64 73 49 82

# உதவி வழங்கும் நாடுகள் கைவிரிப்பு

# ரூபாவின் பெறுமதி வரலாறு காணாத வீழ்ச்சி.

## அரசாங்க செலவுக்குப் பொது நிறுவனங்களிடம் இருந்து பணம் சேகரிப்பு

(27.06.04)

சர்வதேச நாடுகளிடமிருந்து கிடைக்கவிருந்த 4.5 பில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடையின் பின்னர், இலங்கை ரூபாவிலும் பங்குச் சந்தையிலும் பூரண வளர்ச்சி உருவாகும் என்று வணிக உலகம் நம்பிக்கை கொண்டிருந்த வேளையில், சனாதிபதி சந்திரிகாவின் முன்னுக்குப் பின் முரணான செயற்பாடுகள், பேச்சுக்களினால், உதவி வழங்கும் நாடுகள் டோக்கியோ மாநாட்டில் உறுதியளித்திருந்த நிதியுதவியைப் பெறுவதில் சிக்கல்கள் எழுந்துள்ளன. சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படாமல் நிதியுதவிகளை வழங்க உதவி வழங்கும் நாடுகள் மறுத்துள்ளன. இதனால் சிறீலங்காவின் எதிர்கால வளர்ச்சியில் சூன்யத் தன்மையும் ஸ்திரமற்ற நிலையும் தோன்றியுள்ளன.

இந்நிலையில் சிறீலங்கா அரசு பெரும் நிதிநெருக்கடிக்குள் சென்றுள்ளதுடன் பங்குச்சந்தையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டு, சிறீலங்கா நாணயத்தின் பெறுமதி முன்னொரு போதும் இல்லாத வகையில் 3.2 வீதத்தால் மிக மோசமான வீழ்ச்சியைக் கண்டுள்ளது. நாணயப் பெறுமதியின் வீழ்ச்சியை எவ்வாறு சீர்செய்வதென்று தெரியாது மத்திய வங்கி குழம்பிப்போயுள்ளதாகச் சிறீலங்கா பங்குச்சந்தை அவதானிகள் கூறியுள்ளார்கள்.

இந்நிலையில், அரசின் செலவீனங்களை ஈடுசெய்வதற்காக சிறீலங்கா அரசாங்கம் 'இலங்கை அபிவிருத்தி பிணை முறி' என்னும் பெயரில் பிணை முறிகளை விநியோகித்துள்ளது. சிறீலங்கா மத்திய வங்கியினால் 250 மில்லியன் அமெரிக்க டொலர்களை திரட்டும் நோக்கில் கடந்த 15ம் திகதி முதல் 18ம் திகதி வரை பிணை முறிகள் விநியோகிக்கப்பட்ட போதிலும் 182.25 மில்லியன் டொலர்களுக்கான கேள்விகளே கிடைத்துள்ளன. இதிலிருந்து 144.75 மில்லியன் டொலர்களுக்கான பிணை முறிகளை ஏற்றுக் கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இரண்டு வருட காலத்திற்கென வழங்கப்பட்டுள்ள இப்பிணை முறியிற்கான வட்டி ஆண்டிற்கு இரண்டு முறை என்ற அடிப்படையில் செலுத்தப்பட வேண்டும். இந்தப் பிணை முறிகள், இலங்கையர் அல்லாதவர்கள், வெளிநாட்டை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட இலங்கையர்கள் மற்றும் வெளிநாடொன்றின் சட்டத்திற்கு அமைய இலங்கைக்கு வெளியே உருவாக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் ஆகியவற்றிற்கே விநியோகிக்கப்பட்டுள்ளன. இதே வேளை, இப்பிணை முறிகள் அமெரிக்கர்களுக்கோ, அமெரிக்காவை வசிப்பிடமாகக் கொண்டவர்களுக்கோ வழங்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பலாலி விமான நிலையத்தை மறுசீரமைக்கும் இந்தியாவின் திட்டம் கைவிடப்பட்டுள்ளது

(27.06.04)

இந்திய நிறுவனத்தின் உதவியுடன் யாழ் பலாலி விமானத்தளத்தை மறுசீரமைப்பது என்ற திட்டத்தினை சிறீலங்கா அரசாங்கம் கைவிட்டுள்ளது. இதனையடுத்து, தற்போது இவ்விமானப் படைத் தளம் உள்நாட்டு நிறுவனமான வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மறுசீரமைக்கப்படவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

பலாலி விமானத் தளத்தை மறுசீரமைப்பதற்கான உரிமையினை ஏற்கனவே பெற்றிருந்த குறிப்பிட்ட இந்திய நிறுவனம், தனது பணிகளை ஆரம்பிப்பது தொடர்பில் தொடர்ந்தும் காலம் தாமதித்து வந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன், விமானத்தள மறுசீரமைப்புக்கான குறிப்பிட்ட இந்திய நிறுவனத்தின் செலவீனம் அதிகமாக இருந்ததன் காரணமாகவே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் சிறீலங்கா விமானப்படைத் தளபதி எயார் மார்சல் டொனால்ட் பெரேரா தெரிவித்துள்ளார்.

இவ்விமானத்தளத்தை மறுசீரமைப்பதற்கு சுமார் 500 மில்லியன் ரூபா செலவாகுமென இந்திய நிறுவனம் தெரிவித்திருந்தாகவும், இதே திட்டத்தினை 280 மில்லியன் ரூபா செலவில் செய்து தருவதாக சிறீலங்காவின் வீதி அபிவிருத்தி அதிகாரசபை தமக்கு ஆலோசனை வழங்கியதாகவும் அவர் கூறியுள்ளார். இதையடுத்தே, பலாலி விமானத்தள மறுசீரமைப்பு பணியில் இந்திய நிறுவனம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

## அட இவருமா..!?

சமாதான நீதிவான் ஒருவர் சட்ட விரோதமாக மதுபானம் விற்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சம்பவம் சிறீலங்காவில் இடம்பெற்றுள்ளது. அகில இலங்கை சமாதான நீதவானும் ஆயுர்வேத வைத்தியருமான மேற்படி நபர் சட்டவிரோதமாக மதுபானம் விற்றார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு, கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டார். அவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதவான் உத்தரவிட்டார். குருநாகல் மொத்துஹெர என்ற பகுதியிலேயே இச்சம்பவம் இடம்பெறறுள்ளது.

## தன்னாட்சி அதிகார சபை குறித்து முதலில் பேச வேண்டுமென்ற விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டில் தவறுகள் ஏதுமில்லை

### அமெரிக்கத் தூதுவர்

(27.06.04)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு குறித்துப் பேசுவதற்கு முன்னர் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்து முதலில் பேசவேண்டுமென்ற விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டில் தவறுகள் ஏதுமில்லையெனச் சிறீலங்காவுக்கான அமெரிக்கத் தூதுவர் தெரிவித்துள்ளார். கொழும்பு தேசியப் பத்திரிகைகளின் ஆசிரியர்களுடனான சந்திப்பு ஒன்றின் போதே அமெரிக்கத் தூதுவர் ஜெவ்ரி லண்ஸ்டன்ட் இதனைக் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் இந்த நிலைப்பாட்டினால் இலங்கையின் சமாதான முயற்சிகள் தடைப்பட்டுள்ளதாக கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமெரிக்கத் தூதுவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இலங்கையின் இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வொன்று ஏற்படுவதற்கு முன்னர், இடைக் காலத் தீர்வொன்று அவசியமென்பதை இச்சந்திப்பில் வலியுறுத்திய அமெரிக்கத் தூதுவர், இத்தகைய ஓர் இடைக்கால தீர்வு தொடர்பாகப் பேசவேண்டும் என்று விடுதலைப் புலிகள் கோருவதில் தவறேதும் இல்லை என்றும் தெரிவித்தார்.

Phone 2000 - Sonia restaurant ஆதரவில் ஆர்.ரி.எம். பிறதெர்ஸ் இன்ரநெஷனல் பெருமையுடன் வழங்கும்
15 வது கலைத்தென்றல்
'கீதம் சங்கீதம்'
'நகைச்சுவை விருந்து'
'பாட்டுக்கு பாட்டு'
கலைஞானிதன் பி.எச். அப்துல் ஹமீட் வழங்கும்
'பாட்டுக்கு பாட்டு'
இலங்கை வானொலி, தொலைக்காட்சி புகழ் பயஸ் - ரட்ணம் கலந்துகொள்ளும்
சுப்பர் சண் இசையில் இலை மறை காய்களாய் இருக்கும் பாடகர்களை
வெளிக்கொண்டுவரும் இனிய நிகழ்ச்சி
பாட்டுக்கு பாட்டு போட்டி நிகழ்ச்சியில் பங்குபற்ற விரும்புவோர்
15.07.2004 இற்கு முன் தொடர்புகொள்ளவும்.
அவதாரனம்
மதி குழுவினரின்
மேலைத்தேய நடனம்
மேலதிக தொடர்புகளுக்கு
Phone 2000 -01 40 05 03 43
Siva: 06 20 21 11 11
Nice Telecom: 01 40 37 63 68
ஸ்ரீ பாரதி அச்சகம்: 01 42 05 46 04
Espace Amorc
199 rue saint martin
75001 Paris
(Mo: Etienne marcel)
08.08. 2004 ஞாயிறு
மாலை 5.00 மணி